TAMIL NADU LEGISLATURE LIBRARY
1 OCT 1971
MADRAS

# தமிழ்நாடு சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1970 செப்டம்பர் 5.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண்கள் 231, 232, 233, 234, 235 ஆகியவை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

### தருவைக்குளம் அரசு உயர்நிலைப்பள்ளிக்குக் கட்டடம்

*236. வினா—திரு. டி. மார்டின் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி அருகில் தருவைக்குளத்திலுள்ள அரசு உயர்நிலைப்பள்ளி வகுப்புகளுக்குப் பள்ளிக் கட்டடம் ஏதேனும் உள்ளதா?

(இ) இல்லையெனில், கட்டடம் எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) பள்ளி நிர்வாகக் குழு வழங்கிய வாடகை இல்லாத கட்டடங்களில் (கொட்டகைகள்) வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

(இ) கிராமத்தார்கள் இரண்டு ஏக்கரா நிலம் வழங்கியிருக்கின்றனர். கட்டட வேலைகள் முடிந்த அளவு விரைவாக துவங்கப்படும்.

### காட்டுமன்னார் கோயில் அரசு உயர்நிலைப் பெண்கள் பள்ளிக் கட்டடம்

*237. வினா—திரு. எஸ். சிவசுப்ரமணியன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலூகா, காட்டுமன்னார்கோயில் அரசாங்க உயர்நிலைப் பெண்கள் பள்ளிக் கட்டடத்தை விஸ்தரிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இந்தப் பள்ளிக்கு இணை மானயத்திட்டத்தின் கீழ் ரூ. 25,000 மதிப்புள்ள ஒரு கூடுதல் கட்டடம் கட்டுவதற்கான கருத்து அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பல் வைத்தியப் படிப்புத் தேர்வுகள்

*238. வினா—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) மருத்துவக் கல்லூரியில் 1967–68, 1968–69-ம் ஆண்டு தேர்வுகளில் பல் வைத்தியப் பயிற்சி பிரிவில் மாணவர்களின் தேர்வு எத்தனை சதவிகிதம்?

(இ) மருத்துவக் கல்லூரியில் பயிலும் மற்ற மாணவர்களின் தேர்வைவிட இவை எத்தனை சதவிகிதம் குறைவு?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :

(அ) பி. டி. எஸ்—

| | ஆண்டு | சதவிகிதம். |
|---|---|---|
| பி. டி. எஸ்— | 1968 ... ... | 47.2 |
| | 1969 ... ... | 57.8 |
| எம். பி. பி. எஸ்— | 1968 ... ... | 48.5 |
| | 1969 ... ... | 46.5 |

(இ) 1968-ம் ஆண்டு பி.டி.எஸ். மாணவர்களின் தேர்வு எம். பி. பி. எஸ். மாணவர்களின் தேர்வைவிட 1.3 சதவிகிதம் குறைவு.

ஆனால், 1969-ம் ஆண்டு எம்.பி.பி.எஸ். மாணவர்களின் தேர்வை விட 11.3 சதவிகிதம் கூடுதலாக உள்ளது.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரித் தேர்வுகளில், நல்ல மார்க் வாங்கின மாணவர்கள்கூடத் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று ஹைக்கோர்ட்டில் ரிட்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றனவே.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்வி, பல் வைத்தியப் பயிற்சிப் பிரிவில் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பது பற்றியது. இத் துணைக் கேள்வி, மூலக் கேள்விக்குத் தொடர்புடையதாக இல்லை.

கேள்வி எண்கள் 190, 191 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

*Fishing harbours*

*239 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Public Works Department has undertaken the construction of the R.C.C. jetty in Rameswaram; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : வேளாண்மைத் துறையின் 30—10—1968 தேதியிட்ட அரசு ஆணை எண் 3219-ல் ரூ. 9.90 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் இராமேஸ்

*1970 செப்டம்பர் 5]*

வரத்தில் மீன் தோணித்துறை ஒன்று கட்ட அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இப்பணி பொதுப்பணித் துறையால் நிறைவேற்றப் பட்டு வருகிறது.

* 240 *Q.*—THIRU K. SAHADEVA KANDER : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether the slipway at Fishing Harbour at Tuticorin is to be constructed now; and

(*b*) the stage at which the matter stands at present?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) கப்பல் கட்டும் துறைச் சாய்தளம் (Slipway) கட்டு வதற்குரிய ஒப்பந்தப்புள்ளிகளை தலைமைப்பொறியாளர் (பொது) பொதுப்பணித்துறை வரவழைத்துள்ளார்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத் திற்கு என்ன செலவாகும் என்று உத்தேசமாக மதிப்பிடப்பட்டிருக் கிறது என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : 6.2 லட்ச ரூபாய்.

திரு. டி. மார்டின் : தலைவர் அவர்களே, இந்த ஃபிஷிங் ஹார்பர் கட்டுவதுபற்றி அங்குள்ள மீனவர்கள் அந்த ஹார்பரைக் கொஞ்சம் தள்ளி வைக்கவேண்டும் என்ற கோரிக்கையை அரசுக்கு அனுப்பி யுள்ளார்களா? ஆம் எனில், அதுபற்றிய பரிசீலனை முடிந்துள்ளதா? எந்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அவர்களது கோரிக்கை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. வேறு இடம் அவர்களுக்குப் பார்த்துக் கொடுத்தும் அவர்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. வேறு இடம் பார்த்துக்கொடுப்பதுபற்றி அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

## பருத்தி சாகுபடியாளர்களுக்கு கடன்

*241. வினா—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தாலூக்காவில் 1969-ம் ஆண்டில் பருத்தி சாகுபடியாளர்களுக்கு உரக்கடன் காலாகாலத்தில் அளிக்கப்பட வில்லை என்பது உண்மையா?

(இ) தாமதத்திற்கு காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) & (இ) 1969–70-ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் கோவில் பட்டியை மையப்பணியிடமாக கொண்டு தீவிர பருத்தி சாகுபடி திட்டத்தைச் செயலாக்க 1969-ஆம் ஆண்டு செப்டம்பர் மாத

இறுதியில் அரசு உத்திரவிட்டது. எனவே இப்புதுத் திட்டம் 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்துதான் செயல்பட்டு வருகின்றது. ஆகையால் பருத்திச் சாகுபடி காலத்திற்கு முன் செய்யப்படவேண்டிய பண்ணை திட்டங்கள் தயாரித்தல், கடன் வழங்க சிபாரிசு செய்தல் முதலியவற்றை முன்கூட்டியே செய்ய இயலவில்லை. இதன் காரண மாகக் கூட்டுறவு சங்கங்களில் இருந்து சில விவசாயிகள் திட்ட ஆரம்பக் கட்டத்தில் கடன்பெறுவதில் தாமதம் ஏற்பட்டிருக்கக் கூடும்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, அந்த விதமான குறைபாடுகள் இனி ஏற்படாமல் இருப்பதற்கான குறிப்புகளை அந்த அந்த அதிகாரிகளுக்குத் தற்போது அரசு அனுப்பியுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : முன்பே அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, அந்தப் பருத்திச் சாகுபடியாளர்களுக்கு அந்தந்த நகரத்தில் உரக் கடன் கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதன் காரணமாக அவர்கள் அதிக விலை கொடுத்து, வேறொரு பக்கம் கடன் வாங்கி, உரம் வாங்கிப் பருத்திச் சாகுபடி செய்யவேண்டிய அவசியம் இருப்பதால் அவர் களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. உரக் கடன்கள் அவர்களுக்குச் சீக்கிரமாக அளிக்க அரசாங்கம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏதாவது உத்தரவு பிறப்பிக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது முதன் முதலாக நாம் ஆரம்பித்த திட்டம். இது கோயில்பட்டியில் ஆரம் பிக்கப்பட்டது. சாதாரணமாக, பருத்தி விதைக்கின்ற காலம் செப்டம்பர்—அக்டோபர் மாதம்தான். நாம் ஒப்பளிப்பு அளித்தது 1969-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில். எனவே, உடனடியாக விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பது ; கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவர்களையெல்லாம் அனுப்பிவைப்பது ஆகிய இப்படிப்பட்ட அடிப் படைப் பணியில் கொஞ்சம் காலதாமதம் ஆயிற்று. ஆனல், இந்த ஆண்டு கிட்டத்தட்ட நான்கு இலட்ச ரூபாய் நாம் கொடுக்க வேண்டும் என்று நிர்ணயித்து தொகை ஒதுக்கி வைத்திருந்ததில், 3 இலட்சத்து 37 ஆயிரம் ரூபாய் அந்தத் திட்டத்தின்மூலம் கடனுக வழங்கப்பட்டிருக்கிறது.

*Price of Sugar*

* 242 *Q.*—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

(*a*) whether the Government is aware of the new Zones fixed by the Union Government for fixing prices of sugar;

(*b*) whether the State Government has been consulted in this regard; and

(*c*) if so, the details thereof?

**The Hon. Thiru P. U. SHANMUGAM** : (*a*) Yes.

**(b) No.**

*1970 செப்டம்பர் 5]*

(c) Till recently, the country was divided into six price Zones viz. Zone I, Zone II, Zone III, Zone IV, Zone V and Assam by the Government of India for fixing the ex-factory price of levy sugar. The States of Tamil Nadu, Pondicherry Andhra Pradesh, Kerala and Mysore were included under Zone II.

The Government of India have with effect from 20th February 1970 divided the country into the following 15 new cost Zones, namely—

1. Punjab.
2. Haryana.
3. Rajasthan.
4. West Uttar Pradesh.
5. Central Uttar Pradesh.
6. East Uttar Pradesh.
7. North Bihar.
8. South Bihar.
9. Gujarat.
10. Madhya Pradesh.
11. Maharashtra.
12. Mysore.
13. Andhra Pradesh.
14. Tamil Nadu and Pondicherry.
15. Orissa, Assam, Kerala and Bengal.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இம்மாதிரிப் பல்வேறு மண்டலங்களாகப் பிரிப்பதால், தமிழ் நாட்டில் உற்பத்தி யாகும் சர்க்கரைக்கு அதிக விலை கிடைக்குமா? தமிழ் நாட்டில் இருக்கும் சர்க்கரை ஆலைகளைத் தேசவுடைமையாக்க வேண்டும் என்ற குறிப்பினை இந்த அரசு மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறதா? ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் சர்க்கரையின் விலை கூடுதலாக ஆகியிருக்கிறது என்பது உண்மை. தேசியமயமாக்குவதுபற்றி மத்திய அரசு நம்மைக் கேட்க வில்லை. நாமும் அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை.

Dr. H. V. HANDE : Sir, may I know whether it is not a fact that during the last few months there is no difference in the price of levy sugar lifted by the Government and the open market sugar? Also, whether in view of the fact that there is sufficient stock of sugar in all godowns and there is actually glut in the sugar market, will this Government come forward to recommend to the Central Government that the control on sugar can be removed completely? Are the Government prepared to make a beginning in regard to this matter at least in our State?

The Hon. Thiru P. U. SHANMUGAM : We have already recommended to the Central Government to decontrol sugar.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, பாக்டரி சொந்தக்காரர்கள் கரும்புக்கு இன்ன விலைதான் கொடுக்கவேண்டும் என்று மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலையைத் தமிழ்நாட்டு மில்காரர்கள் கொடுக்கிறார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இது வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களுக்குப் போடப்பட வேண்டிய கேள்வி.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலைகளைத் தேசியமயமாக்கவேண்டும் என்ற எண்ணம் உத்தரப் பிரதேசத்தில் வெளிப்பட்டது. இந்த மாநிலத்திலும் சர்க்கரை ஆலைகளைத் தேசியமயமாக்கும் ஆலோசனை ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, 'இல்லை' என்று ஏற்கனவே சொன்னேன்.

திரு. கே. விநாயகம் : சார், நமது தமிழ்நாட்டைச் சுற்றிலும் இருக்கும் மற்ற மாநிலங்களோடு சேர்த்து ஒரு ஸோனை வைத்ததன் விளைவாக நமது தமிழ் நாட்டிலே சர்க்கரை உற்பத்தி அதிகமாக இருந்தும்கூட, இதனை மத்திய சர்க்கார் மற்ற மாநிலங்களுக்கும் தரவேண்டும் என்று சொன்னதன் விளைவாகத்தான், தமிழ் நாட்டில் விலை அதிகமாக ஏறுகிறது என்று சொல்லப்படுகிற கருத்து உண்மை தானா? அப்படியிருந்தால், நமக்குப் போதிய அளவு உற்பத்தி அதிகமாக இருப்பதன் காரணமாக, நமது மாநிலத்திற்குத் தேவை யானதை ஒதுக்கிவிட்டுத்தான், அதற்கு மேலே இருக்கும் எக்ஸெஸ் ப்ரொடக்ஷனை மற்ற மாநிலங்களுக்குத் தரமுடியும் என்று நம்முடைய தமிழ்நாடு சர்க்கார் ஒரு 'ஸ்டாண்டு' எடுத்து, வாதாடி, போராடி, அந்த நிலைமையை உண்டாக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கிற பிரச்சினை, தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் சர்க்கரையை எப்படி விற்பது என்பதுதான். தமிழ்நாட்டில் சர்க்கரை இல்லாமற்போய்விட்டது என்பது அல்ல பிரச்சினை. தமிழ்நாட்டில் ஏராளமாக சர்க்கரை இருக்கிறது. ஆந்திராவும் தனி மண்டலமாகிவிட்டது. கேரளாவும் தனி மண்டலமாகிவிட்டது. மைசூரும் தனி மண்டலமாகிவிட்டது. தமிழ்நாட்டையும் தனி மண்டலமாகப் பிரித்துவிட்டார்கள். ஏற்கெனவே, தென் மண்டல மாக இருந்தபோது ஒரே விலையாக இருந்தது. இப்பொழுது விலை மாற்றத்தின் காரணமாக—என்னுடைய நினைவு சரியாக இருக்கு மானால்—ஆந்திராவில் சர்க்கரை விலை நம்மைவிடப் பத்து ரூபாய் குறைவாக இருக்கிறது என்று நினைக்கிறேன். ஆந்திராவைவிட நமக்கு விலை அதிகமாக இருக்கிறது. அதனால் ஆந்திராவிலிருந்து சர்க்கரை இங்கு வர வாய்ப்பு இருக்கிறது. தமிழ்நாட்டில் சர்க்கரைப் பற்றுக்குறையே கிடையாது.

திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, இம்மாதிரியாக மண்டலங்களாக மத்திய சர்க்கார் பிரிக்கின்ற காலத்தில் மாநில அரசாங்கத்தைக் கலக்க வேண்டும் என்ற ஒரு விதி இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அந்த விதி மீறப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

1970 செப்டம்பர் 5]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படியொன்றும் விதி இருப்பதாகத் தெரியவில்லை. டாரிஃப் கமிஷனுடைய சிபார்சுகளின் பேரில்தான் இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : தலைவர் அவர்களே, நமது தமிழகத்தில் சர்க்கரை அதிகமாக உற்பத்தியாகிறது. சர்க்கரை இருப்பு அதிகமாகவும் இருக்கிறது. அந்த நிலைமையில் இருக்கக் கூடிய சர்க்கரையை மலிவான விலையில் மக்களுக்கு விநியோகிக்க, விலையைக் குறைத்து அரசாங்கம் நிர்ணயம் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, சர்க்கரை உற்பத்திச் செலவு குறையவில்லை. சர்க்கரைக்காக நிர்ணயிக்கப் பட்டிருக்கிற வேஜ் போர்டு சம்பளத்தைவிட அதிகமாக ஊதியம் கேட்கிறார்கள். அதற்கு மேல் தமிழ்நாட்டில் கொடுக்க முடியவில்லை. விலை குறையாததற்குக் காரணம் உற்பத்தி விலை குறையவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : What is the quantity of sugar that we require for our State? How much quantity of sugar is available here?

THE HON. THIRU P. U. SHANMUGAM : I want notice please.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் எவ்வளவு சர்க்கரை உற்பத்தியாகிறது? பிற மாநிலங் களில் எவ்வளவு உற்பத்தியாகிறது? பற்றாக்குறையுள்ள மாநிலங் களுக்கு நம்முடைய மாநிலத்திலிருந்து சர்க்கரையை அனுப்புவதற்கு மத்திய அரசிடம் நாம் ஏற்கனவே பேச்சு வார்த்தைகள் ஏதாவது நடத்தியிருக்கிறோமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்த மாநிலத்தில் எவ்வளவு உற்பத்தியாகிறது என்பதுபற்றித் தனிக்கேள்வி போட்டால், விவரம் சேகரித்துப் பதில் சொல்லலாம். பற்றாக்குறை மாநிலங்களுக்கு நமது மாநிலத்திலிருந்து சர்க்கரை விற்பதற்கு மத்திய சர்க்கார் ஆணை பிறப்பிக்க வேண்டும், ஓபன் மார்க்கெட் ஷுகரை எங்கு வேண்டுமானாலும் விற்கலாம். ஆனால் நம் மாநிலத்தில் விலை அதிகமாக இருப்பதால், வெளி மாநிலங்களுக்கு சர்க்கரை போவதற்கு வழி குறைந்து இருக்கிறது.

திரு. ஆர். கருப்பையா : சிங்கப்பூர், சிலோன் ஆகிய நாடுகளில் சர்க்கரை பற்றாக்குறை இருப்பதினால், நமது மாநிலத்திலிருந்து சர்க்கரை வாங்கிக் கொள்வதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்று பேப்பரில் செய்தி வந்திருக்கிறது. அதைப்பற்றி நமது சர்க்கார் மத்திய சர்க்காரிடம் சிபார்சு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது பார்லிமெண்டில் போட வேண்டிய கேள்வி.

ஸ்டெயின்லஸ் ஸ்டீல்

*243. வினா—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிற்கு ஆண்டொன்றுக்கு எவ்வளவு டன் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் தகடுகள் (Stainless Steel sheets) கொடுக்கப்படுகின்றது?

(இ) தமிழகத்தின் தேவை எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தமிழ்நாட்டிற்கு ஆண்டு ஒன்றுக்கு இவ்வளவு டன் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் தகடுகள் என்று ஒதுக்கப்படுவதில்லை.

(இ) தமிழகத்தின் மொத்தத் தேவை ஆண்டொன்றுக்கு 51,800 மெட்ரிக் டன்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கேள்வியையும் எடுத்து கொள்ளலாம்.

*244 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆர்க்காடு மாவட்டம், காட்பாடியில் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் தொழிற்சாலை எப்போது ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மதராஸ் ஸ்டெயின்லஸ் ஸ்டீல்ஸ் லிமிடெட் கம்பெனிக்கு 1963-ம் ஆண்டில் 7,000 டன் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் தகடுகள் செய்ய உரிமம் வழங்கப்பட்டது. உரிமம் நீடித்தம் சம்பந்தமாக இந்திய அரசுக்குச் சிபாரிசு செய்து எழுதியுள்ளோம். இந்திய அரசு மேற்படி நிறுவனத்தில் தொழில் நுட்பம், பொருளாதாரம் ஆகிய தன்மைகளைப்பற்றிய குறிப்புகளைக் கேட்டிருக்கிறது. இது சம்பந்தமாக திரு. தஸ்டூர் கம்பெனியிடம் தற்போதுள்ள நிலைமையைக்கொண்டு மேற்படி நிறுவனத்தின் தொழிற் நுட்பம் பொருளாதாரம் ஆகிய தன்மைகளை ஆய்ந்து "மறு மதிப்பீடு" அறிக்கை ஒன்றைத் தயாரிக்குமாறு கேட்டுள்ளோம். இவ்வறிக்கையைப் பெற்றவுடன் அதைப் பரிசீலனை செய்த பின் மீண்டும் இந்திய அரசுக்கு எழுதலாம்.

திரு. ஏ. எம். இராஜா : தமிழ் நாட்டில் போதிய அளவுக்கு ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் தகடுகள் கிடைக்கவில்லை என்று ஸ்டெயின்லஸ் ஸ்டீல் சாமான்களைத் தயாரிக்கும் தொழிலதிபர்கள் புகார் செய்திருக்கிறார்களா? நம்முடைய தமிழ் நாட்டிற்குத் தேவையான அளவுக்கு மத்திய அரசிடமிருந்து ஸ்டெயின்லஸ் ஸ்டீல் தகடுகள் பெற்றுத் தருவதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது?

*1970 செப்டம்பர் 5]*

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த ஸ்டெயின்லஸ் ஸ்டீல் உபயோகத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பது மத்திய சர்க்காரினுடைய கொள்கை. இந்தக் கொள்கையின் அடிப்படையிலே இன்னென்ன பொருள்கள்தான் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் தகடுகள் மூலம் உற்பத்தி செய்வதற்கு அனுமதி வழங்கவேண்டும். வேறு தொழில்களுக்கு அனுமதி வழங்கக்கூடாது என்று மத்திய சர்க்கார் ஆணை பிறப்பித்திருக்கிறது. அப்படி குறிப்பிட்ட தொழில்களுக்கு மட்டும் நாம் சிபார்சு செய்கிறோம். இதைப் பின்பற்றுகின்ற முறையில் அவர்கள் குறிப்பிடுகின்ற தொழில்களுக்கு அனுமதி வேண்டும் என்று கேட்பார்கள். அதற்கு ஈ.ஸி. எஸென்ஷியாலிடி சர்டிபிகேட்ஸ் என்ற முறையில் நாம் கொடுக்கிறோம். நாம் கொடுத்ததற்குப் பின்னால் மத்திய அரசின் இலாகாவிற்குச் சென்று, அவர்கள் அனுமதி வழங்குகிறார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தமிழ் நாட்டில் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் தகடுகள் பெறுகிற மொத்த வியாபாரிகளில் முதல் ஐந்து பேர்களைச் சொல்ல முடியுமா? இப்படித் தகடுகளை வாங்கிக் கொண்டு சாமான்களைச் செய்யாமல் அப்படியே விற்றுவிடுகிறார்களே, அவர்களைக் கண்காணிப்பதற்கு அரசு என்ன ஏற்பாடு செய்திருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தத் தகடுகளைப் பொறுத்தவர்கள் இன்னென்ன பொருள்களைச் செய்யவேண்டும் என்று அதில் குறிப்பிடப்படுகிறது. அவைகளைச் செய்கிறார்களா, இல்லையா என்பதை நம்முடைய அரசு கண்காணிக்கின்றது. அப்படிச் செய்யாமல் மொத்தமாக தகடுகள் விற்பவர்களுடைய அனுமதியை நாம் ரத்து செய்து, அவர்கள்மீது வழக்குப் போடுவதற்கு நமக்கு அதிகாரம் இருக்கிறது. இது அப்போதைக்கப்போது கண்காணிக்கப்படுகிறது. முறைப்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. டி. மார்டின் : அமைச்சர் அவர்கள் பதில் கூறியபொழுது எஸென்ஷியாலிடி சர்டிபிகேட்கள் கொடுக்கப்படுகின்றன என்று கூறினார்கள். இந்த சர்டிபிகேட்கள் என்ன அடிப்படையில் கொடுக்கப்படுகின்றன? தற்சமயம் ஸ்டென்லஸ் ஸ்டீல் சாமான்களின் விலை அதிகமாக உயர்ந்திருக்கிறது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியானால் அதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முன்னாலேயே விளக்கினேன். இது மத்திய அரசாங்கத்தின் கொள்கை. அவர்கள் குறிப்பிட்ட சில பொருள்களைத் தவிர வேறு எந்தப் பொருள்களைச் செய்வதற்கும், உதாரணமாக ஹாஸ்பிடல் வேர்ஸ், யுடென்ஸில்ஸ், பாத்திரங்கள் செய்வதற்கு புதியதாக எந்த அனுமதியையும் கொடுக்கக்கூடாது, 20—1—1969-க்குப் பின்னாலே என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இதற்கு முன்னாலே நாம் 1968–69-ம் ஆண்டில் கொடுத்திருக்கக்கூடிய ஈ.ஸி. எஸென்ஷியாலிடி சர்டிபிகேட்சின் மதிப்பு ரூ. 2,33,93,200. கிட்டத்தட்ட 39,000 மெட்ரிக் டன் நம்முடைய புதிய தொழிற்சாலைகளுக்குத் தேவை. நாம் ஈ.ஸி. கொடுத்திருக்கிறோம் மத்திய அரசின் ரெட் புக் பாலிஸிபடி. இதையெல்லாம் ஏற்றுக்கொள்வதற்கு சம்மதிப்பதற்கு மறுத்து விடுகிறார்கள்.

*Shifting of High Court to Kancheepuram*

* 245 *Q.*—THIRU K. SAHADEVA KANDER, THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to shift the High Court to Kancheepuram; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்தை காஞ்சிபுரத்திற்கு மாற்ற வேண்டும் என்று சொன்னதற்குக் காரணம், தற்பொழுது உயர்நீதி மன்றம் ஜன நெருக்கமுள்ள, சந்தடியுள்ள இடத்தில் இருக்கிறது. அம்மாதிரியான சூழ்நிலையில் இல்லாமல் சென்னைக்கு வெளியே உயர்நீதி மன்றம் அமைக்கப்பட்டால், நீதிபதிகள் நல்ல முறையில் அமைதியான சூழ்நிலையில் செயல்பட துணையாக இருக்கும் என்றுதான் இந்தக் கேள்வி போட்டேன். இப்பொழுதில்லை என்றாலும், இனியாவது இது குறித்து பரிசிலனை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கனம் அங்கத்தினர் காஞ்சியை நோக்கிச் செல்வதிலே மகிழ்ச்சி.

திரு. என். வரதராஜன் . பல மாநிலங்களில் உயர்நீதி மன்றங்களில் ஒரு சில பிரிவுகளை வேறு சில மாவட்டங்களில் தலைநகரங்களிலே வைத்திருக்கிறார்கள். அதுபோல தென் மாவட்டங்களின் தலைநகரமாகிய மதுரை நகரத்தில் உயர்நீதி மன்றத்தின் ஒரு பிரிவை வைப்பதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது நல்ல கொள்கை. அரசாங்கத்தின் சார்பிலே நாம் உயர்நீதி மன்றத்தினிடம் அடிக்கடி இந்தக் கருத்தை எடுத்துச் சொல்லி வந்திருக்கிறோம். மற்ற மாநிலங்களில் இருப்பதைப்போல் ஒரு பிரிவு மற்ற மாவட்டங்களின் தலைநகரங்களில் இல்லாவிட்டாலும், காம்ப் கோர்ட்டு என்ற முறையில், ரிட் ஜூரிஸ்டிக்ஷன் இருக்கிறது. கிரிமினல் அப்பீல் இருக்கிறது, அதைப் போலவே சிவில் அப்பீல் இருக்கிறது. மிஸலேனியஸ் அப்பீல் இருக்கிறது. இது போன்ற வழக்குகளை விசாரிக்கக்கூடிய நீதிபதிகள் தனியாக அங்கே இருக்கிறார்கள் உயர்நீதிமன்றத்தில், அப்படிப்பட்ட வழக்குகள் வருகிறபொழுது, தென் மாவட்டங்களை பொறுத்த அளவுக்கு அந்த வழக்குகளையெல்லாம் ஒரு நாள், இரண்டு நாள் அல்லது ஒரு வாரம் மதுரை நகரத்தில் விசாரிப்பதற்கு ஏற்பாடு செய்தால், தென் மாவட்டங்களிலுள்ள மக்களுக்கு வசதியாக இருக்கும் என்ற ஒரு கருத்தை உயர்நீதி மன்றம் ஏற்றுக் கொள்ளும் என்ற நம்பிக்கையில் வற்புறுத்தி வருகிறோம்.

திரு. கே. விநாயகம் : செங்கை மாவட்டத் தலைநகரத்தை ஏற்கனவே இருந்த இடத்தை விட்டு இப்பொழுது காஞ்சிபுரத்திற்கு மாற்றியதின் விளைவாக, இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு

செங்கற்பட்டு டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டையும் அது மாதிரி மாற்றி விடுவார்களோ என்று ஒரு பயம் ஏற்பட்டிருக்கிறது. அதை மாற்றுமல் .........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது உயர் நீதி மன்றத்தை மாற்றுவது பற்றிய கேள்வி.

திரு. கே. விநயகம்: அதோடு தொடர்புடையதுதான். அதை மாற்றுமல் இப்பொழுதிருக்கின்ற ஸ்டேடஸ் கோ, அதாவது அப்படியே செங்கற்பட்டில் இருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை இந்த அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கனம் அங்கத்தினர் செங்கற்பட்டில் ப்ராக்டீஸ் செய்யவில்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அவர்களை நிச்சயம் பாதிக்காது. எல்லா கட்சியினரும் சேர்ந்து எடுத்த முடிவின்படி நீதிமன்றங்கள் செங்கற்பட்டில் தொடர்ந்து இருக்க வேண்டும். தலைநகரம் காஞ்சிபுரத்தில் இருக்க வேண்டும் என்பதுதான். ஆகவே, இப்போதைக்கு அதை மாற்றப் போவதில்லை. நீதி மன்றங்களை மாற்றுவது பற்றி நாமாகவே முடிவு எடுக்காமல், மக்களுடைய வசதிகளுக்கு ஏற்றவாறு; பரந்த அளவிலே இருக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய அரசாங்கத்தின் நோக்கம். இதுபற்றி முடிவு செய்ய ஒரு மாவட்ட நீதிபதி, ஒரு ஐ.ஏ.எஸ். அலுவலர் கொண்ட குழு ஒன்றை அமைத்து, நீதி மன்றங்களின் முறை, நீதிமன்றங்களின் நிர்வாக அளவு, ஜூரிஸ்டிக்ஷன் இருக்கிற முறை, அதாவது ரீ-அலேன்மெண்டு, டிஸ்ட்ரிபியூஷன் ஆஃப் கோர்ட்ஸ் இரண்டையும் பரிசீலித்து சிபார்சு செய்ய வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறோம். அந்த சிபார்சுகள் வந்தவுடன்தான் மாற்றுவது பற்றி பரிசீலனை செய்யப்படும். புதியதாக நீதி மன்றங்களைத் திறக்கும்பொழுது மக்களுடைய வசதிகளைக் கருத்தில் கொண்டு திறக்கிறோம். இருக்கின்ற நீதிமன்றங்களை இப்போதைக்கு மாற்றுவது கிடையாது என்ற கொள்கையை நம்முடைய அரசு எடுத்திருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: சார், நமது அரசாங்கத்தின் பரிந்துரைமீது, உயர்நீதி மன்றம் ஏதாவது கருத்துத் தெரிவித்திருக்கிறதா? கருத்து தெரிவித்திருந்தால், அது என்ன நிலையில் இப்பொழுது இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைமை நீதிபதியோடு அடிக்கடி பேசி வருகிறோம். அவர்கள் பல சங்கடங்கள் இருப்பதைச் சொல்லுகிறார்கள். கட்டடங்கள் இல்லை. என்கிறார்கள். இப்பொழுது கட்டடம் வந்திருக்கின்றன. பிறகு நூலக வாய்ப்பு இங்கிருப்பது போல் இல்லை என்கிறார்கள். அதோடு இங்கே சிறந்த—மதுரை வழக்கறிஞர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது—வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். இப்படி ஒரு வாதத்தை அவர்கள் வைக்கிறார்கள். இதெல்லாம் காலப்போக்கில் மன மாற்றம் ஏற்படும் என்கிற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. தென் மாவட்டங்களுக்கு, ஒரு காம்ப் கோர்ட்டாவது இருக்க வேண்டும்; ஒரு சாதாரண கிரிமினல் அப்பீல், பெயில் போன்றவற்றிற்குக் கூட பல

மைல்கள் சென்னைக்கு வரவேண்டிய நிலைமை நம் நாட்டு மக்களுக்கு இருக்கிறது. நாங்கள் இது தவிர்க்கப்பட வேண்டும் என்கிறோம். ஆனால் எதிர்க்கட்சிகளும் இது பற்றி உற்சாகத்தோடு பேசினால், நிச்சயம் அதுவரும் ஆனால் அப்படி அவர்கள் பேசியதாக நான் கேள்விப்படவில்லை.

*Temporary Courts for Tindivanam*

* 246 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether temporary Civil Courts are being set up in Tindivanam from November, December 1969 ; and

(*b*) the reasons therefor?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.*

*(இ) திண்டிவனத்திலுள்ள மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் முடிவுபெறாத வழக்குகள் அதிகமாக இருந்ததனால் கூடுதலாக தற்காலிக மாவட்ட முன்சீப் நீதிமன்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு ஏற்பளிப்பு வழங்கப்பட்டது. கூடுதலான இம்மாவட்ட முன்சீப் நீதிமன்றம் 1969, டிசம்பர் திங்கள் 22 ஆம் நாளிலிருந்து செயலாற்றத் தொடங்கியது.*

*காஞ்சீபுரம், வட ஆர்க்காடு, சாரம் கூட்டுறவு நூற்பாலைகள்*

**247 வினா—திரு. கொளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

*தமிழகத்திலுள்ள (1) காஞ்சீபுரம், (2) வட ஆர்க்காடு, (3) சாரம் கூட்டுறவு நூற்பு ஆலைகளில் ஏற்படும் நஷ்டத்தை தவிர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*

*மாண்புமிகு திரு. செ. மாதவன் : வட ஆர்க்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலையில் ஏற்பட்ட நஷ்டம், கணக்கில் ஏற்பட்ட நஷ்டமாகும். இந்த ஆலையின் நெருக்கடி நிதி, அதன் நஷ்டத்தை விட அதிகமாகும். இந்த ஆலைகளில் நஷ்டத்தைத் தவிர்க்க, உற்பத்தியைப் பெருக்கவும், பஞ்சு கொள்முதலில் கவனத்தை அனுசரிக்கவும், தொழிலாளர்களிடமிருந்து அதிகப்படியான ஒத்துழைப்பைப் பெறவும், முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.*

*திரு. கே. வினயகம் : சார், வட ஆர்க்காட்டில் ஏற்பட்டிருக்கிற நஷ்டம் கணக்கில் ஏற்பட்டது என்று சொன்னர்களே, ஸ்பின்னிங் மில்லை இது பாதிக்காதா? Is it accounting deficiency? தென் ஆர்க்காட்டில் ஏற்பட்டிருக்கிற நஷ்டம் இருக்கிறது. நாம் நடத்தும் தொழில்களில் நஷ்டம் கணக்குப் பார்த்த பிறகு தெரிகிறது. தனியார்களிடம் விடுவதனல், இப்படி நஷ்டம் ஏற்படாது, அதற்கு அவர்களுடைய திறமைதான் காரணம் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?*

1970 செப்டம்பர் 5]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தனியாருக்காக வாதாடுவது வேடிக்கையாக இருக்கிறது. நம் துறை நல்ல முறையில் நடக்க வேண்டும் என்று சொன்னால், மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். தனியார் துறையில் நஷ்டம் ஏற்பட வில்லையா? ஸ்டாண்டர்ட் மோட்டார் மூடிக்கிடக்கிறது. இன்னும் எத்தனையோ நிறுவனங்கள் தனியார் துறையிலும் நஷ்டத்தில் இருக்கின்றன. 27 நூற்பாலைகள் மூடிக்கிடக்கின்றன. தனியார் துறையில் நஷ்டமே இல்லை என்பதும் சரியில்லை. நம் துறையில், கூட்டுறவுத் துறையைப் பொறுத்த வரையில் அதில் ஈடுபட்டிருக்கிற பொது மக்கள் பிரதிநிதிகள் தனி ஆர்வம் காட்ட வேண்டும். அரசு அலுவலர்களையே நம்பும் சூழ்நிலைதான் இருக்கிறது. அதை மாற்ற வேண்டும். அப்பொழுது நல்ல முறையில் நடக்கும். இந்த இரண்டு ஆலைகளைப் பொறுத்தவரையில், காஞ்சீபுரத்தில் 31—3—1970 கணக்குப்படி,

| | |
|---|---|
| Accumulated net loss | 28.18 லட்சம். |
| Accumulated reserves | 26.38 லட்சம். |

ஆகவேதான் மார்ஜினலாக 1.8 லட்சம் நஷ்டம் என்று சொன்னேன். சாரம் கூட்டுறவு ஆலையில்

| | |
|---|---|
| Accumulated net loss | 30.07 லட்சம். |
| Net reserves | 28.72 லட்சம். |
| Net loss | 1.35 லட்சம். |

திரு. எம். சுரேந்திரன்: சார், கூட்டுறவுத் துறையில் நாம் நடத்தும் தொழிற்சாலைகள் நஷ்டத்தில் ஓடுவதாகத்தான் கணக்கு வருகிறது. காரணம் கூட்டுறவுத் துறையில் நிர்வாகத்தில் சிக்கலும், சட்டங்களில் சிக்கலும் இருக்கின்றன என்று சொல்லுகிறார்களே. அது உண்மையா? அதை மாற்றியமைத்து, நஷ்டம் இல்லாமல், தனிப்பட்டவர்கள் தொழில்களைப் போல், அவர்கள் சுதந்தரமாக இயங்கும் வாய்ப்பையும் வசதியையும் அமைத்துக் கொடுப்பார்களா என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எல்லாம் நஷ்டம் என்று சொல்லியதாகத் தெரியவில்லை. கணக்குப்படி, 31—3—1970-ம் தேதி முடிய, தென்னார்க்காட்டில் பிராபிட் எர்ன்ட் ரூ. 12 லட்சம். ஸ்ரீவில்லிபுத்தூர், இராமநாதபுரம் ஜில்லாவில் 4 லட்சம் நஷ்டம். திருச்செந்தூரில் லாபம் 3.17 லட்சம். சேலம் கூட்டுறவு ஆலையில் 3.62 லட்சம் லாபம். மதுரையில் 3.68 லட்சம் லாபம். கோயம்புத்தூரில் 75,000, திருச்சியில் 3.77 லட்சம், இவையெல்லாம் லாபம். கன்னியாகுமரியில் 1.8 லட்சம் நஷ்டம். வடார்க்காட்டில் 7.27 லட்சம் லாபம். தஞ்சாவூரில் 2.16 லட்சம் லாபம். ஆக லாபமும், நஷ்டமும் இருக்கிறது. நான் சொன்னதைப் போல், கூட்டுறவு நிர்வாகம் அடிப்படையிலிருந்து மக்களிடையில் கூட்டு மனப்பான்மை வளர்க்கப்படவில்லை. அரசு அலுவலர்கள் நடத்தும் நிலைதான் இருக்கிறது. கூட்டு முயற்சியில் மக்களுக்கு ஆர்வம் ஏற்பட்டால், வெற்றிகரமாக நடத்த முடியும். நல்ல தலைவர்கள் இருக்கும் இடங்களில் கூட்டுறவு நிறுவனம் சிறந்த முறையில் நடப்பதைப் பார்க்கிறோம்.

சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசல்

*248 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் வளர்ந்துவரும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க புதிய திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக பின்வரும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன :—

(1) மவுண்ட்ரோடு ஜெமினி சதுக்கத்தில் ஒரு பாலம் (flyover) ஒன்று கட்டுதல்.

(2) பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையின் குறுக்கே சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு அருகில் பாலம் ஒன்று கட்டுதல்.

(3) திருவல்லிக்கேணி, பைக்கிராப்ட்ஸ் சாலைக்கு எதிரிலுள்ள தெற்கு கடற்கரை சாலையில் சுரங்கப்பாதை ஒன்று கட்டுதல்.

(4) கடற்கரை ரயில் நிலையத்திற்கு எதிரில் வடக்கு கடற்கரைச் சாலையில் ஒரு சுரங்கப் பாதை கட்டுதல்.

*249 வினா—திரு. என். கிட்டப்பா :

திரு. கரு. சீமைச்சாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் ஜெமினி ஸ்டுடியோவுக்கு எதிரில் அமைக்கப்படவிருக்கும் மேம்பாலம் எப்போது வேலை துவக்கப் படவிருக்கிறது?

(இ) அதற்காகும் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :(அ) இப்பணிக்கென ஒப்பந்தப்புள்ளி கேட்கப்பட்டதன் மேல் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிகள் முடிவு செய்யப்பட்டு வருகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் முடிவு செய்யப்பட்ட பின்னர் இப்பணி நிறைவேற்றுவதற்காக விரைவில் மேற்கொள்ளப்படும்.

(இ) இப்பணியின் மதிப்பீட்டுச் செலவு ரூபாய் 45 லட்சமாகும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலுள்ள போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க, முக்கியமான சில இடங்களில் ஒரு வழிப்பாதையாக மாற்றி அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சில இடங்களில் ஒரு வழிப்பாதையை போலீஸ் துறையினர் செய்து வருகிறார்கள்.

Dr. H.V. HANDE : Sir, in view of the fact that some experts have already mentioned that within another decade, that is by 1980 the traffic problem in the City will become a serious problem

1970 செப்டம்பர் 5]

which will even elude a proper solution. So. will this Government come forward to give some concrete suggestions as to how exactly they can disperse traffic by having some satellite towns around the City and by dispersing a few of the major offices of the State and the Central Governments to the outskirts of the City?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இது ஒரு முக்கியமான கேள்வி. அதைப்பற்றி "மெட்ராபொலிடன் ஸ்டடி டீம்" பரிசீலித்து வருகிறது. அவர்களுடைய பரிசீலனை முடிந்த பிறகு ஒரு முடிவு எடுக்கலாம்.

திரு. எஸ். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டங்களுக்கு இந்திய அரசிடமிருந்து எதாவது உதவி கேட்டிருக்கிறோமா? கேட்டிருந்தால், அது எவ்வளவு தொகை? அது என்ன நிலையில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கனவே குறிப்பிட்டது போல், போக்குவரத்து நெரிசலைக் குறைக்க திட்டங்கள் மாநில அரசால் ஏற்றுக்கொள்ளப்படும். மத்திய சர்க்காரிடமிருந்து உதவி கோரியதாகத் தகவல் இல்லை.

திரு. கே. விநாயகம்: தலைவர் அவர்களே, சென்னை நகரிலே உள்ள போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக மாஸ்டர் பிளான் ஒன்று தயாரிக்கப்பட்டு திட்டம் போடப்பட்டதே அது என்ன ஆனது? சென்னைக்குத் தெற்கே இருந்து வரக்கூடிய பாதையையும், சென்னைக்கு வடக்கே இருந்து வரக்கூடிய பாதையையும் நகருக்கு வெளியே இணைப்பதற்கான ஒரு திட்டம் போட வேண்டுமென்று இருந்ததே அது என்ன ஆனது, அந்தப் பாதை போட்டால் போக்குவரத்து நெரிசல் தவிர்க்கப்படும் என்று சொல்லப்படுகிறதே அந்தத் திட்டத்தை அரசாங்கம் எப்போது எடுத்துக்கொள்ளும்? அந்தத் திட்டத்திற்கான செலவை நமது அரசாங்கம் செய்ய வேண்டுமா? அல்லது மத்திய அரசாங்கத்திலேயிருந்து எவ்வளவு தருகிறது? மெட்ரோபாலிடன் ஸ்கீம் வந்தால்தான் போக்குவரத்து நெரிசல் தீரும் என்று அரசு கருதுகிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் ஒரே சமயத்தில் எவ்வளவு கேள்விகளைக் கேட்பது? இப்படி நிறைய கேள்விகளை கேட்டால் ஒன்றுக்குமே பதில் வராது. ஏனெனில் எல்லாவற்றையும் நினைவில் வைத்துக்கொள்ள முடியாது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, இது பற்றி அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்திற்கும் மத்திய அரசாங்கத்திலிருந்து மெட்ரோபாலிடன் ஸ்டடீ டீம் ஒரு மாதத்திற்கு முன்னால் வந்து போயிருந்தது. அந்தக் குழுவினிடத்தில் நாம் இதைப்பற்றி வற்புறுத்தியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் மத்திய அரசாங்கத்தினுடைய செலவிலேயே இந்த மேம்பாட்டுத் திட்டம் செய்யப்பட வேண்டும் என்று அறிவித்திருக்கிறோம்.

திரு. கொளத்தூர் கோதண்டம்: தலைவர் அவர்களே, சென்னை நகரிலே போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக ஒருவழிப் பாதையை உடனடியாக அமல்படுத்த வேண்டும். உதாரணமாக பிராட்வே போன்ற பாதைகளை ஒருவழிப் பாதையாக ஆக்குவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, எல்லாவற்றையும் ஒருவழிப் பாதையாக ஆக்குவது என்பது முடியாது. சாத்தியமான இடங்களில் ஒருவழிப் பாதையை ஏற்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, சென்னை நகரம் நாளுக்குநாள் வளர்ந்துகொண்டு வருகிறது. பம்பாய், கல்கத்தா, டில்லி போன்ற நகரங்களிலுள்ள போக்குவரத்து வசதிகள் போலல்லாமல், சென்னை நகரம் டவுன் பஸ் போக்குவரத்தையே நம்பிக் கொண்டிருக்கிறது. இன்னும் நான்கைந்து வருடங்களுக்குப் பிறகு போக்குவரத்து மிகவும் கஷ்டமாக இருக்கும். இன்று கூவம் நதித் திட்டம் சீரானால் போக்குவரத்தைத் துரிதப்படுத்த முடியும். மேலும் மின்சார ரயில்களை அதிகமாக விடுவதன் மூலமும், சென்னை நகரைச் சுற்றி சுற்று ரயில் விடுவதன் மூலமும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க அரசாங்கம் முயற்சி செய்யுமா? அப்படி ஏற்படும் திட்டத்திற்கான பெரும்பகுதிச் செலவை மத்திய அரசாங்கத்திடமிருந்து பெறுவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, சர்க்குலர் ரயில் அமைக்க வேண்டுமென்ற திட்டம் அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது. போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும்.

சிதம்பரம் அருகேயுள்ள அத்திப்பட்டு சாலை

*250 வின—திரு. எஸ். சிவசுப்ரமணியன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலூகா, சிதம்பரம்–சீர்காழி ரோட்டில் பழைய கொள்ளிடம் ஓரம் போகும் அத்திப்பட்டு ரோட்டில் (உப்பனாற்றங்கரையில்) சுமார் 2½ மைல் தூரம் கப்பி அடிக்கப் படாமல் சீர்க்கேடாகக் கிடப்பது விஷயமாக பொதுமக்களிடமிருந்து ஏதேனும் மனு அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

*Bus guides and fare tables*

*251 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government has decided to instruct the State Transport Department to issue bus guides and fare tables and proper notice boards for the information of travelling public?

1970 செப்டம்பர் 5]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பயணக் கட்டண அட்டவணைகளுடன் கூடிய பேருந்து வழி காட்டி ஏடு ஒன்று, தமிழ் நாடு அரசு போக்குவரத்துத் துறையினரால் விரைவில் வெளியிடப் படும். இத்துறையைச் சார்ந்த நெடுந்தொலைவு பேருந்துகள், வந்து சேர்கிற, புறப்படுகிற நேரங்களைக் குறிக்கும் அறிவிப்பு பலகைகளை, பொதுமக்களின் தகவலுக்காக பேருந்துகள் புறப்பட்டுச் செல்கிற முக்கிய இடங்களில் இத்துறை ஏற்கெனவே அமைத்து உள்ளது.

திரு. கே. விநாயகம் : தலைவர் அவர்களே, "பஸ் கைடு" போன்ற வைகளை அச்சடித்துத் தருவதிலே தாமதம் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. பொதுமக்கள் கைக்கு அது வந்து சேரவில்லை. இரண்டாவதாக நாம் விளம்பரப் பலகைகள் வைத்திருக்கிறோம். அந்த விளம்பரப் பலகைகள் சரிவர இருக்கிறதா, பொது மக்களுக்குப் பயன்படுகிறதா என்பதைப் பார்க்க வேண்டும். விளம்பரப் பலகைகளின் மீது சினிமா போஸ்டர்களையோ, மற்ற பொதுக்கூட்ட நோட்டீஸ்களையோ ஒட்டிவிடுகிறார்கள். இப்படி நடைபெறுவதைத் தடுப்பதற்கான எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இனிமேலாவது அரசாங்கம் தக்க முயற்சிகளை எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, "கைடு" பொறுத்தவரையில் போக்குவரத்துத் துறை செயல்பட்டு வருகிறது. இந்த மாத இறுதிக்குள்ளாக கைடுகள் வெளியிடப்பட்டு விடும் என்று போக்குவரத்துத் துறை இயக்குநர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். மற்றும் விளம்பரப் பலகைகளில் மீது சினிமா, பொதுக்கூட்டம் போன்ற நோட்டீஸ்கள் ஒட்டப்படாமல் பார்த்துக்கொள்ள தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

THIRU T. MARTIN : During office hours formerly there were the stand conductors for issue of tickets to ease the work of conductors issuing tickets in the running buses. That facilitated people getting into the bus easily. Now-a-days the stand conductors are absent in some stands. May I know the reason for the same from the Hon. Minister ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The main question is about publication of bus guides.

திரு. கே. விநாயகம் : தலைவர் அவர்களே, சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் பஸ் டிரான்ஸ்போர்ட்டை நன்றாக நடத்த வேண்டுமென்பதில் எல்லாக் கட்சியினருக்கும் நல்லெண்ணம் இருக் கிறது. நாங்கள் போடுகிற கேள்விகள் உங்களைக் குற்றஞ்சாட்டு வதற்காகப் போடுகிறோம் என்று நீங்கள் நினைக்கக்கூடாது. பஸ் போக்குவரத்துத் துறைக்கு ஆலோசனை சொல்வதற்காக முன்பு "சிட்டி பஸ் டிரான்ஸ்போர்ட் அட்வைஸரி கமிட்டி" என்று ஒன்று இருந்தது. அந்தக் கமிட்டியில் போக்குவரத்து துறையைச் சேர்ந்த நிர்வாகத்தினர், நகரின் பிரமுகர்கள், போக்குவரத்துப் பயணிகள், பத்திரிகை நிருபர்கள் எல்லாம் அங்கம் வகித்துக் கொண்டிருந்தார் கள். போக்குவரத்துத் துறைக்கு ஆலோசனை சொல்லிக் கொண்டு வந்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி போடுங்கள், கேள்வி நேரத்தின் போது ஆலோசனை சொல்வதற்கில்லை.

திரு. கே. விநயகம் : கேள்விக்குத்தான் வருகிறேன். இந்த சர்க்கார் வந்த பிறகு ஏன் அந்த சிட்டி டிரான்ஸ்போர்ட் அட்வைசரி கமிட்டியை ரத்து செய்துவிட்டார்கள்? நாங்களே எல்லாம் செய்கிறோம் என்று கூறிக்கொண்டு வருகிறார்களே, இந்த சீர் கேடான நிலைமைக்கு யார் காரணம் என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இதுபற்றித் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம். மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

*Village Officers in Panchayat Councils*

* 252 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether Village Officers are also Members of the Village Panchayats; and

(*b*) if so, whether they are functioning as ex-Officio Members ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Dr. H. V. HANDE : May I know whether it is a fact that the Village Officers have represented that they could also automatically have membership of the Village Panchayat, whether they also represented number of grievances to Hon. Minister and if so, will the Hon. Minister be able to give us details of the grievances, the action taken on them and the number of grievances that have been redressed by the Ministry?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, இது பற்றிய விவரங்கள் எதுவும் தற்போது இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தரப்படும்.

கிராம சேவக்குகளுக்குக் குடியிருப்புகள்

* 253 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1969–70-ஆம் ஆண்டு முடிய தமிழகத்தில் மாவட்ட வாரியாக எத்தனை கிராம சேவக்குகளுக்குக் குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டு உள்ளன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மொத்தம் 562 பேர் களுக்குக் குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, 1969–70-லே எத்தனை பேர்களுக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டது? கட்டி முடிக்கப்படாமல் இருக்கும் கட்டடங்கள் எத்தனை? எல்லோருக்கும் வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று தனியாகத் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப காலத்தில், இந்தத் திட்டத்தைப் படிப்படியாக அமல்படுத்துவதற்காகக் கட்டடங்கள் கட்ட ஆரம்பிக்கப்பட்டன. தேசிய நெருக்கடியின்போது இத்திட்டம் நிறுத்தப்பட்டு, பிறகு சில களில் வீடுகள் கட்டப்பட்டன. 1970–71-ல் இதிலுள்ள சில விதிகளைத் தளர்த்தி வீடுகள் கட்ட முயற்சி எடுத்துக்கொள்ளப் பட்டது. இந்த ஆண்டில் 168 வீடுகளைக் கட்ட திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேலும் படிப்படியாக இத்திட்டம் அமலாக்கப் படும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவர் அவர்களே, கிராம சேவக்குகளுக்காக வேண்டி இப்போது கட்டப்பட்டிருக்கிற வீடு களிலே எவ்வளவு பேர்கள் குடியிருக்கிறார்கள்? குறைந்த பட்சம் 25 சதவீதம் பேர்கள் இந்த வீடுகள் குடியிருப்பதற்கு லாயக்கு இல்லாத அளவுக்கு இருக்கின்றன என்று சொல்வது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அமைச்சர் அவர்கள் உடனடியாகப் பார்வையிட்டு, அதற்கான காரணம் என்ன என்பதைக் கண்டுபிடிக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, கட்டப் பட்ட வீடுகளில் எல்லாம் குடியிருக்கிறார்கள். எத்தனை வீடுகளில் குடித்தனம் இல்லை, எவ்வளவு வீடுகள் தகுதியற்ற நிலையில் இருக் கின்றன என்ற விபரம் தற்போது என்னிடத்தில் இல்லை.

### கதர் துறை பணியாளர்கள் சங்கம்

* 254 வினா—திரு. நா. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக கதர் கிராமத் தொழில் வாரியத்திலுள்ள கதர்த் துறைப் பணியாளர்கள் சங்கம் ஒன்று பதிவு செய்யப்பட்டிருக்கிறதா?

(இ) ஆம் எனில், அது எவ்வாறு செயல்படுகின்றது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) ஆம்.

(இ) வாரிய ஊழியர்களின் பெரும்பாலான குறைகள் முறைப் படி நீக்கப்பட்டுள்ளன, எனவே ஊழியர்கள் சங்கத்தில் அதிகம் ஆர்வம் காட்டுவதாகத் தெரியவில்லை.

### *North Arcot District Co-operative Supply and Marketing Society*

* 255 Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether some irregularities were detected in the matter of distribution of chemical fertilizers by the Secretary of the North Arcot District Co-operative Supply and Marketing Society Limited, in the year 1969;

(b) whether the irregularities were reported by the President of the Society to the District Collector, Registrar of Co-operative Societies and other authorities; and

(c) if so, what action has been taken against the Secretary?

[1970 செப்டம்பர் 5

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (அ) சங்கத் தலைவர் 8—4—1969 அன்று வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில், சங்கச் செயலாளர், அரசின் இரசாயன உரச்சேமிப்பிலிருந்து உரம் வழங்கப்பட்டதில் சில முறைகேடான செயல்களைப்பற்றிக் குற்றம் சாட்டியுள்ளார்.

(இ) இக்கடிதத்தின் நகல் ஒன்று கூட்டுறவுப் பதிவாளரால் பெறப்பட்டது.

(உ) இது குறித்து ஆராய்ந்து அறிந்தவுடன், நடவடிக்கை எடுக்கத் தேவையில்லையென்று கூட்டுறவுப் பதிவாளர் கருதினர். எனவே, நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

திரு. கே. வினயகம்: தலைவர் அவர்களே, சங்கத் தலைவர் ஒரு புகார் செய்தாரே, அந்தப் புகாரிலே எந்த அளவுக்கு உரத்தைப் பாழாக்கினர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதா? அதுமாதிரி நஷ்டம் ஏற்படவில்லையென்ற அடிப்படையை வைத்து அதிகாரி முடிவுக்கு வந்தாரா? வழக்கு மன்றத்திலே போய் வழக்குப் போட்டதன் விளைவாக அதிகாரிகளைக் காப்பாற்றுவதற்காக இந்த முடிவுக்கு வந்தாரா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவர் அவர்களே, இந்தச் சங்கத்தின் தலைவர் செய்த குற்றச்சாட்டு செயலாளர் மீது. செயலாளர் ரசாயன உர விற்பனையில் 59 டன்னை கையிருப்பில் வைத்துக்கொண்டதாகக் குற்றஞ்சாட்டி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பிய கடிதத்தின் நகல் கூட்டுறவுப் பதிவாளருக்கும் அனுப்பப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் தன் ஆணையின் கீழ் தான் கையிருப்பு வைத்துக்கொள்ளப்பட்டதாகப் பதில் அனுப்பி விட்டதால், செயலாளர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: செயலாளர் மீது புகார் செய்த சங்கத் தலைவர் மீது என்ன என்ன புகார்கள்—ஊழல் குற்றச்சாட்டுகள் உள்ளன? செயலாளர் தமக்கு அனுசரணையாக இருக்க மறுத்த காரணத்தினுல்தான் இந்த மாதிரியாக பொய்யாகக் குற்றஞ் சாட்டினர் என்பது உண்மையா? இந்தத் தலைவர் மீது பொய் யாகக் குற்றஞ்சாட்டியதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதற்கு விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் கொடுக்கிறேன்.

திரு. டி. மார்டின்: இந்தக் குற்றத்தைச் செய்த தலைவர் மீது கூட்டுறவுப் பதிவாளர் நடவடிக்கை எடுத்துக்கொண்டாரா? அல்லது அந்தத் துறையை வகிக்கின்ற அமைச்சரின் முடிவுப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: நமது கூட்டுறவுச் சட்டத்தின் 72-வது விதிப்படி அந்த முடிவை எடுக்க வேண்டியது கூட்டுறவுத் துறை பதிவாளரே தவிர அமைச்சர் இல்லை என்பதை அந்த வழக்கறிஞருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1970 செப்டம்பர் 5]

திரு. கே. விநாயகம்: சங்கத் தலைவர் பொய்யாகக் குற்றஞ் சாட்டினார்களா, அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பது எல்லாம் வேறு விஷயம். சங்கத் தலைவர் சொன்னதைப்போல செயலாளர் நடக்கவில்லை ஏன்பதற்கு ரெக்கார்டு பூர்வமாக ஆதாரம் இருந்தால் அதைப் படிக்கவேண்டும். ஆதாரம் இல்லாது சொல்வது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எவ்வாறு பதில் அளிக்க வேண்டும் என்பதற்கு அமைச்சருக்கு உரிமை இருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நான் முன்பே சொன்னபடி, செயலாளர், ரசாயன உர விற்பனையில் 59 டன் கையிருப்பு வைத்துக் கொண்டது, தம்முடைய ஆணைப்படிதான் என்று மாவட்ட ஆட்சியாளர் பதில் அளித்திருப்பதனால், நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றால் மாவட்ட ஆட்சியாளர் மீதுதான் எடுக்க வேண்டுமே தவிர, செயலாளர் மீது அல்ல.

அலுவலர் கூட்டுறவுப் பண்டகசாலை, திருமயம்

*256 வினா—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருமயத்தில் அமைந்திருந்த அலுவலர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் மூடப்பட்டுள்ளதின் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: திருமயம் அரசு ஊழியர்கள் கூட்டுறவுப் பண்டகசாலை 1960-இல் இருந்து தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்தது. 23—9—1967-இல் முழுக்க செயல்படும் நிலை அற்றதாகிவிட்டது. ஆகவே, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 85-வது பிரிவின் பிரகாரம் அந்தப் பண்டகசாலையை மூடிவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

புலவர் பொ. பொன்னம்பலம்: திருமயம் அரசு ஊழியர்கள் கூட்டுறவுப் பண்டகசாலையை மூடிவிடுவதற்கான காரணங்களை இந்த அரசு நன்கு ஆய்ந்ததா? அந்தக் காரணங்கள் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நான் முதலிலேயே சொன்னபடி 1960-இல் இருந்தே தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்தது. 23—9—1967 அன்றைய நிலவரப்படி சங்கத்தின் சொத்து நிலவரங்களோடு பார்க்கிறபோது ரூ. 9,683-60 நட்டம் காணப் பட்டது. இப்படி அதுவே செயலற்றதாகிவிட்ட காரணத்தினால் மூடிவிட உத்தரவிடப்பட்டது.

*Sri Kandaswami Temple Devasthanam*

*257 *Q*.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) the process adopted in the matter of appointment of trustees to the Devasthanam of Sri Kandaswami temple in the City of Madras; and

(*b*) whether preference is shown to the community of Beri Chettier under a scheme framed by the High Court?

[1970 செப்டம்பர் 5

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இது நீதி மன்ற விசாரணையில் உள்ளது.

திரு. கே. விநாயகம் : நீதிமன்றத்தில் இருக்கிற வழக்கைப்பற்றி கேள்வி போடப்போவதில்லை. ஆயினும் இப்படி ஒரு கோவிலுக்கு அறங்காவலர்களைப் போடும்போது ஒருசிலரையே போடவேண்டும் என்பது என்ன? கிட்டத்தட்ட ஏழு பேர்களைப் போடலாம் என்று இருக்கிறது. தெய்வ பக்தி உள்ளவர்களை பரவலாகப் போடுவதனால் கோவில்களில் பொதுமக்களுக்கு அதிக அக்கறை ஏற்பட வாய்ப்பு இராதா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : நான் இப்போதிருக்கிற நிலைமையைச் சொன்னேன். இனிமேல் செய்யவேண்டியதைப்பற்றி உறுப்பினர் குறிப்பிடுகிறார். அது சம்பந்தமாகப் பரிசீலனை செய்யப் பட்டே போடப்படும்.

DR. H. V. HANDE : Sir, will the Hon. Minister tell us, which Kandaswami Temple he is referring to? There are two Kandaswami temples in the City, one in the Mint Street and another in Park Town. Will the Hon. Minister also tell us whether they have a policy of appointing only those persons who are interested in these activities and who are fostering these activities, as trustees of temples and whether the persons who have absolutely no connection with these temples and who have no interest in these temples, are also recommended as trustees? What is the exact attitude taken by the Ministry in connection with the appointment of trustees and will the Hon. Minister explain it clearly to this House?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : ஒரு அறங்காவலருக்கு இருக்கவேண்டிய தகுதிகள் என்ன, என்ன என்று சட்டப்படி வரையறுத்திருக்கிறோம். முழு விவரமும் இப்போது என்னிடம் இல்லை. என்றாலும் யாருக்கு இந்து மதத்தில் நம்பிக்கை இருக்கிறதோ அவரே அறங்காவலராகப் போடப்படுவார்கள். மேலும் 25 வயதிற்குக் குறையாமல் 70 வயதுக்கு மேலே போகாமல் இருக்கவேண்டும். சித்த சுவாதீனம் உள்ளவராக, கூன், குருடு, செவிடு இல்லாதவராக, கிரிமினல் குற்றத்திற்காக தண்டனை அடையாதவராக, கோவில் நிலங்களை, சொத்துக்களை குத்தகை எடுக்காதவராக எல்லாம் இருக்க வேண்டும்.

## ஸ்ரீ இராமேஸ்வரம் கோயில் திருப்பணி

*258 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இம்மாநிலத்திலுள்ள ஸ்ரீ இராமேசுவரம் கோயில் திருப்பணி களுக்காக "யுனெஸ்கோ" விடம் நிதியுதவி ஏதும் கேட்கப்பட்டு வருகிறதா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : ஆம். இராமேஸ்வரத்தி லுள்ள ஸ்ரீ இராமநாதசுவாமி கோவில் "யுனெஸ்கோ" நிறுவனத் தால் உதவி அளிக்கப்படுவதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட இரண்டாவது கோவிலாகும்.

**1970 செப்டம்பர் 5]**

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இராமேசுவரம் கோவில் இரண்டாவதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது என்றால் முதல் கோவில் எது? இந்தக் கோவிலுக்கு யுனெஸ்கோவில் இருந்து எவ்வளவு பணம் கேட்கப்பட்டிருக்கிறது, அவர்கள் எவ்வளவு அனுமதி வழங்கியிருக்கிறார்கள்? அந்த வேலை எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவில் முதலாவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. அதற்கான வேலை நடைபெற்று வருகிறது. அதற்கு அடுத்ததுதான் இந்த இராமேசுவரம் கோவில். 12 ஆயிரம் டாலர் ஆண்டு ஒன்றுக்குக் கொடுக்கிறார்கள் ரொக்கமாகக் கொடுப்பதில்லை.

'Materials which are not readily available in India are supplied by UNESCO'

என்பதாக இது சம்பந்தமாக யோசனை சொல்லக்கூடியது, இன்னும் புத்தகங்கள் அச்சிட்டு கொடுப்பது ஆகிய வகையில் உதவி செய்கிறது. மூன்றாவது கோவில் காஞ்சீபுரம் வரதராஜர், நான்காவதாக சிதம்பரம் கோவில் இப்படி 10 ஆண்டுகளுக்கு பத்து கோவில்களை எடுத்து உதவி செய்ய யோசனை கூறப்பட்டு ஏற்கப் பட்டிருக்கிறது.

## மதுரையில் வானொலி நிலையம்

*231 வினா—திரு. பி. எஸ். மணியன் :

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையில் வானொலி நிலையம் ஏற்படுத்தும் முயற்சி அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஆம். மதுரையில் வானொலி நிலையம் அமைக்கக் கோரி மத்திய அரசுடன் கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது.

திரு. பி. எஸ். மணியம் : மதுரையை மையமாக வைத்து மாவட்ட மக்கள் பல கோரிக்கைகளை அரசிடம் வைக்கிறார்கள். அரசும் நிறை வேற்றி வருகிறது. மதுரை—இராமநாதபுரம் வர்த்தக சபை வர்த்த கத்தைப் பெருக்க மதுரையில் ஒரு வானொலி நிலையம் ஏற்படுத்தித் தர வேண்டும் என்கிறார்கள். அதை கவனித்து அரசு விரைவில் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் இதில் எவ்வளவு அக்கறையோடு இந்தத் பிரச்னையை அணுகுகிறாரோ அதைப்போலவே இந்த அரசும் இரண்டு மூன்று தடவைகளுக்கு மேல் மத்திய சர்க்காருக்குக் கடிதம் மூலமாக வேண்டுகோள் விடுத் திருக்கிறது. வானொலி நிலையம் ஏற்படுத்துவதில் இன்னமும் பின் தங்கிய நிலையில் உள்ள பகுதிகளின் தேவை கவனிக்கப்பட்ட பிறகு இதுவும் கவனிக்கப்படும் என்று மத்திய அரசிடம் இருந்து கடிதம் வந்திருக்கிறது. என்றாலும் அண்மையில் மீண்டும் இதைப்பற்றிக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1970 செப்டம்பர் 5

திரு. என். எஸ்: வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரசபையும்கூட இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி ஒரு தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியது. இது குறித்து மத்திய அரசாங்கத்திற்கு நம்முடைய அரசாங்கம் எப்போது கடைசியாக கடிதம் எழுதியுள்ளது? மேலும் இந்த விஷயத்தில் அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, கடைசியாக எழுதிய கடிதம் என்று குறிப்பிட விரும்பவில்லை. அண்மையில் 31–7–70-ல் கடிதம் எழுதப்பட்டது.

*Production of Documentary films*

* 232 Q.—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Tamil Nadu Government's Information Department is producing documentary films besides news reels; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) தயாரிக்கப்படுகின்றன.

(இ) திரைப்பட கல்லூரி மூலமாக வரலாற்றுப் படங்கள் தயாரிக்கப்படுகின்றன. 1967-ம் ஆண்டில் அம்மை நோய் பற்றிய படமும் 1969-ம் ஆண்டில் குழந்தை நலம் பற்றிய படமும் வரலாற்றுப் படங்களாக (Documentary films)முறையே ரூ. 15,000, ரூ. 14,700 செலவில் எடுக்கப்பட்டன. செய்திப் படங்களில் பகுதி களாக கீழ்க்கண்ட வரலாற்றுப் படங்களும் 1968–69-ம் ஆண்டில் தயாரிக்கப்பட்டன.

1. தேடிவந்த செல்வம் (Raffle)
2. காந்தி நூற்றுண்டு விழா.
3. ஈடான உணவு (Wheat)
4. வளரும் செல்வங்கள் (Midday Meals Schemes)
5. அண்ணு இருக்கின்ருர்.

மேற்கண்ட படங்களைத் தவிர கீழ்க்கண்ட படங்கள் தயாரிப்பு நிலை யில் உள்ளன.

1. குடும்ப நலம்.
2. பொருட்காட்சி.
3. கடல் மீன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க மதுரை, தஞ்சை, திருச்சி போன்ற நகரங் களில் உள்ள கோயில்களைப் படம் எடுத்து, அதை வெளிநாடுகளுக்கு, வட மாநிலங்களுக்கு அனுப்பினல், அங்கிருந்து பயணிகள் அதிகம் பேர் வரக்கூடிய வாய்ப்பு இருப்பதால், தமிழக அரசுக்கு லாபம் அதிகம் வருகின்ற காரணத்தினல், இதுபற்றி அரசு யோசிக்க முயற் சிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தக் கோவில்களெல்லாம், அணிமணிகளெல்லாம் வண்ணப்படங்களாக எடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் இரண்டொரு கோவில்கள் பாக்கி இருக்கின்றன. அவைகள் எடுக்கப்பட்ட பிறகு இந்தப் படங்கள் பூர்த்தி செய்யப்பட்ட பிறகு மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனையை பரிசீலனை செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்படும்.

* 233 Q.—Thiru K. CHEEMAICHAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Tamil Nadu Government propose to produce a film on the preparation of wheat products: and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) & (இ) தமிழக அரசு செய்தி படம் எண் 16 பஞ்ச நிவாரணமும் (Drought Relief) கோதுமை உணவு தயாரிப்பது எப்படி என்பது பற்றியும் சேர்த்து படம் எடுக்கப்பட்டு, 10–10–1969ல் வெளியிடப்பட்டுள்ளது.

திரு. கே. விநாயகம்: சார், நமது சர்க்கார் எடுக்கிற படங்கள், நியூஸ் ரீல் ஆயினும் சரி, அல்லது டாக்குமென்டரி பில்ம் ஆயினும் சரி இவைகள் எல்லாம் பெரும்பாலும் கட்சிப் பிரசாரப் படங்களாக இருக்கின்றன என்று பொதுமக்கள் சொல்கிறார்களே, இது உண்மையா? ஆகையால் இந்தப் படங்களை எடுப்பதற்கு எல்லாக் கட்சித் தலைவர் அவர்களையும் சேர்த்து ஒரு குழு அமைத்து அவர்களுடைய ஆலோசனையின் பேரில் இந்தப் படங்களை எடுக்கிற எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறதா? அல்லது அரசாங்கமே முடிவு செய்கிறார்களா என்பதை விளக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அமைச்சர்களின் உருவங்கள் அதில் தெரிகிற காரணத்தாலே அது கட்சிப் பிரச்சாரம் ஆகாது. எந்தக் கட்சியின் அடிப்படையிலும் எடுக்கப்படவில்லை. எல்லாக் கட்சித் தலைவர்களும் கலந்துகொண்ட பல்வேறு விழாக்கள் அந்தப் படங்கள் இன்றைய தினம் வெளியிடப்படுகின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கோமதி சங்கர தீட்சிதர் அவர்களுடைய பிறந்த நாள் விழா படம் கூட வெளியிடப்பட்டிருக்கிறது. மற்றும் பல் வேறு கட்சித் தலைவர்கள் பிறந்த நாள் விழாக்கள் படங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே தனிப்பட்ட முறையிலே எந்தக் கட்சியைச் சேர்ந்த படங்களும் எடுக்கப்படவில்லை. பொதுவாக அரசாங்கப் பணிகள் படங்களாக இருக்கிற காரணத்தால் அமைச்சர்களை அடிக்கடிப் பார்க்க நேரிடுகிற காரணத்தால் ஒரு வேளை விநாயகம் அவர்களுக்குக் கட்சிப் பிரசாரமாக தெரிகிறது என்று கருதுகிறேன்.

## தமிழ்நாட்டில் இந்திய தேர்தல் கமிஷனால் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள்.

* 234 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அகில இந்தியத் தேர்தல் கமிஷனால் அங்கீகரிக்கப்பட்ட தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் எவை எவை?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தேர்தல் சின்னங்களை ஒதுக்குவதற்காக இந்தியாவின் தேர்தல் கமிஷன் கீழ்க் கண்ட கட்சிகளை அகில இந்திய கட்சிகளாக அங்கீகரித்துள்ளது.

இந்திய தேசிய காங்கிரஸ், சுதந்திரா கட்சி, பாரதிய ஜனசங்கம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, சமயுக்த சோஷலிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்ஸிஸ்ட்), பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம்.

திரு. என். எஸ்: வி. சித்தன்: இந்தக் கட்சிகள் எல்லாம் கடந்த பொதுத் தேர்தலில் எத்தனை சதவிகிதம் வாக்குகள் பெற்றிருக்கின்றன என்று கூற முடியுமா? மேலும் தமிழரசுக் கழகம், நாம் தமிழர் கட்சி போன்ற கட்சிகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றனவா? இந்தக் கட்சிகளுக்கு எத்தனை உறுப்பினர்கள் இருக்கின்றனர்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்தக் கட்சிகளின் உறுப்பினர்கள் பற்றி அந்தந்தக் கட்சித் தலைவர்களைத்தான் கேட்க வேண்டும். இந்தக் கட்சிகள் அங்கீகரிக்கப்பட்டதற்குக் காரணம், கடந்த பொதுத் தேர்தலில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் வாக்குகளைப் பெற்றதனுல் தான் அங்கீகரிக்கப்பட்டன. அந்தவகையில் இந்தக் கட்சிகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. எஸ். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் விடையளிக்கும்போது, இந்திய தேசிய காங்கிரஸ் என்று குறிப்பிட்டார்கள். அந்தக் கட்சி இப்போது எங்கே இருக்கிறது? இப்போது சிண்டிகேட், இண்டிகேட் என்று சொல்லிக் கொள்கிறுர்களே, அப்படியானுல் இந்தக் கட்சி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: தலைவர் அவர்களே, அந்தக் கட்சி எங்கே இருக்கிறது என்று கேட்டார்கள். இதை நான் ஆட்சேபிக்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, சுருக்கமான பதில்—நீதிமன்றத்தில் இருக்கிறது.

## தேர்தல் துறை

* 235 வினு.—திரு. என். எஸ்: வி. சித்தன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் தேர்தல் ஆணைக்குழுவின் நேரடி மேற்பார்வையின் கீழ் தேர்தல் துறை எதுவும் அமைக்கப்படவிருக்கிறதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) தமிழ்நாடு அரசிடம் இது போன்ற செயற்குறிப்பு இல்லை.

(இ) கேள்வி எழவில்லை.

1970 செப்டம்பர் 5]

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்திலே தேர்தல் ஆணைக்குழுவின் நேரடிப் பார்வையின்கீழ் தேர்தல் துறை இருக்குமாஞல் மாநில அரசாங்கமே நல்ல முறையில் நடத்திக் கொள்ளலாம். இது வரையில் இல்லை என்ருல், இனி மேலாவது ஏற்படுத்த அரசாங்கம் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி: தலைவர் அவர்களே, அதற்காகத் தான் மாநில சுய ஆட்சி கேட்கிறேம்.

DR. H. V. HANDE: Is it not a fact that a few months ago in a hurry because there was the threat of mid-term poll, a number of officers were suddenly appointed and they took the census and they are now the final census. Because it was done in a hurry number of complaints have been received. The State Government has also responsibility in the matter and there is a Deputy Secretary (Election). A number of officers were appointed because there was threat of mid-term poll and census was taken in a hurry. In view of the joint responsibility of State Government and Central Government on this issue, will the Hon. Chief Minister state whether any complaints were received because of what I have stated and will the Hon. Chief Minister give us an assurance that those complaints will be considered and examined?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி: தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட புகார்கள் எதுவும் வந்ததற்குத் தகவல் இல்லை. அப்படி வருமேயாஞல் கவனிக்கப்படும்.

தனி நபர்கள் வருவாய்க்கு உச்ச வரம்பு.

* 190 வினு:—திரு. ஏ. எம். இராஜா: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனி நபர் ஆண்டு வருவாய்க்கு உச்சவரம்பு நிர்ணயிக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, தனி நபர் ஆண்டு வருமானத்துக்கு உச்ச வரம்பு வேண்டுமென்று கேட்டிருக்கின்றீர்கள்

'Taxes on income and plantation agricultural income' இதைத் தவிர, விவசாய வருமானத்தைத் தவிர மற்ற வருமானங் களின் மீது வரி விதிக்கிற உரிமை அரசியல் சட்டத்தில் 7-வது ஷெடியூல் 82-வது என்ட்ரியிலே போட்டு மத்திய அரசைச் சார்ந்து இருக்கிறது. அந்த அதிகார வரம்பு நம்மிடத்தில் இல்லாததால் அதைப்பற்றி நாம் பரிசீலனை செய்ய முடியாமல் இருக்கிறேம்.

திரு. ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகள் இருப்பதற்குக் காரணம் வருமான வித்தியாசம் தான். அந்த ஏற்றத் தாழ்வுகளைப் போக்குவதற்கு வருமானத்திற்கு உச்ச வரம்பு கொண்டு வர அரசு முயற்சி எடுக்குமா? குறைந்த பட்சம் மாத சம்பளம் வாங்கிக்கொண்டிருக்கிற அலுவலர்கள் இடையே

உள்ள ஏற்றத் தாழ்வுகளைப் போக்குகின்ற முறையிலே சம்பளத்திற்கு உச்சவரம்பு கொண்டுவர முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, வரு மானத்தினுல் மட்டும் என்பதல்ல. வருமானம் இல்லாமல் சம்பா திக்கக் கூடியவர்களிடையே இருக்கிற ஏற்றத்தாழ்வுகள், சுரண்டல்கள் இவைகள் எல்லாம் அகற்றப்பட்டு சம வாய்ப்புகளும், சம உரிமை களும் பெருக வேண்டுமென்று இன்றைக்கு ஆளுகிற நம்முடைய கட்சியின் சித்தாந்தம். ஆனால் நம்முடைய முதல்வர் அவர்கள் கொஞ்ச நேரத்திற்கு முன் சொன்னதைப்போல, திரும்பத் திரும்பச் சொன்னால் மாநில சுயஆட்சி, மத்தியில் கூட்டாட்சி என்று இருக்கும். துரதிருஷ்டவசமாக அக்ரிகல்சுரல் இன்கம் தவிர மற்ற எல்லா வரி விதிக்கிற உரிமையும் அவர்களுக்கு இருக்கிறது என்பது மட்டுமல்ல, அக்ரிகல்சுரல் இன்கம்மூக்கும் வரி விதிக்கிற உரிமையில் மத்திய சர்க்கார் ஆக்கிரமிப்பு செய்து வருகிறார்கள். அதைப் பலவகையிலும் இந்த அரசு ஆட்சேபித்து வருகின்றது. இது கட்டுப்பட்ட அரசாக இருக்காது. இப்படிப்பட்ட பெரிய காரணங்களிலே நம்முடைய யோசனைகள் சொல்வதற்கு கூட கட்டுப்படுத்தப்பட்ட நிலைமை இருக்கிறது.

*Treasury and Accounts Branch*

* 191 *Q*.—Thiru K. CHEEMAICHAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether the Government have given instruction to the State Treasuries to reorganise the method of working of the Treasury and Accounts Branch based on the recommendation of the Administrative Reorganisation Commission; and

(*b*) if so, the details thereof?

The Hon. Thiru K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Administrative Reforms Commission, it is referred to the Director of Treasuries and Accounts and the Accountant-General, Madras for their remarks. On receipt of their remarks, the recommendation will be examined and the view of the State Government will be communicated to the Government of India.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

### (அ) அலுவல் ஆய்வுக்குழு கூட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக்குழுவின் கூட்டம் இன்று காலை 10 மணி அளவில் பேரவைத் தலைவரின் அறையில் கூடும். அதற்குக் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் வருமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

## 3. கவன ஈர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோமதிசங்கர திட்சிதர் இருக்கையில் இல்லை......

அடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானம் நாளை எடுத்துக்கொள்ளப் படும்.

அடுத்து, விதி 41-ன் கீழ் திரு. அழகுத் தேவர் அவர்கள் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு உடனடி முக்கியமான கவன ஈர்ப்புக் காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

சாத்தூர், சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதிகளில் மழையின்மை யால் ஏற்பட்டுள்ள குடிநீர் பஞ்சம்.

திரு. எஸ். அழகுத்தேவர் : சட்டப்பேரவையின் 41-வது விதியின் கீழ், சாத்தூர், சிவகாசி மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதிகளில் தொடர்ந்து கடந்த மூன்று ஆண்டுகளாக மழை இல்லாத காரணத் தால் கடுமையான குடிநீர்ப்பஞ்சம் ஏற்பட்டுள்ள நிலைமையைப் பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: 1970-ம் ஆண்டு பிப்ரவரித் திங்களிலேயே இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் வறட்சி நிலைமை நிலவுவது பற்றித் தெரிவித்தவுடன், குடிநீர் வழங்கல் ஏற் பாடுகளை மேம்பாடு செய்வது உட்பட பல்வேறு இடர் தணிப்புப் பணிகளுக்கான செயற்குறிப்புகளையும் அனுப்பியிருந்தார். சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், அருப்புக்கோட்டை வட்டங்கள் அடங்கிய சிவகாசிக் கோட்டம், குடிநீர் பற்றுக்குறை கடுமையாக இருப்பதாக அறிவிக்கப்பட்ட பகுதிகளுள் ஒன்றுகும். 210 குடி நீர்க் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக ரூ. 2,35,450 கூடுதலாக நிதி ஒதுக்கம் செய்யப்பட வேண்டுமென விண்ணப்பித்துக் கொள்ளப்பட்டது. கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு 25 துணைக் கிணறுகளுக்காக ரூ. 3,32,600 ஒதுக்கப்பட வேண்டுமென்றும் விண்ணப்பித்துக் கொள்ளப்பட்டது.

| | கிணறுகளின் எண்ணிக்கை. | தொகை. |
|---|---|---|
| | (1) | (2) |
| ஸ்ரீ வில்லிபுத்தூர் ஒன்றியம் .. | 15 | 3,00,000 |
| இராஜபாளையம் ஒன்றியம் .. | 1 | 20,000 |
| சிவகாசி ஒன்றியம் .. | 2 | 9,000 |
| வேட்பக் கோட்டை ஒன்றியம் | 3 | 3,600 |
| மொத்தம் .. | | 3,32,600 |

இத்தொகையில் சிறப்பு கிராமப் பணிகள் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள ரூ. 8 லட்சத்தைத் தவிர, இந்த நோக்கத்திற்காக வறட்சி இடர் தணிப்பு பணியின் கீழ் இதுவரையில் அரசு ரூ. 2 லட்சத் திற்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. சிறப்புக் கிராமப் பணிகள்

திட்டத்தின் கீழ் நீர் வழங்கல் திட்டங்களும், இதில் அடங்கும். தண்ணிர் பற்றுக்குறை உள்ள இடங்களிலும், இடர்ப்பாடான பகுதி களிலும் சாதாரண கிணறுகள் வெட்டுவதற்கான திட்டத்தின் கீழ் ரூ. 2 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. மொத்தத்தில், 1970 பிப்ரவரி முதல் ஜூலை வரையிலான கால அளவில் ரூ. 12 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது. எனினும், சிவகாசி, வேட்பக்கோட்டை, ஸ்ரீவில்லி புத்தூர், வத்திராயிருப்பு வட்டாரங்களில் இன்னமும் குடி நீர்ப் பற்றுக்குறை உள்ளதென்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள் ளார். எனவே, இந்த இடர்பாட்டை நீக்குவதற்காக இத்தலைப்பின் கீழ் மேலும் ரூ. 4, 11 லட்சம் வழங்க ஒப்பளிப்பு வழங்குமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார். இச்செயற் குறிப்பு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. தகுந்த ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்படும்.

## 4. அரசினர் தீர்மானங்கள்.

### அவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, சட்டப்பேரவை யின் 21 (3) விதியின்படி, "அரசினர் மசோதாக்கள்" என்ற தலைப் பின்கீழ், இனம் 9—தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த மசோதா, இனம் 13—தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்த) மசோதா ஆகியவைகளை அதே தலைப்பில் இனம் 1—தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கூடுதல் வரி விதிப்பு, கூடுதல் தண்ணீர் வரி (திருத்த) மசோதாவுக்கு முன்பு எடுத்துக்கொள்ள வேண்டும். இனம் 6—தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு நகர—நாட்டுப்புற அமைப்பு மசோதாவை இனம் 12—தமிழ்நாடு 1970-ம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) மசோதாவிற்குப் பிறகு எடுத்துக் கொள்ளவேண்டும்", என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

## 5. அறிக்கை அளித்தல்

### அரசினர் உறுதிமொழிக் குழுவின் ஆறுவது அறிக்கை.

THIRU K. VINAYAKAM: Mr. Speaker, Sir, I have the honour to present the Sixth Report (Fourth Assembly) of the Committee on Government Assurances for the year 1970–71.

## 6. அரசினர் மசோதாக்கள்

### (அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிலச்சீர்த்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த மசோதா.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவர் அவர் களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

1970 செப்டம்பர் 5]

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: நான் இந்த மசோதாவை இப்பேரவையின் முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம்மசோதா அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் (இரண்டாம் திருத்த) மசோதா.

THE HON. THIRU SI. PA. ADITANAR: Sir, I beg for leave to introduce the Tamil Nadu Co-operative Societies (Second Amendment) Bill 1971.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

THE HON. THIRU SI. PA. ADITANAR: Sir, I introduce the Bill.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம்மசோதா அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

(இ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூடுதல் வரி விதிப்பு, கூடுதல் தண்ணிர் வரி (திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 17/70).

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Mr. Speaker, Sir, I beg to move—

'That the Tamil Nadu Additional Assessment and Additional Water-Cess (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 17/70) be taken into consideration.

As a general principle, if on account of the levy of water rate in a project, there has been an increase in the assessment or water-cess by 60 per cent, the project concerned is being exempted from the scope of the Tamil Nadu Additional Assessment and Additional Water Cess Act, 1963 (Tamil Nadu Act 8 of 1963) and such projects are mentioned in Schedule I to that Act. The Vidur Reservoir Project in South Arcot district is one of such projects mentioned in Schedule I of the said Act. On a representation received from the ryots of the Vidur Reservoir Project against the levy of enhanced rate, the Government issued orders cancelling the enhanced wet assessment with effect from the 1st July, 1963 and decided to levy the assessment under the said Tamil Nadu Act 8 of 1963. Consequently it was decided to omit the project from Schedule I to that Act.

Further, at present, water rate is being levied at enhanced rates for the lands under the Tholudur (Wellington) Reservoir Project and Gomukhinadi Reservoir Project in South Arcot district, resulting in an increase of more than 60 per cent in wet assessment

* Published in the Fort St. George Gazette Extraordinary, dated 25th August 1970.

or water-cess. It was, therefore, decided to exempt the Tholudur (Wellington) Reservoir Project and Gomukhinadhi Reservoir Project from the provisions of the Tamil Nadu Additional Assessment and Additional Water-Cess Act, 1963, by including it in Schedule I to that Act.

Accordingly, a notification was issued under section 13 (1) of the said Act, by which the Vidur Reservoir Project was omitted from Schedule I to that Act and Tholudur (Wellington) Reservoir Project and Gomukhinadhi Reservoir Project were added to the said Schedule. The Bill seeks to replace the said notification in terms of the provisions of section 13 (2) of the said Act.

I request the House, Sir, to accept the motion.

*திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவிலே ஆப்ஜக்ட்ஸ் அண்ட் ரீஸன்ஸிலே

'Tamil Nadu Additional Assessment and additional water-cess Act 1963 Schedule I 60 per cent of the increase of basic wet assessment' என்று இருக்கிறது. அதன் பிரகாரம் முதல் ஷெட்யூலிலே 60 சதவிகிதம் இன்க்ரீஸ் ஆஃப் பேஸிக் வெட் லேண்ட் அஸஸ்மெண்டிலே இருந்தால் அந்த ஷெட்யூலில் சேர்க்கவேண்டுமென்று அர்த்தமாகிறது. அதிலே 10 ரூபாய் அதிகமாக வரிப் போடப்பட்டதால் 60 சதவீதத்திற்கு மேல் வந்ததாகவும் அதனாலே பர்ஸ்ட் ஷெட்யூலில் சேர்க்கப்பட்டிருக்கின்ற நிலைமை ஏற்பட்டதாகவும், இப்பொழுது அங்கு இருக்கக்கூடிய ரயட்களுக்கு வரிப் பளுவைக் குறைக்க வேண்டுமென்ற முறையிலே ரூ. 10-ஐ எடுத்து விடுவதனால் அந்த பர்ஸ்ட் ஷெட்யூலில் இருந்து அதை எடுக்க வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. கோமுகிநதி ரிசர்வாயர் ப்ராஜக்ட், தோளுடூர் (வெல்லிங்டன்) ரிசர்வாயர் ப்ராஜக்ட் இவற்றைப் பொறுத்த வரையில் வெட் லேண்ட் அஸஸ்மெண்டிலே 60 சதவீதத்திற்கும் அதிகமாக வரி வருகிறது.

நான் அமைச்சர் அவர்களிடத்திலே ஒரு சிறிய கிளாரிபிகேஷன் கேட்க விரும்புகிறேன். ஆக்ட் பிரகாரம் வாட்டர் அஸஸ்மெண்ட் ஆர் வாட்டர் ஸெஸ் என்று இருக்கிறது. வாட்டர் அஸஸ்மெண்ட் அல்லது வாட்டர் செஸ் இரண்டிலே ஒன்றுதான் போடவேண்டுமென்ற நோக்கமா, பர்ஸ்ட் ஷெட்யூலிலே வந்தால் ஒன்றுதான் போடவேண்டுமென்ற நிலைமை இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸிலே இது எந்த விதத்திலே ரயட்களுக்குப் பளுவை குறைக்கிறது என்பதில்லை, எனவே இதைத் தெளிவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்த வரையிலும் மிகுந்த மகிழ்ச்சியோடு நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த வீடூர் நீர்த்தேக்கப் பகுதிக்கு அதனால் லாபம் இருக்கிறது என்பதாலே என்னுடைய மகிழ்ச்சியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலே உள்ள மக்கள்

1970 செப்டம்பர் 5] [திரு. க. இராமமூர்த்தி]

அரசிடம் கோரிக்கை விடுத்ததன் விளைவாக இந்த மசோதா வந்திருக்கிறது. அதே நேரத்திலே தோளுடூர் (வெல்லிங்க்டன்) ரிசர்வாயர் ப்ராஜக்ட் ஏரியாவைச் சேர்ந்தவர்களுக்கும், கோமுகி ரிசர்வாயர் ப்ராஜக்ட் ஏரியாவைச் சேர்ந்தவர்களுக்கும், இந்த வீடூர் ப்ராஜக்டைச் சேர்ந்தவர்களுக்கு என்ன லாபம் கிடைக்கிறதோ அந்த லாபம் அவர்களுக்கு இல்லாமல் போய்விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. வீடூர் பகுதியை அந்த ஷெட்யூலிலிருந்து விட்டு விட்டு தோளுடூர் ரிசர்வாயர் ப்ராஜக்டையும் அதிலே சேர்த்திருக்கிறோம். ஒன்றை எடுத்துவிட்டு வேறு ஒன்றைச் சேர்த்திருக்கிறோம். ஒரு பகுதிக்குக் கிடைக்கும்படியான லாபம் இன்னொரு பகுதிக்குக் கிடைக்காத அச்சம் இருக்கிறது.

திரு. சுப்பராஜா அவர்கள் கூறியதுபோல் ஆப்ஜக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸ்லே விவரங்களைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. வீடூர்ப் பகுதியிலே அதனால் என்ன லாபம் அல்லது வரி விகிதம் என்ன அவர்களுக்கு விதிக்கப்படுகிறதோ அதே விகிதம் கோமுகி ரிசர்வாயர் ஏரியாவைச் சேர்ந்தவர்களுக்கும் தோளுடூர் ரிசர்வாயர் ஏரியாவைச் சேர்ந்தவர்களுக்கும் விதிக்கப்படும் என்ற உறுதியை அமைச்சர் தெரிவிப்பார்கள் என்று எதிர்ப்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இதிலே ஒன்றும் குழப்பம் இல்லை.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, 1963-ஆம் ஆண்டிலே அதிகமாக விதிக்கப்பட்ட தீர்வையை எடுத்துவிட்டதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள், அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்திலே அங்கே வசூல் செய்த உபரி வரிகளை சில பேர்கள் கட்டிவிட்டார்கள், சில பேர்கள் கட்டாமல் இருக்கிறார்கள். அதுபற்றி என்ன முடிவு செய்யப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியில் 15 கிராமங்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. எனவே உபரி வரி வசூலிக்கப்பட்டிருக்கிறது, அதைத் திருப்பிக்கொடுக்க வழிவகை செய்வார்களா என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, இது ஒரு சாதாரண விஷயம்தான். மசோதாவிலே தவறு ஒன்றும் இல்லை. ஒரே வரியைத் தெளிவாக விளக்கிவிட்டால் சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஒரு பொது விதி என்னவென்றால்

'If on account of levy of water rate in a project there has been increase in the assessment of water cess by 60 per cent the project concerned is being exempted from the scope of Tamil Nadu Additional Assessment and Additional Water-Cess Act and such projects are mentioned in Schedule I to that Act.'

என்று இருக்கிறது. இதுதான் அதிலே இருக்கிற விவரம். கூடுதல் வாட்டர் செஸ் விதிப்பதின்மூலம் ஏற்கனவே இருக்கிற வரியிலே 60 சதவீதம் ஆகிவிட்டால் இந்தச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளித்து ஷெட்யூல் ஒன்றிலே சேர்க்கப்படவேண்டுமென்பது பொருள்.

நாம் வாட்டர் செஸ் போடுகிறோம். ஏற்கனவே இருக்கிற வரியைவிட 60 சதவீதம் கூடிவிட்டால் இந்தச் சட்டத்திற்குள் வராது. அது அட்டவணைக்குள் வரும். எக்ஸம்ப்ட் பண்ண வேண்டுமென்பது ஒரு அம்சம், அட்டவணையிலே சேர்க்கவேண்டு மென்பது இரண்டாவது அம்சம். வீடூர் பகுதியிலே வரிப் போட்டோம், 60 சதவீதத்திற்கு மேல் போய்விட்டது. திரு. பால கிருஷ்ணன் அவர்கள் கூறிய மாதிரி, திரு. இராமமூர்த்தி அவர்கள் கூறியமாதிரி அவர்களுடைய கோரிக்கையை ஒத்துக்கொண்ட காரணத்தினாலே 60 சதவீதத்திற்குக் கீழே விழுந்துவிட்டது. ஆகை யினாலே முதல் ஷெட்யூலிலிருந்து வெளியே எடுக்கிறோம். ஒன்று எக்ஸம்ப்ட் பண்ணவேண்டும், இரண்டாவது அது அட்டவணையிலே வரவேண்டும். இப்பொழுது 60 சதவீதத்திற்குக் கீழே போய் விட்டதாலே எடுத்து விடுகிறோம். இரண்டாவது சொல்லிய பகுதி தோளூர் ரிசர்வாயர் பகுதிக்கும், கோமுகி ரிசர்வாயர் பகுதிக்கும் நாம் வரி விதிப்பதன் மூலமாக 60 சதவீதம் வந்துவிடுகிறது. ஒன்று கீழே விழுந்துவிடுகிறது, ஒன்று மேலே போய்விடுகிறது. ஆகவே, இதிலே முரண்பாடு எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, 10 ரூபாயை எடுத்துவிட்டதாலே ஷெட்யூலிலிருந்து வெளியே வந்துவிடும். வாட்டர் செஸ் குறைக்கப்படுவதால் அது எக்ஸம்ஷனிலே வராது அல்லவா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : 60 சதவீதம் வந்தால்தான் பாதிக்கும். ஏற்கனவே இருக்கிற வரியிலே 60 சதவீதம் வந்து விட்டால் அதைச் சேர்க்கிறோம். அந்த நிலைமை முன்பிருந்தது. இப்பொழுது அந்த வரியை எடுத்துவிட்டதால் 60 சதவிகிதத்திற்குள் வந்துவிட்டது. அது அட்டவணையிலே இருக்கவேண்டியதில்லை. இதற்காக ஏற்கனவே நோடிபிகேஷன் செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது அதற்காகத்தான் இந்த மசோதா என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூடுதல் வரிவிதிப்பு, கூடுதல் தண்ணீர் வரி (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 17/70) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவு 2, குருந்தலைப்பு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூடுதல் வரி விதிப்பு, கூடுதல் தண்ணீர் வரி (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 17/70) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஈ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மின்சக்தித் தீர்வை (செல்திறன் ஆக்குதல்) மசோதா* (சட்டப்பேரவை மசோதா எண் 19/70)

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பேரவைத் தலைவரவர்களே, "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மின்சக்தித் தீர்வை (செல்திறன் ஆக்குதல்) மசோதா * (சட்டப்பேரவை மசோதா எண். 19/70) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழி கின்றேன்.

செங்கோட்டை வட்டத்தில் இயங்கி வந்த செங்கோட்டை மின் வழங்கு நிறுவனம், மாநிலங்கள் சீரமைப்பு செய்யப்பட்டதன் விளைவாக 1—11—1956-ஆம் நாள் அன்று இம்மாநிலத்துக்கு மாற்றப்பட்டது. 1950-ஆம் ஆண்டு திருவிதாங்கூர்–கொச்சி மின் சக்தி தீர்வைச் சட்டத்தின் 3 (1) பிரிவின் கீழ் முன்னாள் திருவிதாங்கூர்–கொச்சி மாநிலத்திலுள்ள ஒவ்வொரு உரிமை தாரரும் வரையறுக்கப்பட்ட முறையில் ஒவ்வொரு மாதமும், ஒரு யூனிட்டுக்கு இரண்டணாவிற்கு மேற்பட்ட விலையில் முந்திய திங்களில் செய்யப்பட்ட மின்சக்தி விற்பனைகள் அனைத்தின் மீதும் யூனிட்டுக்கு 9 காசு வீதம் கணக்கிடப்பட்ட ஒரு தீர்வையை அரசுக்குச் செலுத்த வேண்டும். செங்கோட்டை மின்சக்தி வழங்கு நிறுவனம், அது நிறுவப்பட்ட நாள் முதற்கொண்டு 1959-ஆம் ஆண்டு திருவிதாங்கூர்–கொச்சி அரசுக்குத் தீர்வை செலுத்தவில்லை. தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு மின்சக்தித் தீர்வைச் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 5/1939) 1961-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதற்கொண்டு, தமிழ்நாடு 1960-ஆம் ஆண்டு (மாற்றப்பட்ட பகுதி) சட்டங்கள் நீட்டிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1960) 3-வது பிரிவின் கீழ் மாற்றப்பட்ட பகுதிகளுக்கு நீட்டிக்கப் பட்டது. எனவே, 1—11—1956-ல் தொடங்கி 31—3—1961 அன்று முடிவடையும் கால அளவில் செங்கோட்டை மின்சக்தி வழங்கல் நிறுவனம் செலுத்த வேண்டிய மின் சக்தித் தீர்வையை வசூலிப்பது குறித்து இந்த அரசு அக்கறை கொண்டுள்ளது. 1—4—1961 முதல் 30—11—1966 வரையுள்ள கால அளவுக்காக இந்த நிறுவனம் செலுத்தத்தக்க மின் சக்தித் தீர்வை தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு மின் சக்தித் தீர்வைச் சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்டது. 1—12—1966 முதற்கொண்டு தொடங்கிய கால அளவுக்கான நிலுவைகளை வசூலிப்பதற்காக வருவாய் வசூல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1—11—1956 முதல் 31—3—1961 காகச் செங்கோட்டை மின்சக்தி வழங்கு நிறுவனத்தினிடமிருந்து இந்த அரசுக்குச் சேரவேண்டிய மின்சக்தித் தீர்வை வசூலிப்பதற்காக 1956-ஆம் ஆண்டு மாநிலங்கள் சீரமைப்புச் சட்டத்தின் கீழ் கண்டுள்ள விதித்துறைகளைப் பயன்படுத்த இயலாது.

1—11—1956 முதல் 31—3—1961 வரையுள்ள கால அளவிற் காகச் செங்கோட்டை மின் சக்தி வழங்கு நிறுவனத்திடமிருந்து தீர்வை நிலுவைகளை வசூலிக்க நடவடிக்கைகளை எடுத்தபோது, மேற்படி நிறுவனம் 1950-ஆம் ஆண்டு திருவிதாங்கூர்–கொச்சி மின் சக்தித் தீர்வைச் சட்டத்தின் 3, 9 (2) பிரிவுகளில் கண்டுள்ள விதித் துறைகளின் செல்திறனை ஆட்சேபித்து ரிட் மனு ஒன்றை தாக்கல் செய்தது. தீர்வை நிலுவைகளை நிலவரி நிலுவைகளைப்போன்று

* 26—8—1970 தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. ஓ. பி. இராமன்] [1970 செப்டம்பர் 5

வசூலிப்பதைத் தடைசெய்து உயர்நீதிமன்றம் தடையாணை ஒன்றைப் பிறப்பித்தது. 1950-ஆம் ஆண்டு திருவாங்கூர்—கொச்சி மின் சக்தித் தீர்வைச் சட்டத்தின் 3-வது பிரிவைச் சேர்ந்த (1), (2) உட்பிரிவுகளும், 9-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (a), (b) பகுதிகளும் தீர்வை வீதங்களினளவையும், தீர்வை வீதங்களிலிருந்து விலக்களிக்கும் வரம்பையும் கொள்கை வரையறை அல்லது கோட்பாடு எதையும் குறிப்பிடாமல் முடிவுசெய்யும் அதிகாரத்தை மாநில அரசுக்கு அளித்துள்ள வரையில், வரம்புமீறிய சட்டமியற்றும் அதிகாரம் அரசுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதென்றும், எனவே, அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு அவை முரணானவை என்றும் உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்தது. மனுதார் தொகை செலுத்த வேண்டுமெனக் கேட்டிருப்பது அதிகாரமின்றியும், சட்ட விரோத மான முறையிலும் செய்யப்பட்டிருப்பதாகுமென்று உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்தது. கேரள அரசும் அந்த அரசுக்குச் சேரவேண்டிய தீர்வை நிலுவைகளை வசூல் செய்வதில் இதே போன்ற இடர்பாடுகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. தொடர்பான இந்த இடர்ப் பாட்டை நீக்குவதற்காக, 1965-ஆம் ஆண்டு கேரள மின்சக்தித் தீர்வை (செல்திறன்) சட்டம் இயற்றப்பட்டது. 1950-ஆம் ஆண்டு திருவிதாங்கூர்—கொச்சி மின்சக்தித் தீர்வைச் சட்டத்தின் கீழ் மின்சக்தி விற்பனையின் மீது தீர்வை விதித்து வசூலிப்பதைச் செல் திறனுக்கவே அச்சட்டம் இயற்றப்பட்டது.

தற்போதைய நேர்வில் 1950-ஆம் ஆண்டு திருவாங்கூர்—கொச்சி மின்சக்தித் தீர்வைச் சட்டத்தின் கீழ் தீர்வை முன்னரே விதிக்கப் பட்டது. 1962-ஆம் ஆண்டு 639-ஆம் எண் ரிட் மனுவில் சென்னை உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பைக் கருதி அரசு இதில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கையெல்லாம், வரி விதிப்பைச் செல்திறனுக்கு வதும், விதிக்கப்பட்ட வரியை வசூலிக்க அதிகாரமளிப்பதுந்தான். எனவே, 1956 நவம்பர் 1-ஆம் நாள் தொடங்கி 1961 மார்ச் 31-ஆம் நாள் அன்று முடிவடையும் கால அளவில், மேற்படி சட்டத்தின் கீழும் அதன் கீழ்ச்செய்யப்பட்ட விதிகளின் கீழும், தீர்வை விதிப்பதையும் வசூல் செய்வதையும், செல்திறனுக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

இத்தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளுமாறு இப்பேரவையை நான் வேண்டுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2, 3, 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

<u>மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்</u>: தலைவரவர்களே, "தமிழ் நாடு 1970-ம் ஆண்டு மின்சக்தித் தீர்வை (செல்திறன் ஆக்குதல்) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 19/70) நிறைவேற்றப் படவேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தம்—செல்திறன் ஆக்குதல்) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு 1970-ம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தம்–செல்திறன் ஆக்குதல்) மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(உ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்தம்—செல்திறன் ஆக்குதல்) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 20/70).

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவரவர்களே, "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்தம்–செல்திறன் ஆக்குதல்) மசோதா * (சட்டப்பேரவை மசோதா எண் 20/70) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

THIRU K. RAMAMOORTHI: Sir, I move—

"That the Tamil Nadu Panchayats (Second Amendment and Validation) Bill, 1970 (L.A. Bill No. 20 of 1970) be referred to a Select Committee consisting of . . . Members of the Assembly (names of Members to be furnished later)"

The amendment was duly seconded.

THIRU A. A. SUBBA RAJA: Sir, I move the following amendment—

"That the Tamil Nadu Panchayats (Second Amendment and Validation) Bill, 1970 (L.A. Bill No. 20 of 1970) be referred to a Select Committee consisting of . . . Members of the Assembly (names of Members to be furnished later)"

The amendment was duly seconded.

*மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே.

(திரு. கே. ஆர். கோவிந்தன் தலைமை)

வரி விதிக்கப்படாத தரிசு நிலங்கள் உட்பட ஒதுக்கப்படாத எல்லா காடுகளும் கிராமங்களின் நலனிற்காக ஊராட்சிகளால் பேணப்படும் பொருட்டு 1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு 35-ஆவது சட்டம்) 72-வது பிரிவின் கீழ் ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. இந்நிலங்கள் எந்த ஒரு பொதுக் காரியத்திற்குத் தேவைப்பட்ட போதிலும் தண்டனை நடவடிக்கை மூலமாகவன்றிப் பிறவகையில் இவற்றை ஊராட்சிகளிடமிருந்து திரும்பப் பெறுவதற்குச் சட்டத்தில் விதித்துறை எதுவுமில்லை. கட்டடங்கள்

*27—8—1970-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

கட்டுதல், தோப்புக்கள், பழத்தோட்டங்கள் முதலியன அமைத்தல் போன்ற காரியங்களுக்கு மட்டும் ஊராட்சிகளுக்கு இந்நிலங்கள் தேவைப்படுகின்றன; அவற்றின் தேவைகள் மிகச் சிறிதளவேயாகும். இவை சம்பந்தமாகவும், பெருமளவு முதலீடு செய்யவேண்டியிருத் தலின் ஊராட்சிகள் பெருந்திட்டங்களை மேற்கொள்ள இயலாது.

மேலும், கூட்டுறவு நிறுவனங்கள் போன்ற வெளி நிறுவனங்களின் உதவியின்றி இந்தப் பரந்த நிலங்களை ஊராட்சிகள் தங்களுக்குள்ள குறைந்த வருவாயைக்கொண்டு உயர்ந்த பலன் தரும் வகையில் பயன்படுத்த இயலாது. ஊராட்சிகள் இந்நிலங்களை ஒப்படை செய்யவும் இயலாது; எனவே, இந்த நிலங்கள், பெரும்பாலும் ஊராட்சிகளால் பயன்படுத்தப்படாமல் உள்ளன. அவைகள் ஊராட்சிகளிடமிருந்து திரும்பப் பெறமுடியாமையால் அவற்றை அரசும் பலனளிக்கும் வகையில் பயன்படுத்த இயலவில்லை. இந்நிலங்கள் பயனுள்ள காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட மீண்டும் கைக்கொள்வதற்கான அதிகாரம் அரசுக்கு இருக்கவேண்டுமென்று கருதப்பட்டது.

72-வது பிரிவின் கீழ் ஊராட்சிகளிடம் நிலைபெற்றுள்ள ஒதுக்கப் படாத காடுகளை எந்தச் சமயத்திலும் மீண்டும் கைக்கொள்வதற்கு, அரசால் கைக்கொள்ளப்படவிருக்கும் காட்டு நிலத்தைச் சீராக்கும் பொருட்டுச் செலவு செய்து, உற்பத்தியின் பொருட்டுத் தொழிலாளர் களை அமர்த்தி ஊராட்சிகள் எவையேனும் செயற்பட்டிருந்தால் அவ்வூராட்சிகளுக்கு இழப்பீடு அளிப்பதற்கான விதித்துறையுடன் இந்த மசோதா அரசுக்கு அதிகாரம் வழங்கக் கோருகிறது. இழப் பீட்டுத் தொகையைக் கணக்கெடுக்கையில், நிலத்தின் மதிப்பு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது, சீர்திருத்தம் செய்வ தற்காக அரசு ஏதேனும் மானியம் அளித்திருக்குமானல், அது செலுத்தப்படவிருக்கும் இழப்பீட்டுத் தொகையிலிருந்து கழித்துக் கொள்ளப்படும். ஒதுக்கப்படாத காடுகளில் இயற்கையாக வளர்ந்த மரங்களும் செடிகளும் இருக்குமானல் அத்தகைய மரம், செடிகளைச் சரியாகப் பாதுகாத்துப் பேணிவந்ததற்கான செலவுத் தொகை, இழப்பீட்டுத் தொகையாக அளிக்கப்படும். இழப்பீடு அளிக்கும் முறை, 1970-ஆம் ஆண்டு வங்கிக் கம்பெனிகள் (நிறுவனங்களைக் கையகப்படுத்துதல் அல்லது மாற்றுதல்) சட்டத்தின் 6 (2) பிரிவினை யொட்டி இருக்கும். இழப்பீடு சம்பந்தமான ஆணையால் குறைப் பட்டுக் கொள்ளும் ஊராட்சி மன்றம், வருவாய்த்துறை வாரியத்திற்கு மேல்முறையீடு செய்துகொள்ளலாம்; அதன் முடிவே இறுதியான தாகும். 1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் செயலுக்கு வந்த தேதியிலிருந்து அரசால் மேற்கொள்ளப்பட்ட எல்லா நிலங்களுக்கும் பொருந்தும் வகையில் மேற்சொன்ன விதித் துறை 1960, ஜனவரி, 1-ஆம் தேதியிலிருந்து செயற்படச் செய்யவும் இது முற்படுகிறது.

1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 116-வது பிரிவின்படி, நிர்ணயிக்கக்கூடிய உயர் அளவுக்கு உட்பட்டு உள்ளூர் செஸ் மேல்வாரியாக விதிக்கப்பட ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியக் குழுவிற்கும் உரிமையுள்ளது. உள்ளூர் செஸ் மேல்வரி விதிப்பின்

1970 செப்டம்பர் 5] [திரு. மா. முத்துசாமி]

உயர் அளவு வீதத்தை நிர்ணயிக்கும் விதி எதுவும் இல்லாதபோது, உள்ளூர் செஸ் மேல்வரி விதிப்பதற்கான அதிகார வரம்பு ஊராட்சி ஒன்றியக் குழுவிற்கு அமையவில்லையென சென்னை உயர்நீதி மன்றம் 853/69 எண் ரிட் மனுவில் தீர்ப்பளித்தது.

மேற்சொன்ன தீர்ப்பின் காரணமாக, விதிகளில், உள்ளூர் செஸ் மேல்வரி விதிப்பின் உயர் அளவு வீதத்தை நிர்ணயித்து அரசு விதியை திருத்தியமைத்துள்ளது. நிலங்கள் சம்பந்தமாகச் செலுத்தப் படும் நில வருவாயின் ஒவ்வொரு ரூபாய்க்கும் ஒரு ரூபாய் ஐம்பது காசு வீதம் சட்டத்திலேயே உள்ளூர் செஸ் மேல்வரியை விதிக்கும் உயர் அளவு வீதத்தைக் குறிப்பிடும் வகையில் இச்சட்டத்தின் 116-வது பிரிவைத் திருத்த இம்மசோதா முற்படுகிறது. இச்சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட உள்ளூர் செஸ் மேல்வரி விதித்து வசூலிக்கப்படுவதை, 1958-ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் செயலுக்கு வந்த தேதி முதல் செல்திறனுக்க இந்த மசோதா முற்படுகிறது.

இப்போதுள்ள உள்ளூர் சாலை மானிய உதவி முறையை மாற்று மாறும் முறையீடுகள் வந்துள்ளன. ஊராட்சி ஒன்றிய சாலைகளைப் பேணி வருவதற்காக மக்கள் தொகையில் ஒவ்வொருவருக்கும் 40 காசு வீதம் ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்குத் தற்போது உள்ளூர்ச் சாலை மானியத்தை அரசு அனுமதித்து வருகிறது. ஊராட்சி ஒன்றியங்கள் பேணிவரும் சாலைகளின் நீளத்தையோ அல்லது ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள தரைப் பகுதியின் தன்மையையோ இந்தத் திட்டம் கருத்தில் கொள்ளவில்லை. இதனால், மானியம் ஒதுக்குவதில் ஏற்றத்தாழ்வு நிலவியது. எனவே, ஊராட்சி ஒன்றியங்கள் பேணிவரும் சாலையின் நீளத்தையொட்டி மானியம் அளிப்பதைத் திருத்தியமைக்க முடிவெடுக்கப்பட்டது. அவ்வப்பொழுது அளிக்கப்படும் மானிய அளவைத் திரும்ப ஆராயும் அவசியத்தை இந்த முறை தவிர்க்கும். சாலைகளின் நீளத்தையும் அத்தகைய சாலைகளின் தன்மையையும் கருத்திற் கொண்டு ஊராட்சி ஒன்றியத் தொகுதியின் மதிப்பிடப்பட்ட மக்கள் தொகையில் ஒவ்வொருவருக்கும் அரசு நிர்ணயிக்கக்கூடிய தொகைக்கு, ஒவ்வொரு ஊராட்சி மன்றக் குழுவிற்கும் உள்ளூர்ச் சாலை மானியம் அளிக்கப்படுவது கணக்கிடப்படும் வகையில் இச்சட்டத்தின் 131-வது பிரிவைத் திருத்த இம்மசோதா கோருகிறது. நடப்பு ஆண்டிலிருந்து மானியம் அளிக்கப்படுவதைத் திருத்தியமைக்க இது குறித்துச் செய்யப்படவிருக்கும் திருத்தத்திற்கு 1970, ஏப்ரல் 1-ம் தேதி முதல் செல்திறன் அளிக்கவும் இது முற்படுகிறது.

இவை கூறி, இம்மன்றம் இந்த மசோதாவை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, தமிழ்நாடு பஞ்சாயத்துத் திருத்த மசோதா மிக மிக முக்கியமான மசோதா வாகும். பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில் இந்த அரசு எப்படிப்பட்ட ஒரு கொள்கையை வகுக்க இருக்கிறது என்பதற்கு இந்தத் திருத்த மசோதா சிறந்த எடுத்துக்காட்டாக அமைகிறதோ

என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. நேற்று முன்தினம் இந்த அவையிலே மாநில சுயாட்சிபற்றியும், மாநிலங்களுக்கு வரம்பில்லாத அதிகாரங்கள் எந்த அளவுக்கு இருக்க வேண்டுமென்பதுபற்றியும் பேசினுர்கள். அன்றைய தினமே பஞ்சாயத்துக்களுக்கும், ஊராட்சி மன்றங்களுக்கும், பெரு மன்றங்களுக்கும், நகர மன்றங்களுக்கும் எந்த அளவுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென்பதைப் பற்றியும், இன்றையதினம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் போதாது என்பதைப்பற்றியும் நாங்கள் பேசினேம். இந்த மசோதா அந்த விவாதத்தின்போது எழுப்பப்பட்ட அச்சத்தை உண்மைப்படுத்தும் வகையில் அமைந்திருக்கிறது.

ஊராட்சிகளுக்குச் சொந்தமாக உள்ள காடுகளை, அந்தந்தப் பகுதிகளில் ஒப்படைக்கப்பட்ட காடுகளை அரசாங்கம் திரும்பவும் எடுத்துக் கொள்ளுகின்ற நேரத்தில் ஊராட்சி மன்றங்களின் அனுமதியைப் பெருமலே, ஒப்புதலைப் பெருமலே எடுத்துக்கொள்ள முடியும் என்ற அளவிலே இந்தத் திருத்த மசோதா இன்றையதினம் வந்திருக்கிறது. அரசு அபிவிருத்தித் திட்டங்களைச் செய்வதற்காக ஊராட்சி மன்றப் பகுதிகளில் இருக்கும் இடங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றல் ஊராட்சி மன்றம் ஒப்புதல் அளிக்காதோ என்ற அச்சத்தின் அடிப்படையில் இந்த மசோதா வந்திருக்கிறது. அவர்கள் ஒப்புதல் தரமாட்டார்கள் என்ற ஐயப்பாடு ஏன் இந்த அரசுக்கு ஏற்பட்டது? அபிவிருத்தி வேலைகளைச் செய்யவேண்டுமென்று கேட்கும்போது எந்த ஊராட்சி மன்றமும் குறுக்கே நிற்பதில்லை, வேறு காரணங்கள் இருந்தாலொழிய. ஒப்படைக்கப்பட்ட காடுகளை அரசு தன்னிச்சையாக எடுத்துக் கொள்ளும் அதே நேரத்தில் இழப்புத் தொகை தருகிற முறை கூட நியாயமான முறையில் வகுக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அங்குள்ள மரங்களைப் பொறுத்தவரை அதை வளர்ப்பதற்கான செலவு செய்யப்பட்டதை மட்டுமே அரசு ஏற்றுக்கொள்ளும் என்றும், அந்த மரங்களின் மதிப்பீட்டுத் தொகையின் அடிப்படையில் இழப்புத் தொகை தராது என்றும் அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னுர்கள். பஞ்சாயத்துக்களுக்கு என்று அந்தப் பகுதிகள் ஒப்படைக்கப்பட்டு அதிலே பஞ்சாயத்துக்கள் மரங்களை வளர்த்திருந்தால் அந்த மரங்களின் மதிப்பீட்டின்படி இழப்பீட்டுத் தொகை தரப்பட வேண்டுமே தவிர, தண்ணீர் ஊற்ற செலவு, வேலி கட்டச் செலவு, காவல்காரன் போட்ட செலவு என்று மாத்திரம் பார்த்து இழப்பீட்டுத் தொகை தருவது முறையல்ல. இது பஞ்சாயத்துக்குச் சொந்தமான பொருள்களை, சொத்தை (அஸெட்ஸ்) அரசு பறித்துக் கொள்ளுகிறது என்ற நிலைமையைத்தான் ஏற்படுத்தும்.

இந்த நிலைமைகளைப் பார்க்கும்போது சமீபத்தில் நடந்த பஞ்சாயத்துத் தேர்தல்களின் விளைவாகத்தான் இப்படி ஒரு மசோதாவைக் கொண்டுவர வேண்டிய அவசியம் ஏற்பட்டதோ என்ற எங்களுடைய நியாயமான அச்சத்தை அமைச்சர் அவர்கள் அவ்வளவு சுலபமாக ஒதுக்கிவிட முடியாது. பஞ்சாயத்துத் தேர்தல்களில் இந்த அரசு எதிர்பார்த்ததைப் போல் நடக்காமல்

1970 செப்டம்பர் 5] [திரு. க. இராமமூர்த்தி]

எங்களுடைய கை அதிகமாக ஓங்கிவிட்டது என்பதன் காரணமாக பழிவாங்கும் முறையில், எங்களிடம் அதிகாரம் இருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்துவது போல்தான் இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

இந்த மசோதாவிலே உள்ளூர் செஸ் வரியைப்பற்றியும் தெரிவித்திருக்கிறார்கள். இந்த வரி விகிதாசாரத்தைப் பொறுத்தவரை இது அவ்வளவு சரியானதாக இருக்காது என்பதோடு செஸ் என்ற பெயரால் கிராம மக்கள் வைத்திருக்கும் நிலத்தின் மீதான வரியை அதிகப்படுத்திக்கொண்டு போகிறோம் என்பதை மறந்துவிடக் கூடாது. நில வரியை ரத்து செய்கிறோம் என்று சொல்லுகிறார்கள். வரி விதிப்பை அதிகப்படுத்தவில்லை என்று கூறுகிறார்கள். ஆனால் அதே நேரத்தில் பஞ்சாயத்துகளின் மூலமாக, மறைமுக வரி விதிப்பின் மூலமாக, சாதாரணமாக கிராம மக்கள் வரி கட்டினால் எவ்வளவு ஆகுமோ அதைவிட அதிகமாக விதித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த வரி விதிப்பு சரிதானா, இந்த நாட்டு விவசாய மக்களுக்கு நன்மை பயக்குமா என்பதை அரசு உணர்ந்து பார்க்க வேண்டும்.

ரோடுகளுக்கான மானிய உதவி பற்றியும் அதை மாற்ற வேண்டிய அவசியம்பற்றியும் குறிப்பிட்டார்கள். இன்றையதினம் இருக்கும் முறை தேவை இல்லை, மாற்ற வேண்டிய அவசியம் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். மாற்றுகின்ற முறையைப் பார்க்கும் போது அதுவும் பழி வாங்கும் முறையில்தான் இருக்கிறது. சாலைகளின் நீளத்தை மட்டுமல்லாது சாலைகளின் தன்மையையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறுகிறார்கள். அந்தச் சாலைகளின் தரத்தை யார் நிர்ணயிப்பது? அப்படி தரத்தை நிர்ணயிக்கின்றபோது எல்லாப் பஞ்சாயத்துகளுக்கும் ஒரே விதமான கண்ணோட்டத்துடன் நிர்ணயிக்கின்ற நிலைமை இருக்காது. வேண்டிய பஞ்சாயத்துகளுக்கு, அரசோடு, அதிகாரிகளோடு ஒத்துப் போகின்ற பஞ்சாயத்துகளுக்கு ஒரு தரமாகவும், வேண்டாத மற்றப் பஞ்சாயத்துகளுக்கு வேறு தரமாகவும் நிர்ணயிக்கப்படும் என்ற அச்சத்தை இந்த மசோதா ஏற்படுத்தியிருக்கிறது.

இதுபோன்ற அச்சகங்களுக்கு இடம் கொடுக்காத வகையில் இந்த மசோதா திருத்தியமைக்கப்பட வேண்டும். ஆகவே, இதை ஒரு பொறுக்குக் குழுவிற்கு அனுப்பி எல்லாக் கட்சி உறுப்பினர்களும் கலந்து ஆலோசித்து, பரிசீலித்து நல்ல முறையில் முடிவு எடுத்த பிறகு இந்த மன்றம் அதுபற்றி ஒரு முடிவு எடுக்கக்கூடிய வாய்ப்பை அளிக்கலாம் என்பதால் இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று வலியுறுத்தி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவைப் பொறுத்த மட்டில் இதை ஒரு பொறுக்குக் குழுவிற்கு விடவேண்டுமென்ற அபிப்பிராயத்தை ஏன் சொல்கிறோம் என்றால் பொதுவாகவே நாட்டிலே ஒவ்வொரு கட்டமாக மக்களால்

தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அடங்கிய குழுக்கள் ஆங்காங்கே அமைந்து வருகின்றன. அந்தந்த இடங்களுக்குத் தக்கபடி, அந்தந்த கிராமங்களிலுள்ள சூழ்நிலைகளையும், கலாசாரங்களையும் பொறுத்து எந்தெந்த வகையில் அந்தந்த இடங்களில் அபிவிருத்தி வேலைகள் எப்படி செய்யப்பட வேண்டும் என்பதைப்பற்றிய நிலைகளெல்லாம் அந்தக் குழுக்களுக்குத்தான் தெரியும். அவர்களால்தான் அதை நன்கு அறிய முடியும். அப்படிப்பட்டதொரு ஜனநாயக மரபை நாம் நம் நாட்டில் அனுஷ்டித்துக்கொண்டு வருகிறோம்.

நம் நாட்டில் அதிகாரங்கள் ஒருயிடத்தில் குவிந்து கிடப்பது பரவலாக்கப்பட வேண்டும் என்று கோருகிறோம். அதன் முதல் படியாக மத்திய அரசாங்கத்திடம் உள்ள அதிகாரங்கள் எல்லாம் பரவலாக்கப்பட்டு மாநில அரசாங்கங்களுக்கும், பின்பு அவை மாநில அரசாங்க அளவிலிருந்து நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும், பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் கொடுக்கப் படவேண்டும் என்று நேற்றைய முன்தினம் பேசிய பேச்சை அமைச்சர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்நிலையில் இம் மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. அன் ரிஸர்வ்ட் பாரஸ்ட் எல்லாவற்றையும் அந்தந்த பஞ்சாயத்துகளுக்கே இதுவரை ஒப்படைக்கப்பட்டு வந்திருக்கின்றன. எக்ஸிஸ்டிங் சட்டத்திலேயே அந்த அன்ரிஸர்வ்ட் ஃபாரஸ்ட்ஸ் எல்லாம் "ஃபார் தி பெனிஃபிட் ஆஃப் தி பஞ்சாயத்ஸ்' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இதன் நோக்கம் என்னவென்றால், அந்த ரிஸர்வ் ஃபாரஸ்ட்ஸ் அந்தக் கிராமங்களுக்கு அல்லது கிராம மக்களுக்கு அல்லது அந்தப் பஞ்சாயத்தில் உள்ள மக்களுக்கு நல்ல பல காரியங்களுக்காக பயன்பட வேண்டும், அவற்றில் பழத்தோட்டங்கள் போட்டு அவை பயனடையலாம், அல்லது நல்ல கட்டடங்கள் கட்டுவதற்காக அவை பயன்படுத்தப்பட்டு பயனடையலாம், அல்லது பாசன வசதிக்கான முறையில் சிறு சிறு குளங்கள் அல்லது குட்டைகள் அமைப்பது போன்றவை செய்து பயனடையலாம். இப்படி பல நல்ல காரியங் களுக்காக அவை பயன்படலாம் என்ற நோக்கத்தோடுதான் அப்படி செய்யப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க இந்த மசோதாவின் ஆப்ஜெக்ட்ஸ் அன்ட் ரீஸன்ஸில்

'for which they may require only parcels of land'

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு பஞ்சாயத்துக்கு அன் ரிஸர்வ்ட் ஃபாரஸ்ட் இவ்வளவு எக்ஸ்டென்ட்தான் இருக்கவேண்டும் என்பதல்ல. சிலயிடங்களில் ஒரு ஏக்கர் இருக்கலாம், சிலயிடங்களில் பத்து ஏக்கர்கள் இருக்கலாம், சிலயிடங்களில் அறுபது சென்ட்ஸ் கூட இருக்கலாம். அதுவும் கூட ஃபாரஸ்ட் என்று டெக்ளேர் செய்யப்பட்டிருக்கலாம். இப்போதுள்ள மசோதாப்படி பார்த்தால் ஒரு பஞ்சாயத்துக்கு இவ்வளவு ஏக்கர் அன்ரிஸர்வ்ட் பாரஸ்ட் தேவை இல்லை என்று கருதினால் அதைக் குறைக்கக்கூடிய அளவில், மேலே உள்ளதை அரசாங்கமே எடுத்துக் கொள்ளக் கூடிய வகை யில் அமைந்திருக்கிறது அந்த மசோதா என்பதை ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீஸன்ஸ்-ஐப் பார்த்தால் தெரியும்.

1970 செப்டம்பர் 5] [திரு. ஏ. அ. சுப்பராஜா]

இதில் 'லார்ஜ் ஸ்கீம்ஸ்' என்று போட்டிருக்கிறீர்கள். அது என்னவென்று புரியவில்லை. 20 அல்லது 30 ஏக்கர் என்று ஏரியா அதிகமாயிருந்தால் ஒரு வேளை 'லார்ஜ் ஸ்கீம்ஸ்' வரலாம் என்று எண்ணத் தோன்றலாம். ஆனால் இரண்டு ஏக்கர், ஐந்து ஏக்கர் என்று இருப்பதில் எப்படி "லார்ஜ் ஸ்கீம்ஸை"க் கொண்டுவர முடியும் என்பது புரியவில்லை. அப்படியிருந்தாலும் கூட பஞ்சாயத்துக்களால் லார்ஜ் ஸ்கீம்ஸ் கொண்டுவரக் கூடாது என்பதல்ல. எல்லாப் பஞ்சாயத்துக்களின் நிதிநிலைமையும் சரியாக இல்லை என்று வாதாட முடியாது. வசதியுள்ள பஞ்சாயத்துகளும் இருக்கின்றன.

எங்கள் பக்கத்தில் ஒரு பஞ்சாயத்து ஏரியாவில் ஆலங்குளம் சிமெண்ட்ஸ் இருக்கிறது, 'சிப் போர்ட்' பாக்டரி இருக்கிறது. அந்தச் சிறிய பஞ்சாயத்தில் இரண்டும் அமைந்திருக்கின்றன. ஆகவே அவர்கள் வேண்டுமென்றால் பெரிய ஸ்கீம்களை எடுத்து நடத்தலாம். அப்பேர்ப்பட்ட பஞ்சாயத்துகளும் இருக்கின்றன. ஆகவே 'பஞ்சாயத்தின் நிதிநிலைமையைப் பொறுத்து' என்று அப்படி ஒரு கிளாஸ் இதில் இருந்தால் இதற்காக வாதாடுவது கொஞ்சம் பொருத்தமுடையதாக இருக்கும். ஆனால் அப்படி அதுவும் இல்லை: "ஈர்ஸல்ஸ் ஆஃப் லான்ட்" என்றிருக்கிறது. அப்படி பார்ஸல்ஸ் ஆஃப் லான்ட் தான் உபயோகப்படுத்த முடியுமா?

ஆக, நீங்கள் எடுக்க நினைத்துள்ளது என்ன, அத்தனையையும் எடுக்கப் போகிறீர்களா அல்லது கொஞ்சம்தான் எடுக்கப் போகிறீர்களா என்பதைப்பற்றி எல்லாம் இந்த ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீஸன்ஸில் "வேகாக" இருக்கிறதே தவிர ஸ்பெசிஃபிக்காக நீங்கள் என்ன முறையில் செய்யப்போகிறீர்கள் என்பது இதில் தெளிவாக இல்லை.

அடுத்தபடியாக இந்தப் பஞ்சாயத்துகள் எல்லாம் இப்போது இருப்பதைப் போலவே எப்போதும் இருக்கும் என்று சொல்ல முடியாது. ஆகவே, அவைகளைப்பற்றிக் கவலை இல்லாத வகையில் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது.

'with the consent of the concerned panchayat'. "consent" என்ற வார்த்தையைக் கூடக் காணோம். அது கவனிக்க வேண்டிய தொரு விஷயம். "கன்ஸென்ட்" அல்லது "கன்ஸல்டேஷன்" என்று போட்டிருந்தால், பஞ்சாயத்து தலைவர்கள் பெரிய ஸ்கீம்களை எடுத்துக்கொள்ளக்கூடிய நிதி வசதி தங்களுக்கு இருக்கிறதா இல்லையா என்று தங்கள் கருத்தைச் சொல்லக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுமானால் இதைக் கொண்டுவருவதற்கான நல்லதொரு காரணத்தைக் காட்ட முடியும். அதுவும் இதில் இல்லை.

அடுத்தபடியாக, காம்பன்ஸேஷன். பஞ்சாயத்துகளின் நிதி நிலை மோசமாக இருக்கிறது, நிதி நிலை சரியாக இல்லை, ஆகவே எடுக்கிறோம் என்றால், இந்த காம்பன்ஸேஷன் பற்றிச் சொல்லும் போது அதற்கு என்னென்ன விதிகள் இருக்கின்றன என்பது ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறது.

'The amount of compensation referred to in sub-section (2) shall be given to every Panchayat at its option. . .

என்றிருக்கிறது. அவர்கள் "ஆப்ஷன்" என்னவாக இருந்தாலும் அதுதான் செல்லும் என்றிருக்கிறதா? அவர்கள் பணமாகவே வேண்டும் என்று சொன்னால் அப்படியே பணமாகக் கொடுத்து விடுகிறோமா? இந்த செக்ஷனை திருத்தியமைத்தால் நல்லது. காம்பென்ஸேஷன் கொடுப்பது என்பது பலவகையில் சொல்லப் பட்டிருக்கிறது. Spontaneous growth of trees என்பதை யார் அஸெஸ் செய்வது?

' If it is not spontaneous, it would not be eligible for compensation '.

என்றிருக்கிறது. நான் சொல்கிறேன் அவை ஸ்பான்டேனியஸாக வந்த மரங்கள் அல்லவென்று.

ஆக, இந்த மாதிரிப்பட்ட பிரச்னைகளைத் தீர்க்க இதில் என்ன வழி செய்யப்பட்டிருக்கிறது என்பது புரியவில்லை. காம்பன்ஸேஷன் பொறுத்தவரையில் நலிந்து கிடக்கும் பஞ்சாயத்துக்களுக்கு பண மாகவே கொடுப்பது நல்லது. அப்படி ஒரு பஞ்சாயத்து பணமாக வேண்டாம் என்று சொன்னால் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய தில்லை. காம்பன்ஸேஷன் பற்றிய விதிகளில் என்னென்னவெல்லாமோ போட்டிருக்கிறீர்கள். அவை தெளிவாக இருத்தல் வேண்டும்.

இதில் ஏதாவது தகராறுகள் வந்தால் அதை யார் தீர்ப்பது, யார் தீர்ப்பு செல்லும், எங்கே அப்பீல் செய்வது, ஃபைனல் டிஸிஷன் யாருடையது என்பவையெல்லாம் "வேகாக" இருக்கிறது. இதனால் குழப்பம்தான் ஏற்படுமே தவிர நல்லது ஏற்படும் நிலையில் இல்லை.

............in the case of trees and plants........

என்றிருக்கிறது. 'ட்ரீஸ்' என்றால் என்ன அர்த்தம்? 'ட்ரீஸ்' இருக்கின்றன. "புஷஸ்" இருக்கின்றன. "கர்த்" எவ்வளவு இருந் தால் அது "ட்ரீ" ஆகும் என்பதும் "வேகாக" இருக்கிறது. ஆகவே, இவற்றையெல்லாம் தெளிவாக்க வேண்டுமென்றுதான் சொல்கிறேன். இவ்வளவு இன்சஸ் "கர்த்" இருந்தால்தான் அது மரம் ஆகும் என்று இருக்கிறதா? ஆகவே இது, காம்பன்சேஷன் கொடுப்பது அவையெல்லாம் "ஸ்பெஸிஃபிக்காக இல்லை". பஞ்சா யத்துக்கள் அன் ரிஸர்வ்ட் பாரஸ்டில் இவ்வளவு மரங்கள் இருக் கின்றன என்ற ஒரு லிஸ்டைக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அவர்கள் என்ன செய்வார்கள்? ஆக, இப்படி பலவிதச் சிக்கல்கள் இருப்பதால் இதை ஒரு பொறுக்குக் குழுவிற்கு அனுப்பி, பஞ்சா யத்துக்களையெல்லாம் கலந்து நல்லதொரு முடிவு எடுப்பதுதான் நல்லது என்பது என் அபிப்பிராயம்.

இந்த லோகல் செஸ் சார்ஜ், "செக்ஷன் 116", "பிரபோஸ்ட்" செக்ஷன் 116 இதிலே ரூ. 1.50 என்று போடப்பட்டு இருக்கிறது. இது முந்தி இருப்பதைவிட சாதாரணமாக ரூ. 1-க்கு ரூ. 1½ வீதம்

50 சதவிகிதம் கூடுதலாக வருகிறது. இப்போதே பார்த்தால் அநேகமாக எல்லா இடங்களிலும் விவசாயிகள் தீர்வை கட்ட முடியாத அளவில் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கும் சூழ் நிலை இருக்கிறது. எனவே, இப்போது எங்கே பார்த்தாலும் வரி வஜா செய்கிறோம். மழை இல்லை பஞ்சம் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறோம். அதே நேரத்தில் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு மாதிரி இருக்கிறது. ரூ. 1 இருக்கிறது. ரூ. 1.50 சில இடங்களில் இருக்கிறது. ஆகையால், இது மாதிரி செஸ், டாக்ஸேஷன் $1\frac{1}{2}$ வீதம் போடப்பட்டால் எல்லா விவசாயிகளும் கொடுக்க முடியாது. அவர்களுடைய பொருளாதாரம் இடம் கொடுக்குமா என்பது சந்தேகத்திற்குரியது. இதையும், விவசாயிகள், பஞ்சாயத்து தலைவர்கள், கிராம பஞ்சாயத்து தலைவர்கள், பெரும் தலைவர்களின் அபிப்பிராயத்திற்கு அனுப்ப வேண்டுமானால், செலக்ட் கமிட்டிக்கு போக வேண்டும்.

ரோடு கிராண்ட்ஸ் பஞ்சாயத்திலுள்ள மதிப்பிட்டுள்ள ஜனத் தொகையின் "பெர் ஹெட்" கொடுக்கப்படும் என்று இருக்கிறது. இதை நான் வரவேற்கிறேன். 'பெர் ஹெட்' கொடுப்பதைக் காட்டிலும் ரோடுகளின் அகல நீளத்தைப் பொறுத்துக் கொடுக்க லாம். ஏனென்றால், சில இடங்களில் ஜனத்தொகை அதிகமாக இருக்கலாம். சில இடங்களில் ஜனத்தொகை குறைவாக இருக்கலாம். ஜனத்தொகை குறைவான இடங்களுக்கு கொஞ்சம் பணம் வரும். அதிகமான இடத்தில் உள்ளவர்களுக்கு அதிகமான பணம் வரும். அவர்கள் என்ன செய்வது என்று புரியாமல் இருக்கலாம். அதே நேரத்தில் ஜனத்தொகை குறைவாக இருந் தாலும் நீளமான கிராமங்கள் பல இடங்களில் அமைந்து இருப்ப தால், அங்கே ரோடு போடுவது நியாயம். அதிகமான நீளம் இருப்பதால் அந்தக் கிராமத்திற்கு அதிகமான தொகை கொடுக்க வேண்டும். இந்த நிலைபற்றி சிந்திக்க வேண்டும். இதிலே unnecessary complications என்ன இருக்கிறது என்று தெரிய வில்லை. இதையெல்லாம் பார்த்து, நீளத்தையும் 'பேசிஸ்' என்று வைத்தால் நல்லது என்பது என் அபிப்பிராயம். இதையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு பல சட்டப் பிரச்னையில் 'கிளாஷ்' இருப்பதால் இந்த proposed sub-section-clause proviso- -ஐ கொஞ்சம் ஆழ்ந்து பார்த்தால் இதைப் பொறுக்குக் குழுக்கு அனுப்ப வேண்டும். ஆகவே, இதைப் பொறுக்குக் குழுக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. வை. சுவாமிநாதன்: தலைவரவர்களே, பொதுவாக இந்த பஞ்சாயத்துக்கு சொந்தமான இடத்தை எடுத்துக்கொள்வது என்பது பஞ்சாயத்துகளுக்கு கொடுக்கப்பட்ட உரிமையைப் பரிப்ப தாகும். இந்த இடங்களை வாங்குவதற்கு 10 ஆண்டுகளுக்கும் மேலாக பல இடங்களில் ரெவின்யூ அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ள வேண்டியிருந்தது. இப்போது ஓரளவு பஞ்சாயத்து களுக்கு சில இடங்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. 'அன் ரீசர்வ்ட் பாரஸ்ட்' எடுத்துக்கொண்டால் பஞ்சாயத்துகளுக்கு இருக்கும் உரிமையைப் பறிக்கக்கூடியதாகும். இப்போது

மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று கேட்கிறபோது, பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கும் அதிகாரங்களை பறிப்பது என்பது, மாநில சுயாட்சிக்கு கொடுக்கப்பட்ட மதிப்பைக் குறைப்பதாகும்.

எந்தக் காரியத்தைச் செய்தாலும் சரி, கிராம அடிப்படை யில்தான் செய்யப்படுகிறது. கிராமத்தில்தான் நல்ல காரியங்கள் முதலில் செய்யப்படுகின்றன. பஞ்சாயத்துகளோ, பஞ்சாயத்து ஒன்றியமோ இல்லாமல் ஒரு காரியத்தையும் செய்ய முடியாது. கிராமங்களின் உதவி இல்லாமல் அரசாங்கம் எப்படி இவற்றைச் செய்ய முடியும் என்பது புரியவில்லை. எந்த அபிவிருத்தி வேலை செய்தாலும் கூட பஞ்சாயத்துக்கு வேண்டிய தொகை கொடுத்துவிட்டால் அது செய்துவிடும். இதனால் அவர்களுடைய வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள முடியும். இவற்றை அரசாங்கம் எடுத்துக்கொள்வது என்பது பஞ்சாயத்துக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை பறிப்ப தாகும், குறைப்பதாகும்.

எங்கள் கட்சி நண்பர் திரு. ராமமூர்த்தி கூறியது போல், அரசாங்கம் இதை நன்றாக பரிசீலிக்க வேண்டும். அவசர அவசரமாக சட்டத்தைக்கொண்டு வருவதன் காரணமாக பல குறைகள் ஏற்படுகின்றன. ஆகவே, இதை செலக்ட் கமிட்டிக்கு விட்டு நன்றாக பரிசீலித்துச் செய்தால் நன்றாக இருக்கும்.

அன்ரிசர்வ்டு பாரஸ்ட் என்று சொல்லும்போது, அங்கே இருக்கும் மரங்களுக்கு மாவட்ட அதிகாரி நிர்ணயிக்கும் தொகை கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் என்ன வென்றால், பெரிய மரங்களுக்குக் கூட ரூ. 5, ரூ. 10 என்று நிர்ணயம் செய்துவிடுகிறார்கள். இதை நிர்ணயம் செய்யும்போது கிராம முன்சீப்பையோ அல்லது ரெவின்யூ இன்ஸ்பெக்டரையோ வைத்துக் கொண்டுதான் நிர்ணயம் செய்கிறார்கள். ரூ. 100 பெறக்கூடிய மரங்களுக்குக் கூட ரூ. 5 என்று சொல்லிவிடுகிறார்கள். அந்தந்த மரத்தின் தனித் தன்மையை வைத்து நிர்ணயம் செய்யமாட்டார்கள். இதனால் பஞ்சாயத்து உரிமைகள் பாதிக்கப்படுகின்றன. உரிமை குறைக்கப்படுகிறது. இதை ஆராய்ந்து செய்ய வேண்டும்.

ரோடுகள் பராமரிப்புக்காக பணம் நீள அடிப்படையில் பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுப்பதை வரவேற்கிறோம். இதைச் செய்யவேண்டுமென்று பல வருஷங்களாக பல பகுதிகளி லிருந்து கேட்கப்பட்டு, இன்று ஓரளவுக்கு அந்த உரிமை வழங்கப் பட்டு இருக்கிறது. அந்த உரிமை கொடுக்கப்பட்டதிலே நான் பெருமை அடைகிறேன். அதே சமயத்தில் பல சிக்கல்கள் இருக்கின்றன. நீள அடிப்படையை தவிர மக்கள் தொகை கணக் கிட்டும் ஒரு பங்கு கொடுக்க வேண்டும் என்று இருப்பதனால் பல சிக்கல்கள் ஏற்படும். சில இடங்களில் ரோடுகள் மோசமாக இருக்கும் நிலை இருக்கிறது. இரண்டும் கலந்து வருவதால் சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஒன்று நீள அடிப்படையில் பூரா பணம் கொடுப்பது. அல்லது தொழில் அபிவிருத்திக்குத் தகுந்த மாதிரி

ரோடின் தன்மை அறிந்து கொடுப்பது என்று இருக்கவேண்டும். இந்த விஷயத்தில் சட்டம் கிளியராக இல்லாவிட்டால் பல குழப்பம் ஏற்படும். ஆகவே, நன்கு ஆராய்ந்து நல்ல முறையில் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும்.

திரு. ஆர். சீனிவாசக நாய்க்கர் : தலைவரவர்களே, கிராம பஞ்சாயத்துக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களை அரசாங்கம் எடுத்துக் கொள்வதற்காக சட்டம் வருகிற மாதிரி தெரிகிறது. கிராமப் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கப்பட்ட புறம்போக்குகள், ஒற்றைப் புறம்போக்குகள், தருவை தரிசுகள், மற்ற தரிசுகள் இம்மாதிரி நிலங்கள் எல்லாம் கிராமப் பஞ்சாயத்துக்குக் கொடுக்கப்பட்டு இருந்தும், இது வரைக்கும் ரெவின்யூ அதிகாரத்திலிருந்து கிராம பஞ்சாயத்துகளுக்கு எடுத்துக்கொள்ள முடியாமல் இருந்து, தற்போது தான் எடுத்துக் கொண்டு இருக்கிறது. எடுத்துக்கொண்ட நிலங்களைக் கூட அங்குள்ள விவசாயிகளுக்கு ஒதுக்கீடு செய்வதற்கு அரசாங்கத்திற்கு சிபார்சு செய்து அந்த நிலங்களை நிலம் இல்லாத விவசாயிகளுக்கு சாகுபடி செய்யக்கூடிய நிலையில் தர வேண்டும் என்று சொல்லி இருக்கிறது. ஆகவே இதை அரசாங்கம் எடுத்துக்கொள்ளாது அங்கே யார் யாருக்கு வழங்கலாம் என்று சொல்லவேண்டும். ஆகையால் கிராமப் பஞ்சாயத்துக்குக் கொடுத்த நிலங்களை கிராமப் பஞ்சாயத்திலிருந்து எடுத்துக்கொள்வது என்பது சரியல்ல. கிராமப் பஞ்சாயத்துகள் ஊக்கத்துடன் நடந்துகொள்ளவில்லை என்ற காரணத்தால் அரசாங்கம் அந்த நிலத்தை எடுத்து நல்ல விதமாகச் செய்யலாம் என்ற நல்ல நோக்கத்தோடு இந்த சட்டத்தைக் கொண்டு வருகிற மாதிரி தெரிகிறது.

அம்மாதிரி நல்ல நோக்கம் அரசாங்கத்திற்கு இருக்குமானல் கிராமப் பஞ்சாயத்துகளின் மூலமாகவே அந்த நிலங்களை நல்ல வழியில் நல்ல விதமாக வருமானம் கொண்டு வருகிற நிலையில் செய்யலாம். அந்த வருமானத்தை அரசாங்கம் கிராமப் பஞ்சாயத்துகளுக்குக் கடனுக கொடுத்து உதவி செய்யலாம். இதனுல் பஞ்சாயத்துகளுக்கு வருமானம் பெருகும். ஆகவே, அரசாங்கம் எடுத்துக்கொள்வது அவ்வளவு சரியான முறை என்று தெரியவில்லை. அரசாங்கம் இதைச் செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி, கிராமப் பஞ்சாயத்தினிடம் ஒப்புதல் பெற்று அதற்குப்பின் அரசாங்கம் முடிவுக்கு வரவேண்டுமென்று என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. பி. எஸ். தனுஷ்கோடி : தலைவர் அவர்களே, பஞ்சாயத்துகளுக்கு அதிக வருவாய் வருவதற்காகத்தான் தமிழகத்தில் இருக்கக் கூடிய ஊராட்சி மன்றங்களின் தலைவர்கள் பூராவும் ஒன்று கூடி அந்த ஊராட்சி மன்றத் தலைவர்கள் சங்கத்தின் சார்பாக, முன்னுல் காங்கிரஸ் அரசாங்கத்தில் கிராமங்களுக்கு அபிவிருத்தித் திட்டத்தை நாம் கொண்டுவரக்கூடிய நேரத்தில் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு நிதி பற்றுக்குறை இருப்பதன் காரணமாக, பஞ்சாயத்துக்களின் வருவாயைப் பெருக்குவதற்காக, கிராமப்புறங்களில் இருக்கக் கூடிய சர்க்காருக்குச் சொந்தமான, பஞ்சாயத்து எல்லைக்கு உட்பட்டிருக்கக் கூடிய புறம்போக்கு பூராவும் பஞ்சாயத்துகளிடம் ஒப்படைக்கப்பட-

வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அதன் மூலம்தான் வருவாயைப் பெருக்குவதற்கும், சர்க்கார் கொண்டுவருகிற அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கும், மக்களின் பங்குத் தொகை, அல்லது பஞ்சாயத்துகளின் பங்குத் தொகை கொடுப்ப தற்கும் அனுகூலமாக இருக்கும். சில பஞ்சாயத்துகளில் நிதி பற்றுக்குறை இருப்பதினால், அவர்களால் தாங்கள் கொடுக்க வேண்டிய பங்கைக் கொடுக்க முடியவில்லை. பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கக்கூடிய புறம்போக்கு நிலங்களின் மூலம்தான் பஞ்சாயத்து களில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதற்கும், வருவாயைப் பெருக்கிக்கொள்வதற்கும் ஏதுவாக இருக்கும்.

உதாரணமாகக் கூறுகின்றேன். என்னுடைய பஞ்சாயத்தைப் பொறுத்த வரையில் ரூ. 1,800 வருமானம் வருகிறது, எல்லா வருமானத்தையும் சேர்த்து ஆண்டு ஒன்றுக்கு. ஆண்டு ஒன்றுக்கு நிர்வாகச் செலவு ரூ. 4,800. ரூ. 1,800 வருமானத்தை வைத்துக் கொண்டு, ரூ. 4,800 நிர்வாகச் செலவு செய்யமுடியாது. ஊராட்சி மன்றங்களிடம் ஒப்படைக்கப்பட்ட புறம்போக்கு குளங்கள், பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்ட புறம்போக்கு இடங்கள் எல்லாம் அபிவிருத்தி வேலைகள் செய்யப்பட்டு, தென்னங்கன்றுகள் போடப்பட்டு, குளங்களைச் சுற்றி வாழைகள் போடப்பட்டு, இந்த வருடத்தில் வாழை மூலம் வருமானம் ரூ. 780 கிடைத்திருக்கிறது, வாழைக்காய் விற்று முதல் மட்டும். அதன் மூலம் அபிவிருத்தி வேலைகளுக்கு உதவிகரமாக இருக்கிறது.

அதுமட்டுமல்ல, பல வருஷங்களாக புறம்போக்கு குளங்கள் தனியார்களுக்குச் சொந்தமாக இருந்தன. அரசாங்கம் இவைகளை பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைத்த பிறகு அதன் மூலம் பாசிக் குத்தகை வருமானம் வருகிறது. அப்படி அதன் மூலம் வருமானம் கிடைப்பதினால் சர்க்கார் கொண்டுவரக்கூடிய அபிவிருத்தித் திட்டங் களை நிறைவேற்ற முடியும். இல்லையென்றால், முடியாது. ஏதாவது நிலம் அரசாங்கத்திற்குத் தேவை என்று சொன்னால், அப்படி ஒப்படைத்திருக்கக்கூடிய நிலம் பஞ்சாயத்திற்குத் தேவையில்லாத இடமாக இருந்து, சர்க்காருக்குத் தேவையான ஒரு இடமாக இருந்தால், அதை பஞ்சாயத்தினுடைய அபிப்பிராயத்தைக் கேட்டு, சர்க்கார் எடுத்துக்கொள்வதில் ஆட்சேபனை கிடையாது. பஞ்சா யத்துக்களின் வருமானத்தை வைத்துக்கொண்டு தான், நிதி நிலையை வைத்துக்கொண்டுதான் பல அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்ற முடியும். அப்படி சர்க்கார் நிலத்தை எடுத்துக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தின் சம்மதத்தைப் பெற வேண்டும். இது மாதிரி பல புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அவை களிலும் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

பஞ்சாயத்திடம் ஒப்படைக்கப்பட்ட நிலம் 100 ஏக்கர் இருந்தால், அதை மேய்ச்சல் காடு என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஏதோ ஒரு காலத்தில் அது மேய்ச்சல் காடாக இருந்திருக்கலாம். ஆனால் அந்த இடத்தில் இப்பொழுது ஒரு புல் கூட முளைப்ப தற்கு இடம் இருக்காது. அந்த மாதிரி இடம் சர்க்காருக்குத்

தேவைப்பட்டால், அந்தக் கிளாஸை மாற்றி, உணவு உற்பத்தித் திட்டத்தின்கீழ் அதைக் கொண்டு வரவேண்டுமென்றால், காடு வளர்க்க வேண்டுமென்றால், அதைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

தஞ்சை மாவட்டத்தில் சர்க்கார் புறம்போக்கு குளங்கள், ரெவின்யூ புறம்போக்கு நிலங்கள் பூராவும் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்காமல் இருக்கின்றன. அவைகளின் மூலம் தனியார்கள் வருமானம் அடைகிறார்கள். ஊராட்சி மன்றங்கள் குளத்தை வெட்டவேண்டியிருக்கிறது. பாதுகாக்க வேண்டியிருக்கிறது. பஞ்சாயத்துக்களின் நிதிப் பற்றாக்குறை காரணமாக அந்த வேலைகள் செய்ய முடியவில்லை. அதனால் ஜனங்களிடம் அதிருப்தி ஏற்படுகிறது. அந்த இடங்களைப் பூராவும் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைத்தால். பஞ்சாயத்துக்களின் வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்கு நலமாக இருக்கும். அங்கு ஜனங்களுக்கு நல்ல குடிதண்ணீர் கிடைக்கும். சில இடங்களில் குளத்துத் தண்ணீரைத் தான் குடி தண்ணீராக சாப்பிட வேண்டியிருக்கிறது. அதற்கு தனியார்கள் அனுமதி கிடையாது. ஆகவே, சர்க்கார் புறம்போக்கு குளங்கள் அந்த மாதிரி இடங்களில் கணக்கெடுத்து, ரெவின்யூ அதிகாரிகளின் மூலம் கணக்கெடுத்து. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் விவரம் கேட்டு, அம்மாதிரி இடங்களை பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

ரெவின்யூ இலாகா மர மகசூல், ஹைவேஸ் இலாகா மர மகசூல் பஞ்சாயத்துக்களுக்குக் கிடைக்க வேண்டும். என்னுடைய பஞ்சாயத்தில் இருக்கக்கூடிய வருமானத்தைப்பற்றிக் கூற விரும்புகிறேன்.

ஹைவேஸ்க்கு பஞ்சாயத்தின் மூலம் செலுத்துவது ரூ. 130.26 காசு. பஞ்சாயத்துகளிடம் ஒப்படைத்ததனால் ஒரு வருஷத்திற்கு ரூ. 1,000, 800 கிடைக்கிறது. இதுவரைக்கும் தனியார்கள் ஏலம் எடுத்துக்கொண்டிருந்தார்கள். 4, 5 பர்லாங்கு தூரத்தில் இருக்கக்கூடிய 300, 400 மரங்களை ரூ. 11, 12-க்கு இதற்கு முன்பு ஏலம் கொடுத்தார்கள். அதை பெரிய மனிதர்கள் எடுத்தார்கள். பஞ்சாயத்துக்களிடம் வந்த பிறகு, ஒவ்வொரு மரமாக ஏலம் போடுவதன் மூலம் பஞ்சாயத்திற்கு நல்ல வருமானம் கிடைக்கிறது.

பஞ்சாயத்துக்களிலே அபிவிருத்தி திட்டங்களை நாம் கொண்டு வரவேண்டுமென்று சொன்னால், சர்க்கார் ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னால், கிராம பஞ்சாயத்துகளுடைய பொருளாதார நிலை உயர வேண்டும், வருவாய் பெருக வேண்டும். ஆகவே, பஞ்சாயத்துகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கக் கூடிய புறம்போக்குகள் பஞ்சாயத்துகளிடமே இருக்க வேண்டும். அப்படி அவைகளில் ஏதாவது சர்க்காருக்குத் தேவை என்று கருதினால், பஞ்சாயத்துகளின் சம்மதம் இல்லாமல் அவைகளை எடுத்துக்கொள்ளக்கூடாது என்ற கருத்தைக் கூறி, முடிக்கிறேன்.

*திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்ட புறம்போக்குகளை பஞ்சாயத்துத் தலைவர்களின் அனுமதி இல்லாமலே அரசாங்கம் எடுத்துக் கொள்வது

என்பது அவ்வளவு முறையான காரியம் ஆகாது. காரணம் என்ன வென்றால், கிராமப் புறங்களில் உள்ள பஞ்சாயத்து எல்லைகளிலுள்ள புறம் போக்கு நிலங்களில் மரங்களை வைத்துப் பயிரிடுவதன் மூலம், உதாரணமாக தென்னை மரங்கள் வைப்பதன் மூலம், பஞ்சாயத்து களுக்கு வருமானம் வருகிறது. அதைக்கூட அரசாங்கம் எடுத்துக் கொண்டு விட்டால், பஞ்சாயத்துக்களின் வருமானம் குறைந்து விடும். பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு இருக்கிற உரிமை, பஞ்சா யத்து ராஜ்யத்திற்கு இருக்கிற உரிமை, அரசாங்கத்தினால் பறிக்கப் படுகிறது என்று பொதுவாக மக்கள் நினைப்பதற்கு இது இடம் அளிக்கும். எனவே, பஞ்சாயத்துகளிடம் ஒப்படைக்கப்பட்ட புறம் போக்குகள் பஞ்சாயத்துகளிடமே இருக்கவேண்டும்.

சில இடங்களில் இந்தப் புறம்போக்கு நிலங்கள் மேய்ச்சல் தரை யாக உபயோகப்படுகிறது. சில இடங்களில் நஞ்சையாக இருந் தால், பஞ்சாயத்தே நிர்வாகம் செய்து, சாகுபடி செய்து, அதன் மூலம் வருகிற வருமானத்தை பஞ்சாயத்து எடுத்துக்கொள்கிறது. பள்ளி மதிய உணவுக்குக்கூட அதிலிருந்து பணம் கொடுக்கிறார்கள். இம்மாதிரி புறம்போக்கு நிலங்களை அரசாங்கமே எடுத்துக்கொண்டு விட்டால், பஞ்சாயத்துத் தலைவர்களின் அதிகாரம் பறிபோவது மட்டுமல்ல, சில இடங்களில் பஞ்சாயத்துகள் இப்படிப்பட்ட புறம்போக்கு நிலங்களை ஏழை எளியவர்களுக்கு அடமானம் செய்து கொடுக்கின்றன. இந்த நிலங்களை அரசாங்கமே எடுத்துக்கொண்டு விட்டால், எங்கேயோ இருப்பவர்களுக்குத்தான் அடமானம் கிடைக்கும். பஞ்சாயத்துகளில் உள்ள ஏழை எளியவர்களுக்கு இப்படிப்பட்ட புறம்போக்கு நிலங்கள் அடமானம் கிடைக்காமல் போய் விடும். ஆகவே, புறம்போக்கு நிலங்களை அரசாங்கம் மேற் கொள்வது முறையானது அல்ல. நாம் எவ்வளவோ அதிகாரங் களைக் கேட்கிறோம், நமக்குக் கீழே இருக்கிற அதிகாரங்களைப் பிடுங்கிக்கொள்கிறோம், இது போன்ற நிலைமை கூடாது. ஆகவே, இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டியின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ரோடு கிராண்டுகளைப் பொறுத்தவரையில் இது மிக நல்லமுறையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதைத் தெளிவாக செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பின்தங்கிய பகுதிகளாக இருக்கிற இடங்களில் பஞ்சாயத்துகளின் வருமானம் போதவில்லை. ஒரு ஆண்டுக்கு ஒரு மைல், இரண்டு மைல் தூரம் கூட ரோடு போட முடிவதில்லை. ஆகவே, இது சம்பந்தமாக பின்தங்கிய பகுதிகளுக்கு அதிக சலுகைகள் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, பஞ்சாயத்து புறம்போக்குகளை அரசாங்கம் எடுத்துக்கொள்வது சரியான முறையல்ல என்று கூறி, இந்த மசோதாவை செலக்ட் கமிட்டியின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Dr. H.V. Hande : Sir, in the Financial Memorandum attached to this Bill it is stated—

'The Bill provides for the payment of compensation to the Panchayats who have incurred any expenditure and put in any productive labour for the development of any unreserved forest,

1970 செப்டம்பர் 5] [Dr. H. V. Hande]

which is vested in the Panchayats from the commencement of the Tamil Nadu Panchayats Act, 1958 . . . . .'

Now this power is sought to be delegated to the State Government. I only want to refer to this aspect of the matter for the consideration of the Government. When we are talking day-in and day-out about the delegation of more and more powers from the Centre to the States and also when Panchayat Union Chairmen and Municipal Chairmen are also making requests that as far as possible local bodies must have greater powers and when decentralisation is the order of the day and also the fashion of the day, how is it that we are now taking away certain powers from the hands of Panchayats and Panchayat Unions and vesting those powers with the State Government? Will this not displease a number of persons who believe in Panchayat Raj and Gram Raj? Also have the Government taken the opinion of the new Panchayat Union Chairmen who have recently been elected? Also, will it not be better if this Government take the opinion of all 375 Panchayat Union Chairmen and find out whether they are also willing to delegate these powers to the State Government? This is the only point which I request the Hon. Minister to take into consideration.

<u>மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:</u> தலைவர் அவர்களே, இந்த பஞ்சாயத்து சட்டத்தில் ஏற்படுகின்ற சில திருத்தங்களைப்பற்றிக் கொண்டு வரப்பட்ட மசோதாவின் மீது பல்வேறு கட்சியைச் சார்ந்த அங்கத்தினர்களும் தங்களுடைய கருத்துக்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

நம்முடைய மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள், இந்த மசோதாவை இங்கு நான் பிரேரேபிக்கிற நேரத்தில் எனக்கு ஏதோ அரசியல் நோக்கு இருந்து, இந்தக் காரியம் செய்யப் படுகிறது என்ற ஐயப்பாடு இருப்பதாக அவர்கள் எடுத்துத் தெரி வித்தார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்னவென்றால், இம்மாதிரி ஒரு மசோதாவைக் கொண்டு வரவேண்டுமென்று நினைத்து, கடந்த ஓராண்டு இரண்டாண்டு கால மாக பரிசீலிக்கப்பட்டு வருகிற ஒரு காரியமாகும் இது. சென்ற மாதத்தில் நடைபெற்ற தேர்தலின் அடிப்படையை வைத்து தயாரிக் கப்பட்டு இந்த மன்றத்தில் கொண்டு வரப்பட்ட ஒன்றல்ல இந்த மசோதா.

இரண்டாவதாக, அவர்களுடைய வாதப்படியே அது உண்மை யாக இருக்குமேயானால், எங்களுடைய கணக்குப்படி இப்பொழுது ஊராட்சி மன்றங்களிலும், ஒன்றியங்களிலும் எங்களைச் சேர்ந்தவர் கள் நிறையப் பேர்கள் வந்திருக்கிற இந்த நேரத்தில், அவர்களுடைய அதிகாரத்தைக் குறைக்க வேண்டும் என்ற அரசியல் நோக்கம் எங்க ளுக்கு வரும் என்பதை அவர்கள் எண்ணிப்பார்க்கவே மாட்டார்கள் என்று நான் உறுதியாக நினைக்கிறேன். ஆகவே, இதிலே அரசியல் நோக்கம் எதுவும் இல்லை.

மூன்றுவதாக, ஒரு பிரச்சினையைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராஜா அவர்கள் பேசும்போது நாங்கள் ஒன்றைச் சொல்வோம், நீங்கள் ஒன்றைச் சொல்வீர்கள், என்று தங்களை ஊராட்சி ஒன்றியங்களாகவும், அரசாங்கத்தை நீங்கள் என்றும் பேசினுர்கள். ஊராட்சி ஒன்றியங்களும், அரசாங்கமும் தொடர்புள்ள நிறுவனங்கள். இதிலே ஒருவருடையதை இன்னொருவர் எடுத்துக்கொள்வது என்பது ஒன்றும் இல்லை. அரசாங்கத்திற்கு உரிமை இருக்கிறது; அந்த நிலங்களெல்லாம் அரசாங்கத்தின் நிலங்கள்தான். தனிப்பட்ட மனிதன் யாருடைய நிலமும் இல்லை. தனிப்பட்ட மனிதனுடைய நிலமும் அரசாங்கத்திற்குத் தேவையென்றுல், அதையும் எடுத்துக்கொள்ள அரசாங்கத்திற்கு உரிமையை நீண்ட நெடு நாளாகப் பெற்றிருக்கிறோம். ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிலங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த நிலங்களை ஊராட்சி ஒன்றியங்கள் விரும்பினுலும், எடுத்து நிலமில்லாதவர்களுக்கு வழங்க, பயனுள்ள காரியங்களுக்கு உபயோகப்படுத்த இப்பொழுதுள்ள சட்டத்தில் இடமில்லாத தொல்லை இருக்கிறது.

கடந்த பஞ்சாயத்து யூனியன் கன்ஸல்டேடிவ் கமிட்டி மீட்டிங்கிலே, டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டதுபோல், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் கருத்துக்களைக் கொடுத்திருக்கிறுர்கள். இன்னும் பல்வேறு நேரங்களிலும் அவர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறுர்கள். கடந்த இரண்டு மூன்று கன்ஸல்டேடிவ் கமிட்டிக் கூட்டங்களில் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் அப்படிச் சொல்லியிருக்கிறுர்கள். சங்கடங்கள் இருக்கின்றன, சட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டும் என்று தெரிவித்திருக்கிறுர்கள். ஆகவேதான் 72-வது பிரிவில் ஒரு திருத்தத்தைக் கொண்டு வருகிறோம். இப்பொழுது "அன்-அஸெஸ்ட் வேஸ்ட்" என்ற நிலை இருக்கிறது. 100 ஆண்டுகளாக, 50 ஆண்டுகளாக நிர்ணயிக்கப்பட்டவைகளாக இவை இருக்கின்றன. இவையெல்லாம் தீர்வையில்லாத தரிசுகளாக இருக்கின்றன. இன்றைக்கு இருக்கக் கூடிய விஞ்ஞான முறையில் பயிர் செய்யக் கூடிய நிலைகள் ஏற்பட்டிருக்கின்றன. பல்வேறு பரந்து, விரிந்து கிடக்கும் தீர்வையற்ற தரிசுகளைப் பட்டா நிலங்களாக பயன்படுத்த முடியாமல் இருக்கிறது. இவைகளையெல்லாம் பயன்படுத்த ஊராட்சி மன்றங்கள் விரும்புகின்றன என்றுலும், ஏழை நிலமில்லாதவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கும் நிலை இல்லை. அரசாங்கத்திற்கும் முறையான உரிமைகள் இந்த சட்டத்திலே வழங்கப்படவில்லை. இதைப் போக்கத்தான் முயற்சி செய்யப்படுகிறதேயல்லாமல், ஊராட்சி ஒன்றியங்களின் அதிகாரங்களைப் பறித்துக் கொள்வது என்பது இல்லை. ஊராட்சி மன்றங்கள் விரும்புகின்றன என்றுலும், செய்ய முடியாத ஒரு காரியத்தை, சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்து, வசதியை ஏற்படுத்துகிறோம்.

வசதி உள்ள ஊராட்சி மன்றங்களிலிருந்து எவ்வளவு நிலத்தை எடுப்பது என்பதில் அரசாங்கம் ஒரு முறையைக் கையாளும். மாண்புமிகு உறுப்பினர் திரு. தனுஷ்கோடி சொன்னுர்கள், ஊர்

ஓரங்களில் புளிய மரங்கள் போன்றவைகள் இருக்கின்றன, அப்படிப் பட்ட நிலங்களை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும் என்று. பயன் படாமல் கிடக்கும் நிலங்களைத்தான் பயன்படுத்த, ஊராட்சி மன்றங் களுக்கு சக்தியில்லாத நிலையில் அரசாங்கம் மேற்கொள்ளும். மாண்புமிகு திரு. கருப்பையா, ஊராட்சி மன்றத்திலே ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டும் என்பதை இது தடை செய்கிறது என்றார்கள். நீங்கள் விரும்பினாலும், தரமுடியாமல் இருக்கிறது. இப்பொழுது இருக்கும் நிலைமை. அதை மாற்றி அமைக்கிறது இந்தத் திருத்த மசோதா. அவர்களுக்கு இருக்கும் வருமானத்தைக் குறைக்க, அவர் களுடைய அதிகாரங்களை எடுக்க, கடுகளவும் நோக்கம் கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதுவல்லாமல், அவசியமான காரியங்களுக்குத் தேவையென்றால், அப்பொழுதும் ஊராட்சி மன்றங்களைக் கன்ஸல்ட் செய்து, கலந்தா லோசித்து அவர்களுக்குத் தேவையிருக்கிறதா இல்லையா என்பதைக் கண்டறிந்து, அதற்குப் பிறகே செய்வது என்பதையும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

நட்ட ஈடு முறைகளைப் பற்றிச் சொல்லும்போது, வரம்பு இருக் கிறதா என்று கேட்டார்கள். எல்லாவற்றிற்கும் வரம்பு கட்டி, ஒவ்வொரு மரத்திற்கும் இந்த விதி என்று செய்வது, திரு. இராம மூர்த்தி சொன்னதுபோல் செலக்ட் கமிட்டிக்குப் போனாலும், செய்ய முடியாது. தமிழ் நாட்டில் எல்லா மரங்களுக்கும் இன்ன ஊரில் இன்ன மரத்திற்கு இவ்வளவு, இத்தனை உயரம், இத்தனை சுற்றளவு உள்ள மரத்திற்கு இவ்வளவு என்று நிர்ணயிப்பது சாத்தியம் இல்லாதது. இப்பொழுது காட்டிலாகா மரங்களுக்கு சில நிலைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, அவைகளெல்லாம் பரிசீலிக்கப்பட்டு, அந்தப்பணம் எல்லாம் ஊராட்சி மன்றங்களுக்குச் செல்லுகிறது. அவர்களுக்குக் கிடைக்கும் வருமானத்தில் அரசாங்கம் குறுக்கே நிற்காது. நியாயமான, தேவை யான அளவில் நட்ட ஈட்டுத் தொகை வழங்கப்படும் என்பதை உறுதியாகச் சொல்லுகிறேன்.

அடுத்து, வரிவிதிப்புப் பற்றிச் சொன்னார்கள். உள்ளூர் வரிமீது மேல் வரி விதிப்பதில், உயர் மட்ட அளவு என்று வைத்திருக்கிறோம். ஒரு ரூபாய் ஐம்பது காசு என்று. ஒரு ரூபாயை எடுக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அந்த நிலை ஏன் ஏற்பட்டது? இதற்கு முன்னால், இந்தச் சட்டத்திலே ஊராட்சி மன்றங்களுக்கு எவ்வளவு வேண்டுமானாலும் விதித்துக் கொள்ளலாம் என்றிருந்தது. எந்த விதமான உயர்ந்த பட்ச வரம்பும் கட்டாமல் இருந்தது. வழக்கு மன்றத்திற்குச் சென்றபோது, தீர்ப்புக் கொடுக்கும்போது; உயர்ந்த பட்சக் குறிப்பு இல்லாததால், வரி வசூலிக்க ஒன்றியங்கள் உரிமை பெற முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அதனால்தான் உயர்ந்த பட்ச அளவை நிர்ணயிக்கிறோம். மேல் வரியாக ஒரு ரூபாய் ஐம்பது காசு என்று நிர்ணயிக்கப்படுகிறது. ஊராட்சி மன்றங்கள் ரூ. 1.50 வசூலித்துத்தான் தீரவேண்டும் என்கிற கட்டாயம் கிடையாது. திரு. தனுஷ்கோடி அதை உணர்ந்திருப் பார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் புதிதாக ஊராட்சி

ஒன்றியத் தலைவராக வந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். விரிவாகப் படித்தால் தெரியும். விரும்பினால் உயர்த்திக் கொள்ளலாம். அரசாங்கம் கட்டாயப்படுத்தவில்லை. ஆனால் ஒரு உயர்ந்தபட்ச வரம்பு வேண்டும்.

இன்றைக்கு ஏறத்தாழ 218 ஊராட்சி ஒன்றியங்களில் 50 காசுகள்தான் மேல் வரியாக வசூல் செய்கிறார்கள். சிலர் 75 காசு, சிலர் ஒரு ரூபாய், இன்னும் சிலர் ஒரு ரூபாய்க்கு மேல் என்று செய்கிறார்கள். இப்படிச் செய்பவர்கள் 10, 15 இருக்கும். ஆனால் 218 ஒன்றியங்கள் 50 காசுகள்தான் வசூலித்துக் கொண்டிருக்கின்றன. இந்தத் திட்டத்தை அமல் நடத்தாவிட்டால், 1960-லிருந்து 1970 வரையில் ஒன்றியங்கள் வசூலித்த தொகை முழுவதையும் திருப்பித் தரவேண்டிய நிலை அரசாங்கத்திற்கு ஏற்படுகிறது என்கிற நிலையை அறிவார்கள். இதுவரையில் கொடுக்கப்பட்ட தொகை கிட்டத்தட்ட 1961–62 -லிருந்து 1970 வரையில் 18.99 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டிருக்கிறது. அப்படி வசூலிக்கப்பட்டதற்கு ஈடாக அரசாங்கம் மானியமும் வழங்கியிருக்கிறது. திருப்பித் தருகிற நிலைகளை ஏற்படுத்திக்கொண்டால், ஒன்றியங்களின் அமைப்பு முறைகளை பாதிக்கும் நிலைகள் ஏற்படும். ஆகவேதான் உயர்ந்தபட்ச அளவை வைத்திருக்கிறோம்.

வசூல் செய்யப்பட்ட தொகை கல்விக்காக, பல்வேறு வளர்ச்சிக்காக செலவழிக்கப்படுகிறது. நிலத்திற்கு அடிப்படை நிலத் தீர்வையை ரத்து செய்திருப்பதை உறுப்பினர்கள் அறிவார்கள். உள்ளூர் வளர்ச்சிக்கு வகை செய்ய வேண்டும் என்று ரூ. 1.50 உச்ச வரம்பு வைக்கிறோம். 25 பைசா கூட வேண்டுமென்றால் வசூலித்துக் கொள்ளலாம் என்கிற உரிமையும் இருக்கிறது. கட்டாயப்படுத்தப் படுவதாக எண்ணத் தேவையில்லை என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்த கட்டமாக பாதையினுடைய நீளத்தைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். மதிப்பிற்குரிய திரு. வை. சுவாமிநாதன் அவர்கள் பேசும்போது "ஏன் இந்த வேறுபாடு? பாதையினுடைய நீளத்தின் அடிப்படையிலே கணக்கை வைத்துக்கொள்ளலாம்" என்றார்கள். நண்பர் ராமமூர்த்தி அவர்கள் குறிப்பிடுகிறபோது பாதையினுடைய நீளத்திற்குக் கொடுப்பதிலும், அதிலே சலுகை கொடுப்பதைப்பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். பாதையின் நீளத்தின் அடிப்படையிலும் அங்குள்ள ஜனத்தொகையின் அடிப்படையிலும் நிர்ணயிக்கப்பட்டு வருகிறது. சில இடங்கள் பிற்பட்ட பகுதிகள் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றன. பாதையின் நீளம் அதிகமாக இருந்து மக்கள் தொகை குறைவாகப் போய்விடுவதால் சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, 18 பைசா என்று வைத்திருக்கிறோம். இதுவும் சில கிராமங்களுக்குக் கிடைக்கவில்லை.

நாம் டெல்டைக் கோஸ்டல் ஏரியாவுக்கு 800 ரூபாய் என்றும் மலைப் பகுதியானால் 1,500 ரூபாய் என்றும், தரைப் பகுதியானால் 600 ரூபாய் என்றும் சர்வே செய்து வைத்திருக்கிறோம். தற்போது

1970 செப்டம்பர் 5] [திரு. மா. முத்துசாமி]

ஊராட்சி ஒன்றியத்தில் மாறுபட்ட ஒருவர் வந்திருக்கிறார் என்பதற்காக இந்த விதிமுறைகள் எல்லாம் மாற்றப்பட மாட்டாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டில் திருத்தியமைத்ததன் மூலம் 10 லட்சத்திற்கு அதிகப்படியாக கிடைத்திருக்கிறது. காலப்போக்கில் இன்னும் அதிகப்படுத்தும் முறையை எடுத்துக்கொள்ள வேண்டும். 1—10—1970-லிருந்து அமலுக்குக் கொண்டு வர வேண்டுமென்று திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். ஆறு மாத காலத்தில் 5 லட்சம் ரூபாயை இழக்க நேரிடும். நிதியாண்டுத் தொடக்கத்திலிருந்து கொண்டு வந்தால் நிதி ஒதுக்கீடு போன்ற காரியங்களுக்கு வசதியாக இருக்கும். ஆவேதான் 1—4—1970-லிருந்து அமலுக்குக் கொண்டு வந்திருக்கிறோம்.

ஊராட்சி நிலங்களை அரசாங்கம் எடுத்திருக்கிறது. அந்த நிலங்களை சில ஏழைமக்கள் பயன்படுத்தி, பண்படுத்தி வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு பட்டா கொடுக்க முடியவில்லை. முன்கூட்டியே அனுமதி பெறாத நிலையில் இருக்கிறது. இதை 1960-ம் ஆண்டிலிருந்து அமல்படுத்த வேண்டுமென்று சொல்கிறோம்.

பொதுவாக ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அரசாங்கத்திற்கும் உள்ள உறவுமுறைகளை ஆராய்கிறபொழுது இவைகள் எல்லாம் சிறு திருத்தங்களே ஆகும். ஆகவே, அவசரமும் அவசியமுமாக இருப்பதால் மேலும் இதை ஒத்திப்போட வேண்டுமென்ற தேக்க நிலையை விரும்பாமல், இதை பொறுக்குக் குழுவுக்கு அனுப்ப வேண்டுமென்பதைத் தவிர்த்துக் கொண்டு, இந்த மசோதாவைச் சட்டமாக்கித் தர வேண்டுமென்று கேட்டு, உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. விநாயகம் : பாயின்ட் ஆஃப் க்ளாரிபிகேஷன் சார், before we decide to withdraw our amendment or not. இப்போது அதிகாரங்கள் ஒரே இடத்தில் குவிந்திருக்கின்றன. அவைகளைப் பகிர்ந்து தர வேண்டுமென்ற வேகம் நாட்டிலே பரவியிருக்கிறது. பழைய சட்டத்தின்மூலமாக பஞ்சாயத்துக்கள்தான் புறம்போக்கு நிலங்களை அவர்கள் கையிலே இருக்கவேண்டுமென்று சட்டத்தைப் போட்டுவிட்ட பிறகு இப்போது நாம் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று குட்டி தர்பார் நடத்துகிறோமே Is it democratic in outlook? அதை எடுத்துக்கொண்டால் துஷ்பிரயோகம் செய்யமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது ?

பஞ்சாயத்துக்கள் சிபாரிசு செய்யவேண்டும். தாசில்தார்கூட முதலில், " ஹாவ் யூ எனி அப்ஜெக்ஷன் " என்று பஞ்சாயத்தைக் கேட்கிறார்கள். பஞ்சாயத்து " நோ அப்ஜெக்ஷன் " தர வேண்டும். இதனுடைய நோக்கம் என்ன என்பதைப் பார்க்கவேண்டும். மொத்தமாக எனக்குக் கொடுத்துவிடுங்கள் என்பதைப் போல் இருக்கிறது. ஏதோ நேற்றையதினம் பாராளுமன்றத்திலே ப்ரின்சஸ் ப்ரிவி பர்ஸ் என்பதன்மேல் பேசும்போது, எல்லா அதிகாரங்களையும் கொடுத்துவிடுங்கள், நான் பேரம் பேசிக்கொள்கிறேன் என்பது மாதிரிதான் இருக்கிறது. வடக்கே இருக்கிறவர்கள் செய்வது நியாயம் என்று சொல்ல மாட்டேன். நாளைக்கு நீங்கள் மாநில சுயாட்சி என்று மாநாடு நடத்தப் போகிறீர்களே அங்கே என்ன சொல்லப்

போகிறீர்கள்? நீங்கள் பஞ்சாயத்துக்களுக்கு நியாயம் வழங்க மாட்டோம் என்று சொல்வது என்ன நியாயம்? ஆட்சியிலே இருக்கிற கட்சிக்காரர்கள், அவர்களுக்குத் தகுந்தாற்போல எடுத்துக் கொள்கிற புறம்போக்கு நிலங்களை கட்சிக்காரர்களுக்குக் கொடுக்கலாமே? நீங்கள் செய்ய மாட்டீர்கள். இருந்தாலும் அப்படி நினைப்பதற்கு ஏன் இடம் தருகிறீர்கள்? நான் இதுகுறித்து முதலமைச்சர் அவர்களுடைய அறையிலே யோசனை சொன்னேன். ஆற அமர பொறுக்குக் குழுவிற்குப் போகட்டும். அங்கேயும் நீங்கள் சொல்வதுதான் வரப்போகிறது. நீங்கள் சொல்வதுதான் நடக்கப் போகிறது ஆயினும், I am only explaining in such a way so that there might be no confusion. ஆதலால், ஏன் இவ்வளவு அவசரம் அவசரமாகக் கொண்டுவரவேண்டும். இதைத் திரும்பப் பெறுவதோ, அல்லது பொறுக்குக் குழுவிற்கு விடுவதோ தான் நல்லது. தயவுசெய்து பொறுக்குக் குழுவிற்கு அனுப்புங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்ட்ரட்யூஸ் பண்ணினவர்கள், தயவுசெய்து சிந்திக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, சமதர்ம சமுதாய சோஷலிசம், ஏழைப் பங்காளர் என்றெல்லாம் பேசிப் பிரிவி பர்ஸ் பில் மீது எதிர்த்து ஓட் அளித்தார்கள். இந்தச் சட்டத்தைப் பொறுத்த அளவிற்கு எவ்வளவு இன்றியமையாதது என்பதை நான் எதிர்க்கட்சியில் இருந்தபோது எட்டாண்டுக் காலமாகப் பேசியிருக்கிறேன். பஞ்சாயத்தினுடைய அதிகாரத்தைப் பிடுங்குவதாக எடுத்துக்கொள்வது தவறாகும். இருக்கின்ற நிலங்களை ஏழை மக்களுக்குத் தகுந்த முறையில் கொடுக்கவேண்டும். "இட் வெஸ்ட்ஸ் வித் பஞ்சாயத்து" என்று இருக்கிற காரணத்தாலே அரசாங்கம் ஏழை மக்களுக்குக் கொடுப்பதற்கோ, வேறுவிதமாகப் பயன்படுத்துவதற்கோ எந்தவிதமான வாய்ப்பும் இல்லாமல் இருக்கிறது. அரசாங்க நிலமாக இருந்தாலும் அது பஞ்சாயத்தின் எல்லைக்குட்பட்டிருந்தால் "நோ அப்ஜெக்ஷன்" கேட்பது சரியான முறை என்று வைத்திருக்கிறோம். அந்த நிலங்களில் யாரும் கைவைக்க முடியாது. ஒரே சட்டத்திலே ஒரு பிரிவிலே பஞ்சாயத்திடம் வெஸ்ட் செய்துவிட்டால் எடுப்பதற்கு அதிகாரம் இல்லை. அதை மாற்ற வேண்டுமென்று எதிர்க்கட்சியிலிருந்த போது நானே பல முறை வாதாடியிருக்கிறேன்.

அரசாங்கம் மிகவும் பெருந்தன்மையோடு பஞ்சாயத்துக்களை அமைக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் விரிவான சட்டம் கொண்டு வந்திருக்கிறது. அவர்களுக்கு ஏதாவது நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்றிருந்தால் கொடுக்க முயற்சி செய்யவேண்டும். பஞ்சாயத்திற்கு மதிப்பு கொடுக்க வேண்டுமென்று செய்திருக்கிறோம் பஞ்சாயத்துக்கள் நல்ல வழியில் மக்களுக்கு நன்மை செய்ய முயற்சி செய்தால் அதை மதிக்கவேண்டுமென்று சட்டத்தில் போட்டிருக்கிறோம். பஞ்சாயத்தின் அதிகாரத்தை எடுக்க வேண்டுமென்ற எண்ணம் இதிலே கொஞ்சங்கூட இல்லை. அரசியல் கட்சிக்காரர்களுக்குப் பயன்படுவதாக அரசியல் இருந்தாலும், பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில், பஞ்சாயத்து நன்றாக நடைபெற

1970 செப்டம்பர் 5] [திரு. செ. மாதவன்]

வேண்டும் என்பதில் எந்தக் கட்சிக்கும் ஆட்சேபணை இருக்க முடியாது. பெரிய, பெரிய மாநாடு போன்ற கூட்டங்களிலே பத்தாயிரக் கணக்கான ஏழை எளிய மக்கள், நிலமற்ற தாய்மார்கள், உழைப்பாளர்கள் போன்றவர்களுக்கு இந்த அரசு பட்டா வழங்கி வருகிறது.

நான் எதிர்க்கட்சி நண்பர்களுக்கு ஒன்று சொல்கிறேன். தி.மு.கா. காரன், தி.மு.கா காரன் என்றால் அவர்கள் என்ன பாவம் செய்தவர்களா? நிலம் இல்லாத ஏழைகளாக அவர்களும் இருந்தால் தி.மு.கா. வைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக அவர்களுக்குக் கொடுக்கக்கூடாதா? யார் யாருக்கு நிலம் கொடுக்கலாம் என்று சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டப்படி தி.மு.க. காரனாக இருந்தாலும், காங்கிரஸ்காரராக இருந்தாலும், கம்யூனிஸ்டாக இருந்தாலும் கொடுக்கப்படுகிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சட்டத்திற்கு உட்பட்டு கொடுப்பதை நான் ஆட்சேபிக்கவில்லை. சட்டவிரோதமாக ஏற்கனவே நிலம் உள்ளவர்களுக்கு. சர்க்கார் உத்தியோகத்தில் வெளியூரில் இருக்கிறவர்களுக்கு எத்தனை இடங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நானே சொல்லியிருக்கிறேன். அப்படிக் கொடுக்கப்பட்டது வாபஸ் பெறப்படவில்லை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தப் பட்டாக்கள் கொடுப்பது அமைச்சர்கள் இல்லை. தலைமைச் செயலகத்தில் இருப்பவர்களும் கொடுக்கவில்லை. கீழே இருக்கிற அதிகாரிகள் மட்டத்தில் இது நடைபெறுகிற காரியம். அதில் ஒழுங்கீனம் நடைபெறக்கூடாது என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டிலும் எடுத்துச் சொல்லப்பட்டு எந்தத் தவறும் நடக்கக்கூடாது என்று சுட்டிக்காட்டப்படுகிறது. இது பற்றி தவறாக நடந்திருப்பதாக புகார்கள் வந்தால் அதை விசாரித்து உண்மையிலேயே தவறானதாக இருந்தால் அதை ரத்து செய்யவும் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எங்கெங்கே தவறாக நடந்திருக்கின்றன என்கிற விவரங்களை எப்போது வேண்டுமானாலும் கொடுக்கலாம். அரசாங்கம் அவற்றைப் பரிசீலனை செய்யத் தயாராய் இருக்கிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : என் தொகுதியிலேயே ஒருவருக்கு 34 ஏக்கருக்கு மேல் நிலம் இருக்கிறது. அவருக்கு பட்டா வழங்கப் பட்டிருக்கிறது. அதைப்பற்றி நானே நிதி அமைச்சருக்கு எழுதிக் கொடுத்தேன். எந்த போர்டு மெம்பர் அவருக்கு நிலம் கொடுக்கக் கூடாது என்று எழுதினாரோ அவரைவிட்டே பிறகு கொடுக்கலாம் என்று எழுதவைக்கப்பட்டு அந்த நிலம் அவருக்குப் பட்டா செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது அவர் பெரிய கட்டிடமே கட்டியிருக்கிறார். அங்கே அவர் தி.மு.க. கொடி கட்டியிருந்தார் என்கிற காரணத்திற்காக தங்கள் கட்சிக்காரர் என்பதற்காகத்தானே அவருக்குப் பட்டா வழங்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அது தவறு. அதுபற்றி கூட கோர்ட்டில் வழக்கு இருக்கிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : கோர்ட்டுக்கு வழக்குப்போய் என்ன பிரயோசனம்? சர்க்கார் கொடுத்துவிட்டார்கள், ஆகவே, ஒன்றும் செய்வதற்கில்லை என்று அவர்கள் தீர்ப்புக் கொடுத்துவிட்டார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எதிர்க்கட்சித் தலைவரை மறுத்துப் பேசவேண்டும் என்பதற்காகக் கேட்கவில்லை. இருக்கக்கூடிய சட்டத்திற்கு எந்தவகையில் முரண்பாடாகக் கொடுக்கப்பட்டது என்று விளக்க வேண்டுகிறேன். அந்த விளக்கம் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இருந்தால் இப்போதும் நடவடிக்கை எடுக்கத் தயாராய் இருக்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : பஞ்சாயத்து போர்டே அந்த நிலத்தைக் கொடுக்கக்கூடாது என்று தீர்மானம் போட்டது. அதற்கு மேல் அந்தப் புறம்போக்கை அவர் என்க்ரோச் பண்ணியிருப்பது சரியல்ல; எவிக்ட் பண்ணவேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவரே உத்தரவுபோட்டார். ரெவின்யூ போர்டும் அந்த நிலத்தைக் கொடுக்கக்கூடாது என்று உத்தரவிட்டது. இருந்தும் மறுபடியும் ஒரு ரெவின்யூ போர்டு மெம்பர் அனுப்பப்பட்டு அவர் எப்படிக் கொடுக்கலாம் என்று உத்தரவு போட்டார்? ஏற்கனவே அவருக்கு 34 ஏக்கருக்குமேல் சொந்த நிலம் இருக்கும்போது இந்த புறம்போக்கு அவருக்கு எப்படி பட்டா செய்துகொடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதுபற்றி நான் விவரம் சொல்கிறேன். ஒரு டீக்கடைக்காரர்—இரண்டு சென்டோ, மூன்று சென்டோ தான் நிலம்—ஏற்கனவே அங்கே கடை கட்டி உபயோகித்து வந்தார். அவர் தி.மு.க. காரராக இருக்கலாம். உள்ளூரில் அவருக்கும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் தகராறு இருக்கலாம். பஞ்சாயத்து போர்டு அந்த இடத்தில் லாரி நிறுத்த அந்தக் கடை அப்புறப்படுத்தப்படவேண்டும் என்றது என்று நினைக்கிறேன். இதுபற்றி எதிர்க்கட்சித் தலைவர் என்னிடம் புகார் கொடுத்தார். கொடுத்தவுடன் அந்த நிலம் அவருக்குப் பட்டா செய்து கொடுக்கக்கூடாது என்று நானே ஸ்டே ஆர்டர் போட்டேன். எதிர்க்கட்சித் தலைவருக்கும் தெரியும். அதன்பேரில்தான் ரெவின்யூ போர்டு மெம்பரை அங்கே நேரில் போய் இருக்கக்கூடிய நிலைமையை விசாரிக்க உத்தரவு போட்டேன். இப்போது அடிஷனல் சீப் செக்ரடரியாக இருக்கக்கூடியவர்தான் அப்போது போர்டு மெம்பராகச் சென்றூர். அவர் நேரில் போய்ப் பார்த்து அந்த நிலத்தை கொடுப்பதில் ஆட்சேபணை இல்லை என்று பரிந்துரை செய்ததன் காரணமாகத்தான் அது கொடுக்கப்பட்டது. அங்கே கட்சிச் சண்டை உண்டு. பாராளுமன்ற உறுப்பினர் ஒரு கட்சி. எம்.எல்.ஏ. கட்சி ஒன்று. அவருக்கு நேரிடையாக நிலம் இல்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : நான் எழுதிக்கொடுத்த விண்ணப்பத்திலேயே அவருக்குள்ள சொத்து:க்களை எழுதியிருக்கிறேன். அது இரண்டு சென்டா, ஒரு சென்டா என்பது அல்ல பிரச்சினை, அவர் எனக்கு உறவுக்காரர்தான், ஸ்டே கொடுத்து, எவிக்ஷன் ஆர்டர் கொடுத்த பின்பும் 25 ஆயிரம் ரூபாய் செலவில் எப்படி கட்டிடம்

கட்டினுர்? அவரே சொன்னுர், பாராளுமன்ற உறுப்பினர் ஒரு கட்சி என்று: அப்போது எப்படி எனக்கு நியாயம் கிடைக்கும். நான் சொல்வது எல்லாம் முதல் அமைச்சர் அவர்கள் அந்தப் பைலேயே வாங்கிப் பார்க்க வேண்டும் என்பதுதான். என் உறவினர், என் சமூகத்தைச் சேர்ந்தவர் என்ருலும் அந்த நிலம் அவருக்குக் கொடுக்கப்படக்கூடாது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் எவிக்ஷன் ஆர்டர் போட்டும் அது ஏன் நிறைவேற்றப்படவில்லை? எப்படி—அடிஷனல் சீப் செக்ரடரியாகவே இருக்கட்டும்—அந்த நிலத்தை அவருக்கு பட்டா செய்துகொடுக்கலாம் என்று பரிந்துரை செய்தார்கள்? இதுபற்றி அந்த பைல் முழுவதையும் முதல் அமைச்சர் வாங்கிப் பரிசீலனை செய்யவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தவருன கருத்தையே சொல்கிருர்கள். எம்.பி. என்பதை அடையாளத்திற்காகவும் என்ன போட்டாபோட்டி என்பதற்காகவும் சொன்னேன். இதிலே அரசாங்கத்தினர் தலையீடு இல்லை. இது ஏற்கனவே ஆக்கிரமிக்கப்பட்ட ஒரு காரியம். அன்அப்ஜெக்ஷனபிள் ஆக இருந்தால் ஏற்றுக்கொள்கிருேம். அதற்கு விதிமுறை இருக்கிறது. அந்த வகையிலே இது சிறிய விவகாரம். இதிலே 10 பேர்கள் அதிலே 10 பேர்கள் சேர்ந்துகொண்டு அரசாங்கத்தின் தலையை உருட்டாமல் இருக்கவேண்டும். அரசாங்கம் பாரபட்சமில்லாமல் தான் நடந்திருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கோர்ட்டுக்குப் போகப்போகிருேம் என்று சொன்னுர்கள். ரெவின்யூ போர்டு மெம்பர் இதற்காக பிரயாணம் செய்து பார்த்துவிட்டு வந்தபிறகு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை எதிர்த்து ஹைகோர்ட்டிற்கும் போய்இருக்கிருர்கள். இந்த விஷயத்திலே அரசாங்கம் செய்தது சரிதான் என்று அங்கேயும் சொல்லியிருக்கிருர்கள். முதலமைச்சர் பார்க்கட்டும், பார்க்கட்டும், கடைசிப் பக்கத்திலே இருந்து பார்க்கட்டும் என்று ஜோடனையாகச் சொல்கிருர்களே தவிர இதிலே கட்சிக்காக ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு அந்த இடமே தெரியாது, அந்த ஆட்களே தெரியாது, அந்த ஊருக்கு நான்போனதுகூடக் கிடையாது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இடம் தெரியாது என்கிருர்கள். பாராளுமன்ற உறுப்பினர் என்பது தெரியுமல்லவா?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நான் அந்த பைலைப் பார்க்கவேண்டுமென்று சொன்னுர்கள். நான் அதைப் பார்த்து—முன்பு திரு. விளுயகம் அவர்கள் மின்சாரத் துறை அமைச்சர்மீது ஒரு குற்றச்சாட்டைகூறி அதற்கான விளக்கத்தை நான் இந்த அவையிலே எப்படி அறிக்கை மூலம் தந்தேனே—அதைப்போலவே அந்த பைலைப் பார்த்து நிச்சயமாக அறிக்கையைத் தருகிறேன்.

முன்னுள் எம்.எல்.ஏ. ஆறுமுகம் காங்கிரஸ்காரர் வட ஆற்காடு மாவட்டத்திலே செங்கம் பகுதியிலே காங்கிரஸ் ஆபீஸ் வைப்பதற்காக என்று 10 சென்ட் பெற்றுக்கொண்டு அதைச் சொந்த உபயோ

கத்திற்காக பயன்படுத்திக்கொண்டிருக்கிறார், என்று புகார் வந்திருக்கிறது. காலி செய்யமுடியாது என்று சொல்வதாகப் புகார் வந்திருக்கிறது. இப்படிப்பட்ட புகார்களையும் கவனிக்கவேண்டியிருக்கிறது.

சில நேரங்களிலே எங்கோ தவறுகள் நடந்துவிடலாம். நடந்துவிடுகிற தவறுகளுக்கு அரசாங்கம்தான் பொறுப்பு, மந்திரிகள் பொறுப்பு என்ற வாதம் சரியாக இருக்காது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதற்கிணங்க வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் ஸ்டே ஆர்டர் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கூறியதைப்போல் பைல் முழுவதையும் படித்துப்பார்த்து அறிக்கை வைப்பதற்குத் தயாராக இருக்கிறேன். செங்கம் பகுதியில் முன்னாள் காங்கிரஸ் எம்.எல்.ஏ. காங்கிரஸ் ஆபீஸ் வைப்பதற்காக என்று 10 சென்ட் நிலம் வாங்கிச் சொந்த உபயோகத்திற்காகப் பயன்படுத்துகிறார் என்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. விநாயகம் : ஹவுஸ் சைட்தான் கேட்டார்.

THIRU K. RAMAMOORTHI : Sir, I do not press my amendment.

திரு. க. இராமமூர்த்தி, திரு. ஏ. அ. சுப்பராஜா ஆகியோருடைய திருத்தங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைமுன்னுள்ள கேள்வி : "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்தம்–செல்திறன் ஆக்குதல்) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண். 20/70) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

## பிரிவு 2

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி:—"பிரிவு 2 மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்":

THIRU K. RAMAMOORTHI : Sir, I move the following amendment—

"In the proposed new section 72-A (1) delete the words 'by notification' and insert the words 'with the consent of the Panchayat concerned'."

The amendment was duly seconded.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, என்னுடைய இந்த திருத்தத்தைப்பற்றி மிக விரிவாக, தெளிவாக இந்த அவையிலே பேசப்பட்டது. அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள்

இதிலே அரசியல் நோக்கம் எதுவும் இல்லை, நண்பர் இராமமூர்த்தி அப்படிப்பட்ட புள்ளிவிவரத்தைத் தந்தாலும்கூட இதிலேகூட நாங்கள் தான் வெற்றிபெறுகிறோம் ஆகவே அரசியல் நோக்கமில்லை என்று சொன்னார்கள். ஒன்று நிச்சயமாகிவிட்டது. பஞ்சாயத்துத் தேர்தல்களைப் பொறுத்தவரையிலும் அரசியல் ரீதியாக பிரிந்து விட்டன, நடைபெற்றுவிட்டன என்ற நிலைமையை விளக்கிவிட்டது. எனவே மசோதாவிலே உள்ள வழி அமைப்புகள் இந்த மசோதா அரசாங்கத்திற்கு தருகிற அதிகாரங்கள் அரசியல் நோக்கத்திற்குப் பயன்படுத்துவதற்கு வழிசெய்கிறது.

பயன்படுத்தவில்லை என்றால் அது வேறு. இந்த அரசாங்கத் தோடு, ஆட்சியோடு கருத்துவேறுபட்டு அரசியல் ரீதியாக வேறு படுகின்றவர்கள் அதிகாரத்தில் உள்ளபஞ்சாயத்துக்களைப் பொறுத்த வரையிலும் மற்றப் பஞ்சாயத்துக்களுக்குத் தருகின்ற சலுகைகளைத் தவிர்த்து அந்தப் பஞ்சாயத்துக்களை நடத்தமுடியும் என்ற அளவிலே அதிக அதிகாரத்தை இந்த மசோதாவின் அங்கம் அரசாங்கத்திற்கு அளிக்கிறது. பயன்படுத்த மாட்டோம் என்பது உறுதியே தவிர, பயன்படுத்தப்பட்டால் அதைத் தடுப்பதற்கான நிலைமைகள் இல்லை. ஆகவே "பை நோடிபிகேஷன்" என்று இருப்பதைவிட அந்த அந்தப் பஞ்சாயத்துக்களின் அனுமதியோடு அவற்றைக் கலந்துகொண்டு ஒப்புதலோடு, அனுமதியோடு நிலங்களை எடுத்துக்கொள்வதில் எந்த விதமான ஆட்சேபணையும் இருக்கமுடியாது. பஞ்சாயத்துக்களை கலந்தாலோசித்து நிலங்களை எடுத்துக்கொள்வது என்பது சாலப் பொருந்தும்.

பஞ்சாயத்துக்களுக்குத் சொந்தமான காடுகளையும் புறம்போக்கு நிலங்களையும் எடுத்துக்கொள்வதிலே என்னுடைய கட்சியைச் சேர்ந்த கொறடா அவர்கள், திரு. விநாயகம் அவர்கள், தெளிவாகச் சொன்னார்கள். சில திட்டங்கள் வகுக்கிறோம், அப்படிப்பட்ட திட் டங்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பாகவோ அல்லது ஆரம்பித்த வுடனே சில நேரங்களிலே கைவிடப்படுகிற நிலைமை ஏற்படுகிறது. அதற்குப்பிறகு அந்த இடத்தை எப்படிப் பஞ்சாயத்திலே சேர்ப்பது என்ற நிலைமை இருக்கிறது. பஞ்சாயத்துக்களுக்கு எல்லைக்கோடுகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. வரையறுக்கப்பட்ட பஞ்சாயத்து எல்லை களுக்குள் நிலத்தை அரசு தன்னிச்சையாக எடுத்துக்கொள்வது என் பது எப்படிச் சரியாகும். இது எல்லாம் அவர்கள் அதிகாரத்தின்கீழ் உள்ளது என்று எல்லையொன்றைக் கொடுத்து விட்டு அந்த எல்லைக் குட்பட்ட பகுதியை நாமே எடுத்துக்கொள்வது ஜனநாயகத்திற்குப் பொருந்தாது. எனவே பஞ்சாயத்துக்களின் அனுமதியோடு நிலத்தை ஏற்றுக்கொள்ளவும், காடுகளை எடுத்துக்கொள்ளவுமாக இருக்கக்கூடிய முறைதான் சாலப் பொருத்தமாகும். இதை அமைச் சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, நான் முன்னமேயே தெளிவாக்கியபடி மக்களுக்கு உதவிசெய்வதற்காகக் கொண்டுவரப்படுகின்ற மசோதாதான் இது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடம்கூடக் கேட்டேன், பொதுமக்களுக்குத் தேவைப்படுகிற

சட்டம் என்று சொல்கிறார்களே என்றுகூடக் கேட்டேன். எனவே எந்த விதமான உள்நோக்கமும் கற்பிக்க வேண்டியதில்லை. பஞ்சாயத்துக்களின் அனுமதியைப் பெறவேண்டுமென்று சொல்லி விட்டாலே இந்தச் சட்டத்தினுடைய பயன் இல்லாமல் போய் விடுகிறது. அவர்களுடைய சம்மதத்தை வாங்கி எப்படிச் செய்ய முடியும் ? பஞ்சாயத்துத் தகராறுகளுக்குள்ளே அரசாங்கமும் சேர்ந்துகொள்வது சரியல்ல. பொதுமக்களின் தேவையைப் பொறுத்து அவர்களுக்குத் தேவையானவற்றைத்தான் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தெளிவாக இருக்கிறது.

பப்ளிக் பர்பஸ் என்ற வார்த்தைகளுக்கு நம்முடைய உயர்நீதி மன்றங்கள் ஏராளமான விளக்கங்கள் தந்திருக்கின்றன. ஆகவே, அவர்கள் சொன்ன நல்ல யோசனையை ஏற்றுக்கொண்டு, பப்ளிக் பர்பஸ் என்று தீர்மானிக்க விதிமுறைகள் வகுக்கப்படும். இப் பொழுதுகூட மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் சொன்னதைப்போல அரசாங்க நிலத்தைக் கொடுக்கக்கூட பஞ்சாயத்தை ஆலோசனை கேட்கிறோம். நம்முடைய விதிமுறைகள், இந்தச் சட்டத்தின்கீழ் வகுக்கப்படும்பொழுது பஞ்சாயத்துக்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்க ஏற்பாடு செய்ய நான் உறுதி தருகிறேன். ஆகவே, அந்த முறையிலே பஞ்சாயத்தைக் கலக்கலாம் என்ற ஏற் பாட்டைச் செய்யலாமே தவிர, பஞ்சாயத்துக்களின் சம்மதத்தில் செய்ய வேண்டுமென்று சொன்னால் அது இந்தக் காலத்திலே நடை பெறும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. ஆகவே, அதை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள் கூறிய உண்மைப்பொருளை, பஞ்சாயத்து-க்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்ற பொருளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, விதிமுறை களை இயற்றும்பொழுது, பப்ளிக் பர்பஸ் என்று நிர்ணயிக்கும் பொழுது, அவர்களுக்கு நோட்டீஸ் கொடுத்து கருத்தை அறியவும், விதிமுறைகளை வகுத்துக்கொள்ளவும் செய்யலாம். எனவே, அந்தத் திருத்தத்தை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்ளு கின்றேன்.

THIRU K. RAMAMOORTHI: Sir, I am thankful to the Hon. Minister for his assurance and in view of his assurance I do not press my amendment.

திரு. க. இராமமூர்த்தி அவர்களுடைய திருத்தம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 3.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 3 மசோதாவுக்கு உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

1970 செப்டம்பர் 5]

THIRU K. RAMAMOORTHI: Sir, I move the following amendment—

"In clause 3, omit the words 'one rupee and'."

THIRU K. VINAYAKAM: Sir, I second the amendment.

திரு. க. இராமமூர்த்தி: தலைவரவர்களே, என்னுடைய இந்தத் திருத்தத்தைப் பொறுத்தவரையிலே, செஸ் வரி விதிப்பதற்கு உச்ச வரம்பு கட்டும் அளவிலே தற்போதைய வரிவிதிப்பு அரசாங்க மசோதாவின்படி 1 ரூபாய் 50 காசு என்று இருப்பதை 50 பைசாவாகக் குறைப்பதற்கு வழி செய்யும் வகையிலே அமைந்திருக்கிறது. இந்தத் திருத்தத்திற்கு ஆரம்பத்திலேயே அமைச்சரவர்கள் மிகத் தெளிவாகப் பதில் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லுகின்ற நேரத்திலே, இந்த வரிவிதிப்பைப் பொறுத்தவரையிலே, பஞ்சாயத்துக்கள் இந்த அளவிற்குத்தான் என்னும் உச்சவரம்பே தவிர இதற்குக் குறைத்து அவர்கள் வரிவிதிக்கும் சூழ்நிலையை யாரும் தடுத்துவிட முடியாது. ஆகவே, இது உச்சவரம்பே தவிர குறைவாக வரிவிதிப்பதற்கும் வழிவகையிருக்கிறது, பஞ்சாயத்துக்கள் அதைச் செய்துகொள்ளலாம் என்ற நிலையைச் சொன்னார்கள்.

இன்னொன்றும் சொன்னார்கள், ஏற்கனவே விதிக்கப்பட்டிருக்கும் வரிவிதிப்பின்படி, இந்த என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொண்டால் 18 கோடியே 99 லட்சம் ரூபாய் அளவிற்கு இந்த அரசு ஏற்கெனவே சர்சாஜ் என்று வசூலித்த பணத்தைத் திரும்பத் தர வேண்டியிருக்கும் என்று.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: மொத்தத்திலே 60-வது வருஷத்திலிருந்து 70-வது ஆண்டு வரையிலும் செஸ் விதிப்பின்மூலம் 18.99 கோடி ரூபாய், தமிழ்நாடு முழுவதிலுமுள்ள ஊராட்சி ஒன்றிய வரிவிதிப்பின்படி, என்னுடைய இந்த திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் ஹைகோர்ட்டின் உத்தரவுப்பிரகாரம் இந்தத் தொகையைத் திருப்பித்தர வேண்டியிருக்கும். ஊராட்சி மன்றங்களுக்கு அதற்கு ஈடாக மானியத் தொகை கொடுத்திருக்கிறது. இதையெல்லாம் கருத்திற்கொண்டு பார்க்கும்பொழுது இவ்வாறு நிர்ணயிக்கப்பட வேண்டியிருக்கிறது. லோகல் வருமானத்தை ஈடு கட்ட மானியம் கொடுக்க வேண்டியிருப்பதால் இவ்வாறு செய்ய வேண்டிய நிலையிருக்கிறது என்பதைத்தான் சொல்லுகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: ஆகவே, ஒருவேளை என்னுடைய திருத்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டால் இந்த மொத்தத்தொகையிலே ஓரளவிற்குக் குறையலாம். மொத்தத்தையும் திருப்பித்தர வேண்டிய நிலையேற்படுவதை இந்த மசோதாவிலே தடுக்க வழிவகைகளைச் செய்வதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்திலே உச்சவரம்பாக ஒன்றரை ரூபாயாக வைத்திருக்க வேண்டுமாவென்பதை அரசு மீண்டும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த உச்சவரம்பைப் பொறுத்தவரையிலும் $1\frac{1}{2}$ ரூபாய்தானே தவிர, இதிலே கட்டாயம் ஏதுமில்லை, குறைவாகப் பஞ்சாயத்துக்கள் இந்த வரிவிதிப்பைச் செய்யலாம் என்று அமைச்சரவர்கள் உறுதி

யாகச் சொன்னாலும்கூட இன்றைக்கு நடைமுறையிலே பார்க்கும் பொழுது, பல பஞ்சாயத்துப் பெருமன்றங்கள், அதிகாரப் பூர்வமாக நிர்பந்திக்கப்படவில்லையென்றாலும்கூட, மறைமுகமாக அவை இந்த வரிவிதிப்பை உயர்த்த வேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்படும் நிலை இன்றைக்கு இருக்கிறது.

உதாரணத்திற்காக ஒன்றைச் சொல்லுகிறேன். என்னுடைய மாவட்டத்திலேயிருக்கும் எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களும், 1 ரூபாய்க்குக் குறைவாக இந்த வரிவிதிப்பை விதிக்கக்கூடாது என்ற மாற்றத்தை ஏற்றுக்கொண்டு அதிகபட்சமான வரிவிதிப்பாக 1 ரூபாய் என்று இன்று எல்லாப் பஞ்சாயத்துப் பெருமன்றங்களிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது: பஞ்சாயத்துப் பெருமன்றத்தின் வரிவிதிப்பு என்றாலும்கூட, அந்தத் தீர்மானம் எப்படி, எந்தச் சூழ்நிலையில் இயற்றப்பட்டது என்பதைப் பார்க்க வேண்டும். எவ்வளவு அவசரம் அவசரமாக, பஞ்சாயத்துத் தேர்தல்களுக்கு முன்பு நிறைவேற்றப்பட்டது என்பது தெரியும். செஸ் வரி விதிப்பதன் மூலம் பஞ்சாயத்துக்களுக்கு வருமானம் கிடைக்கிறது, பஞ்சாயத்துக்கள் நடைபெறுகிறது என்றாலும்கூட, வரி விதிப்பது என்பது அங்கு இருக்கின்ற நிலச்சுவான்தார்களுக்கு, நிலம் வைத்திருப்பவர்களுக்குத்தான் விதிக்கப்பட வேண்டுமா என்பதை இந்த அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

வரி விதிப்பதைப் பலமுறையிலே செய்யலாம். ஆனால் நிலத்தின் மீது மட்டும் விதிப்பது சிறு விவசாயிகளுக்கு நன்மை செய்யும் முறையாகாது. உச்சவரம்பாக இவ்வளவுதான் வரிவிதிக்கலாம் என்ற நிலையை ஏற்படுத்தினாலும்கூட, பிறகு கொஞ்சம் கொஞ்சமாக இதை உயர்த்தித் தாருங்கள் என்று கோட்டாட்சித் தலைவரோ, மாவட்ட ஆட்சித் தலைவரோ கேட்கக்கூடிய நிலையேற்படும். பஞ்சாயத்துக்களுக்கும், கோட்டாட்சித் தலைவர், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியவர்களுக்குமிடையில் உள்ள உறவு முறைகளின்படி ஒருவருக்கொருவர் ஒத்துப்போகாத நிலையில் பஞ்சாயத்துக்கள் சரியான முறையில் இயங்க முடியுமா? எனவே, கோட்டாட்சித் தலைவரோ, மாவட்ட ஆட்சித் தலைவரோ, வரியை உயர்த்துங்கள் என்ற கோரிக்கையை வைக்கும்நேரத்தில், அதை மறுக்கும் நிலையில் பஞ்சாயத்துத் தலைவர்களோ, அல்லது பஞ்சாயத்துப் பெருமன்றங்களோ இருக்க முடியாது. ஆகவே, அந்தச் சூழ்நிலையில் மறைமுகமாக, விவசாயிகளின்மீது வரி உயர்ந்துவிடும்.

அதுமட்டுமல்ல, பஞ்சாயத்துச் சட்டத்தைப்பொறுத்தவரையில் இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். இந்த செஸ் சர்சார்ஜ் என்பது எப்படிப்பட்ட சூழ்நிலையில் விதிக்கப்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். அடிப்படை நிலத்தீர்வையாக ரூபாய் ஒன்று என்று ஏற்கெனவே வசூல் செய்துகொண்டிருக்கிறோம். இதற்கு அடிஷனல் லேண்ட் ரெவின்யூ என்று ஒரு ரூபாயாக வரி விதிக்குமுன் 50 காசு என்று விதித்திருக்கிறோம். அதற்கும் பிறகு லோகல் செஸ் என்று 45 பைசா வரிவிதிப்பும் செய்திருக்கிறோம். இதனால் இன்று ஒரு ரூபாய் 95 காசு என்று விவசாயி சர்சார்ஜ் அளவிலே கட்டும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அதோடுகூட இந்தப் புதிய வரிவிதிப்பு

1970 செப்டம்பர் 5] [திரு. க. இராமமூர்த்தி]

செய்வதன்மூலம் கூடுதலாக 1 ரூபாய் 50 காசு விதிக்கும் நிலை ஏற்பட்டால் மொத்தமாக 1 ரூபாய் லேண்ட் ரெவின்யூ செலுத்தும் விவசாயி 3 ரூபாய் 45 காசு என்ற அளவிற்குக் கட்ட வேண்டியிருக்கும். அத்தகைய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்படுவார்கள்.

அதுமட்டுமல்ல, இந்த செஸ் என்பது விதிக்கப்படும் நேரத்தில் நியாயமான அடிப்படையிலே விதிக்கப்படுகிறதா என்றால் அதுவுமில்லை என்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த சர்சார்ஜ் என்பது It cannot be more than the local cess என்பதாக டெஃபனிஷனில் சொல்லியிருக்கிறார்கள். சர்சார்ஜ் என்பதற்கான டெஃபனிஷனில் பொறுத்தவரையிலே, 'it is an over charge beyond what is just and right.' என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, லோகல் செஸ்ஸைவிட இது எந்த அளவிற்கு அதிகமாக விதிப்பது என்ற நியாயமான அடிப்படையிலே 1½ ரூபாய் அடங்கவில்லை என்பதைச் சொல்லி, இந்த நிலைமைகளை எடுத்துப்பார்க்கும் நேரத்திலே, இந்த வரி உயர்வு என்ற நிலைமை விவசாயிகள்மீதுதான் திரும்பத் திரும்பச் செய்யப்பட வேண்டுமா, பஞ்சாயத்திற்கு உள்ளடங்கிய மற்றவர்கள் இல்லையா? ஏன் விவசாயிகளின் நிலத்தின்மீது வரியை உயர்த்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித்தர வேண்டும்? இது உடனடியாக அமல்படுத்தப்படவில்லையென்றாலும்கூட, அதற்கான வாய்ப்பிற்கு நாம் ஏன் துணையாக இருக்கவேண்டுமென்று சொல்லி, இந்தக் காரணங்களுக்காக 50 பைசாவாக இதைக் குறைக்க வேண்டுமென்று கூறி, என்னுடைய திருத்தத்தை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவரவர்களே, இதுபற்றி நான் ஏற்கெனவே இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களுக்கு மிகுந்த அதிகாரம் வேண்டும், அதிகாரம் வேண்டுமென்று தங்களுடைய வாதத்திலே கூறிக்கொண்டுவரும் உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களே, அவைகளுக்கு இப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்தால் துஷ்பிரயோகம் செய்வார்களே என்று பேசுகின்ற விந்தையான காட்சியை இப்பொழுது நான் பார்த்தேன். நான்கொடுத்த புள்ளிவிவரத்திலே எவ்வளவு வேண்டுமானாலும் மேல் வரி விதிக்கலாம் என்ற நிலையிலேயும், 108 இடங்களில் 50 காசுகள்தான் விதித்திருக்கிறது.

இது அவர்கள் விருப்பப்படி செய்கின்ற ஒன்றாகும். இதன்மூலம் ஈட்டு மானியம் வேறு அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கிறது. இதிலே கொடுக்கப்பட்ட வாதமே தவறு. இதிலே கட்டாயப்படுத்த வேண்டிய நிர்ப்பந்த நிலை இல்லையென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: Sir, I do not press my amendment.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 4 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 5

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :பேரவையின் முன்னுள்ள கேள்வி :—

"பிரிவு 5 மசோதாவின் உரியப் பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

THIRU K. RAMAMOORTHI : Sir, I move the following amendment--

" In the proposed new section 131, in line 25 after the words ' in the Panchayat Development Block ' add the following ' and such account shall be based on the consultation and recommendation with the Panchayat Union Council '."

THIRU K. VINAYAKAM : Sir, I second the amendment.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, கிராமப் புற சாலைகளுக்கான அரசு மானியத்தைப் பொறுத்த வரையிலே எந்த முறையில் வழங்கப்பட வேண்டுமென்பதற்கான கருத்துக்களை அமைச்சர் அவர்களும், இந்த விவாதத்திலே பங்கேற்ற உறுப்பினர் களும் தெரிவித்திருக்கிறார்கள். உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்கு ஆதரவு தருகின்ற முறையில் என்னுடைய திருத்தத்தை முன் மொழிகிறேன். பஞ்சாயத்துக்களுக்கு சாலை மானியத்தை வழங்கு கின்ற நேரத்தில் சாலைகளின் நீளத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ளுவதோடு அதன் தரம் அல்லது தன்மையையும் கணக்கில் எடுத்துக்கொள்ளுகிறார்கள். தன்மை என்ற நிலைமையைக் கணக் கிடும்போது பலவித சிக்கல்களும், சங்கடங்களும் ஏற்படும். சற்று முன்பு விவாதித்தபோது சொன்ன அதே நிலைமைகள் இந்த மானியத்தை வழங்குவதிலும் ஏற்படும் நிலைமை நிறைய இருக்கிறது. இது ஏறத்தாழ நான் முன்னே சொன்ன வாதத்திற்குப் பொருந்திய ஒன்றாக இருக்கிறது. முன்பு அமைச்சர் கொடுத்த வாக்குறுதியை இதற்கும் அளிப்பார்கள் என்று எதிர்ப்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: பாதை மானியத்தைப் பொறுத்தவரை 1—4—1967-லேயே எந்தெந்தப் பகுதிகளில் என் னென்ன வகையில் பாதைகள் அமைந்திருக்கின்றன என்பது நிர்ணயிக் கப்பட்டிருக்கிறது. அது பொறியாளர் துணை கொண்டு நிர்ணயிக் கப்படுகிறதேதவிர வேறல்ல. இந்த ஆண்டு ஒவ்வொரு மாவட்டத் திற்கும் எவ்வளவு அதிகமாக தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தைச் சொல்லும்போது சென்ற ஆண்டை விட ரூ. 10,24,000 அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது டெல்டாயிக் ஏரியாவா, ஹில் ஏரியாவா, பளெயின்ஸா என்பதையெல்லாம் பொறியாளர்கள் நிர்ணயிக்கிறார்களேதவிர, தனிப்பட்ட முறையில் ஊராட்சி ஒன்றி யம் செய்வதல்ல. இதிலே தவறு ஏதும் நிகழும் தன்மை இருக்காது என்பதால் திருத்தத்தை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : Sir I do not press my amendment.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 5 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 6 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி:—

"பிரிவு 1 மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

THIRU K. RAMAMURTHI: Sir, in view of the discussion that has taken place before this House, I do not intend moving my amendments.

பிரிவு 1 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, " தமிழ்நாடு 1970-ம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்தம்—செல்திறன் ஆக்குதல்) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 20/70) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, இந்த பஞ்சாயத்து திருத்த மசோதா எவ்வளவு முக்கியமானது என்பது இதன் மீதான விவாதத்தில் பல்வேறு அங்கத்தினர்களும், அமைச்சர் அவர்களும் பங்கு கொண்ட முறையிலேயே தெளிவாகத் தெரிகிறது. இந்த மசோதா நிறைவேற்றப்படுகின்ற இந்தக் கட்டத்திலே நான் கேட்டுக் கொள்ளுவதெல்லாம் இங்கு விவாதங்கள் நடந்த அடிப்படையில் உறுப்பினர்களுடைய அச்சத்தைப் போக்கும் வகையிலும், பாதகமான சூழ்நிலைகள் ஏற்படாது என்ற வகையிலும் அமைச்சர் அவர்கள் சில உறுதிமொழிகளை அளித்தார்கள். இதைச் செயல்படுத்தும் நேரத்தில் இவற்றை எல்லாம் மனதில் கொண்டு செயல்படுத்த வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—" தமிழ்நாடு 1970-ம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்தம்—செல்திறன் ஆக்குதல்) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 20/70) நிறைவேற்றப்படவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா, சட்டமாக நிறைவேற்றப்பட்டது:

## (ஊ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 21/70)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதா *(சட்டப் பேரவை மசோதா எண் 21/70) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

THIRU A. A. SUBBA RAJA: Sir, I move the following amendment—

"That the Tamil Nadu General Sales Tax (Third Amendment) Bill, 1970 (L.A. Bill No. 21 of 1970) be referred to a Select Committee consisting of .... Members of the Assembly". (Names to be furnished later).

The amendment was duly seconded.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் விவர அட்டவணையில் 21-வது இனத்தின்கீழ் குறிக்கப்பட்டுள்ளவை இரசாயன உரப் பொருள்களாகப் பயன்படும்பொழுது ஒரு முனை வரியாகவும் இராசயன உரப் பொருளாகவன்றி வேறு விதத்தில் பயன்படும் பொழுது பல முனை வரியாகவும் தற்போது விதிக்கப்படுகின்றன. இதனால் வணிகருக்கு இடர்ப்பாடு ஏற்படுகிறது. மசோதாவில் கொண்டுவரப்பட்டுள்ள திருத்தத்தின்படி "இரசாயன உரம்" என்ற சொற்கள் 21-வது இனத்திலிருந்து நீக்கப்படுவதால் இந்த இடர்ப்பாடு அகற்றப்படுகிறது.

மேலும், 1957-ஆம் ஆண்டு உரக் கட்டுப்பாடு ஆணையில் குறிப்பிட்டுள்ள சில உரங்கள் தற்போதுள்ள 21-வது இனத்தில் குறிப்பிடப் படவில்லை. உரக் கட்டுப்பாடு ஆணையில் குறிப்பிட்டுள்ள எல்லா இனங்களையும் 21-வது இனத்தின்கீழ் விவரிப்பதற்கு இம்மசோதா வகைசெய்கிறது.

தற்போது முதல் விவர அட்டவணையின் 21-வது இனத்தில் 1 முதல் 15 இனங்களில் குறிக்கப்பட்டுள்ள இரசாயன எரு இனங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இனங்களையும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இயற்கை எருவினங்களையும் கலந்த எருக்கலவை, அக்கலவையில் சேர்ந்த சில இனங்களுக்கு ஏற்கனவே வரி விதிக்கப் பட்டிருந்தபோதிலும், ஒரு தனிப்பட்ட இனமாகக் கருதப்பட்டு 3½ சதவீதத்தில் ஒருமுனை வரி விதிக்கப்படுகிறது. இவ்வாறாக இரட்டிப்பு வரி விதிக்குள்ளாகிறது. ஆனால், இம்மசோதா எருக் கலவைத் தயாரிப்பாளர்கள் அக் கலவையில் உள்ள ஏற்கனவே வரி விதிப்புக்குள்ளான இனங்களின் மீது மறுபடியும் வரி செலுத்தாமலிருப்பதற்கு வகை செய்கிறது. இது எருக்கலவை தயாரிப்பாளருக்கு அளிக்கப்படும் சலுகையாதலால், வாணிபம் இதை வரவேற்கும் என்பதில் ஐயமில்லை.

* 28—8—1970-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

1970 செப்டம்பர் 5] [திரு. ப. உ. சண்முகம்]

இந்த மாற்றங்கள் மேற்படி சட்டத்தில் 59-வது பிரிவு (1)-வது உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பின் மூலம் 1970 ஆகஸ்ட் 6-ஆம் நாள் முதற்கொண்டு செயலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. 59-வது பிரிவைச் சேர்ந்த (2)-வது உட்பிரிவின் கீழ் மேற்குறிப்பிட்ட அறிவிப்புக்குப் பதிலாக மசோதா ஒன்றை தற்போதைய சட்ட மன்றக் கூட்டத் தொடரில் கொண்டுவர வேண்டும்.

இம்மன்றப் பேரவை முன் இப்போது வைக்கப்பட்டுள்ள இம் மசோதா இது குறித்து அவசியமான விதித் துறைகளைக் கொண் டுள்ளது. இம்மசோதாவை ஏற்குமாறு இம்மன்றப் பேரவையை நான் கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, இந்த மசோதா வின் உள்நோக்கம், இதனால் என்ன நன்மைகள் பெறப்படுகின்றன என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதை ஏன் ஒரு பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று சொல்கிறோம் என்றால், ஃபர்ஸ்ட் ஷெட்யூலில்,

"அம்மோனியம் ஸல்பேட், அம்மோனியம் ஸல்பேட் நைட்ரேட் ......" என்று இப்படியாக 21 வரையில் அதில் சேர்க்கப்பட்டிருக் கின்றன. விவசாயிகளுக்குத் தேவைப்படும் அல்லது உபயோகப்படும் பல பொருள்கள் இதிலிருந்து விடப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு இன்று பல முனை விற்பனை வரி விதிக்கப்பட்டு வருகிறது என்று தெரி கிறது. அவற்றைப் பற்றியும் ஆலோசித்துப் பார்த்து இந்தப் பொருள்கள் எல்லாவற்றிற்கும் ஒரு இடத்திலேயே ஒரு முனை வரி போடக்கூடிய வகையில் ஆலோசித்து அந்தப் பொருள்களையும் இவைகளோடு சேர்க்க வேண்டும் என்று நினைக்கிற காரணத்தினால் தான் இதை ஒரு பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று சொல்கிறேன். "க்ரீன் ரெவல்யூஷன்" நடக்கிறது என்று சொல்கிற நேரத்தில் விவசாயிகளின் நன்மைக்காகவும், உற்பத்தியைப் பெருக்கு தற்காகவும் இவைகளில் ஆர்வம் கொண்டுள்ள இந்த அரசாங்கம் விவசாயிகளுக்குப் பயன்படும் பல்வேறு பொருள்களையும் இந்த ஷெட்யூலின் கீழ் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். "பெர்டிலைஸர்ஸ்"-ன் கீழ் பல விடப்பட்டிருக்கின்றன. ஆகவே, இவற்றைப்பற்றி யெல்லாம் ஆலோசிக்க வேண்டும் என்பதற்காகத் தான் இதைப் பொறுக்குக் குழுவிற்கு விடவேண்டுமென்று கோரு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஏற்கனவே ஒரு முனை வரி கட்டப்பட்டு கலப்புரம் ஆக்கப்பட்டால் அதற்கும் வரி உண்டு என் பதை மாற்றி ஏற்கனவே ஒரு உரத்திற்கு வரி கட்டப்பட்டிருந்தால் கலப்புரமாக அதைக் கொண்டு வரும்போது அதற்கு வரி கட்டத் தேவை இல்லை என்ற சலுகையை அளிக்கும் திருத்தமாகும் இது. விவசாயிகளுக்கும், உரக்கலப்பாளர்களுக்கும் இது நன்மை பயப்ப தாகும். ஆகவே இந்த மசோதாவை நிறைவேற்றித் தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். உறுப்பினர் அவர்கள் அவர்களது திருத்தத்தை வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 21/70) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவு 2, பிரிவு 1 முகப்புரை, நெடுத்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: "இம்மசோதா நிறைவேற்றப்பட வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## (எ) தமிழ் நாடு 1970-ஆம் ஆண்டு பொது விற்பனைவரி (நான்காம் திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 21/70)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) மசோதா * (சட்டப் பேரவை மசோதா எண் 22/70) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 3-வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின்படி, மேற்படி சட்டத்தின் முதல் விவர அட்டவணையில் கண்டுள்ளவையும், அந்த விவர அட்டவணையில் சொல்லியுள்ள வேறு எவையேனும், சரக்குகளைத் தயாரிப்பதில் உதிரிப் பாகங்களாகப் பயன்படுத்தும் சரக்குகளின் விற்பனை மீது இரண்டு சதவீத சலுகை வீதத்தில், வரி விதிக்கப்படுகிறது. மேற்படி சட்டத்தில் 3-வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவில் கண்ட விளக்கத்தில் மேற்படிச் சலுகை வீதம் கிடைக்க வேண்டுமானல், வேலை நிறைவு பெற்ற பொருளில் அந்த உதிரிப்பாகம் அடையாளங்கண்டு கொள்ளத்தக்க பாகமாக அமைய வேண்டும். எந்தவொரு உதிரிப்பாகம் தனியாக அடையாளம் கண்டு கொள்ளத்தக்கதாக இருந்து இரசாயன முறையில் அல்லாமல் இயந்திர முறையில் பிரிக்கப்படத்தக்கதாக உள்ளதோ, அத்தகைய உதிரிப்பாகத்திற்கு மட்டுமே மேற்படிச் சலுகை கிடைக்க வேண்டுமென்பதே அரசின் விருப்பமாகும். சென்னை அரசுக்கும்—ஆர். எம். கிருஷ்ணசாமி நாயுடுக்கும் நடைபெற்ற வழக்கில் (26 எஸ்.டி.சி. 42), தலைமை நீதி மன்றம் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்துள்ளது:—

"ஓர் உதிரிப் பாகம் இரசாயன பரிசோதனை மூலமோ அல்லது வேறு பரிசோதனை மூலமோ, மேற்படிச் சட்டத்தின் முதல் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வேலை நிறைவு பெற்ற ஒரு பொருளின் உதிரிப் பாகமாக அடையாளம் கண்டு கொள்ளத்தக்கதாக

---

* 28—8—1970-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

1970 செப்டம்பர் 5] [திரு. பா. உ. சண்முகம்]

இருந்தால், மேற்படிச் சட்டத்தில் 3-வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவில் கண்ட விளக்கத்தின் தாத்பரியப்படி, அது அடையாளங் கண்டு கொள்ளத்தக்க உதிரிப்பாகமாகும். அத்தகைய உதிரிப் பாகத்தின் விற்பனை குறித்து மேற்படி 3-வது பிரிவில் (3) உட்பிரிவின் கீழ் சலுகை வரி வீதம் பொருந்தும்.''

மேற்சொன்ன தீர்ப்பின் விளைவாக, ஏற்கனவே வரி விதிப்புகள் முடிவு செய்யப்பட்டுள்ள நேர்வுகளில் வணிகர்கள் பணம் திருப்பிக் கொடுக்கும்படிக் கேட்கலாம். முடிவெடுக்கப்படாமல் உள்ள நேர்வுகளில், சந்தர்ப்பத்திற்கேற்ப வரிவிதிப்பு அதிகாரிகள் அல்லது மேல் முறையீட்டு அதிகாரிகள் பணத்தைத் திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கும். இந்த இடர்ப்பாட்டை நீக்கும் பொருட்டு, மேற்படிச் சட்டத்தின் 3-வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவில் கண்ட விளக்கத்தை முந்தியவொரு தேதி முதல் செயலுக்குவரும் விதத்தில் திருத்த அரசு முடிவு செய்துள்ளது. ஆனால், எந்த உதிரிப் பாகங்கள் தனியாக அடையாளங்கண்டு கொள்ளத்தக்கவையாயிருந்து, இரசாயன முறையில் அல்லாமல் இயந்திர முறையில் மட்டுமே பிரிக்கப்பட இயலுமோ அத்தகைய உதரிப் பாகங்களுக்கு மட்டும் அவ்வரி வீதம் பொருந்தும் என்று அத் திருத்தத்தின் மூலம் தெளிவாக்கப்பட்டுள்ளது. எந்த நேர்வுகளில் சலுகை வரிவீதம் பொருந்தவில்லையோ, அவற்றைப் பொறுத்தவரையில், ஏற்கனவே செய்துள்ள வரிவிதிப்பையும் வசூலையும் செல்திறன் ஆக்குவதெனவும் அரசு முடிவு செய்துள்ளது.

மேற்படி முடிவுகளைச் செயலுக்குக் கொண்டுவரும் பொருட்டு தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காவது திருத்த) மசோதா (சட்டமன்றப் பேரவை மசோதா எண் 22/70) அறிமுகம் செய்யப்பட்டு அது இப்போது பேரவையின் ஆலோசனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தை பேரவை ஏற்குமாறு நான் வேண்டுகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்த வரையில் நான் ஒரு கருத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

இந்த மசோதா என்ன காரணத்திற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை விளக்குகிற நேரத்தில், அமைச்சர் அவர்கள் நம் மாநில அரசாங்கத்திற்கும் திரு. ஆர். எம். கிருஷ்ணசாமி நாயுடு என்பவருக்கும் நடைபெற்ற வழக்கின் விளைவாக ஏற்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் இம்மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். சில முடிவுகளை அல்லது சில சட்டங்களை இந்த மன்றம் இயற்றுகிற நேரத்தில் அந்தச் சட்டம் அல்லது அந்த முடிவு சரியானதல்ல அல்லது அது நியாயமானதல்ல அல்லது அது சட்டவிதிமுறைகளுக்குப் பொருந்துவதாகயில்லை என்ற அடிப்படையில் உயர்நீதிமன்றமோ அல்லது தலைமை நீதிமன்றமோ தள்ளுபடி செய்கிறநேரத்தில் உங்களுக்கு அந்த அதிகாரம் இருந்தால் உங்களுடைய தீர்ப்பு செல்லுபடியாகாது அல்லது அதை செயலாற்ற முடியாத நிலைக்கு ஆக்கும் அதிகாரம் எனக்கு இருக்கிறது என்ற விதத்தில் அத்தீர்ப்பைத் தவிர்க்கும் விதத்தில் சட்டத்தைச் செய்யமுடியும் என்ற விதத்தில் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி

அவ்வப்போது நாம் செய்து கொண்டிருக்கிறோமா அல்லது அதை உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறோமா என்ற அச்சம் எனக்கு ஏற்படுகிறது. (குறுக்கீடு) பழைய சர்க்காரும் செய்ததுதான், எப்போதும் நடக்கிறதுதான் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். பழைய அரசாங்கம் தவறு செய்தது என்றால், இந்த அரசாங்கமும் பழைய அரசாங்கத்தினர் பாதையில்தான் சென்று கொண்டிருக்கிறதா என்ற அச்சம் எனக்கு ஏற்படுகிறது.

ஏற்கனவே வசூலிக்கப்பட்ட பணத்தை திரும்பவும் செலுத்த வேண்டிய நிலை அத்தீர்ப்பின் விளைவாக ஏற்பட்டு விடும் என்று சொன்னார்கள். அந்நிலையை வேண்டுமானால், அரசாங்கம் வசூலித்து விட்டதை திரும்பச் செலுத்தும் விதத்தில் யார் யார் எங்கெங்கு இருக்கிறார்கள், எப்படிக் கொண்டு போய் கொடுப்பது என்ற நிலையில்லாமல் அதைத் தவிர்ப்பதற்கு வேண்டுமானால், அதைத் திரும்பச் செலுத்தாமல் இருக்கும் முறையில் வேண்டுமானால் சட்டம் கொண்டு வரலாமே தவிர இனிமேல் எப்போதும் இப்படித்தான் செய்வோம் என்ற அளவில் சட்டத்தை அமைத்துக்கொள்வது நல்லதாகயிருக்காது. நீதிமன்ற திர்ப்பின் அடிப்படையில் இந்தத் திருத்த மசோதா வந்திருக்கிறது. நம் உயர்நீதி மன்றங்களை முழுமையாக மதிக்கிற அளவில் இத்திருத்த மசோதாவைப் பொறுத்தவரையில் ஏற்கனவே வசூலித்ததைத் திரும்பத்தராமல் இருப்பதற்குரிய முறையில் நாம் சட்டத்தை வேண்டுமானால் கொண்டுவரலாம். ஆனால் இனிமேலும் ஏற்கனவே வசூலித்ததைப் போல் இனியும் வசூலிப்போம் என்று சொல்லக் கூடிய முறையில் ஒரு மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றுவது நல்லதல்ல. ஆகவே இதை மறுபடியும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Though this amendment appears to be inocuous and this is as a matter of fact just to regularise something that went wrong, in reality I am afraid this is a fairly important amendment, which will harm instead of helping the chemical industry. A number of persons who are depending upon this mixture and chemical products will be in trouble. I shall read one sentence from the Statement of Objects and Reasons—

"The intention of the Government is to restrict the concessional rate of tax under sub-section (3) of the said section 3 only to components which are visually identifiable and capable of being separated by any mechanical process but not by a chemical process".

That means that Government feels that there is distinction between chemical and mechanical process and by this, the objects that willl come within the purview of sales tax will be more, the quantities which the Government will be realising will be more by the application of this method. A number of items may be 'visible'. So there is a possibility that by the present amendment, more items will be losing the present concessions. That will be the net result. It means more number of persons manufacturing a number of items will be hardly hit. I do not know

whether the Chemical Industry had made any representation. From what I know of chemical industry I can say this will hit a number of persons. That is one point.

Another point is, Government have not given us any information as to how much they are going to realise by this. Whether they are going to realise a small amount, or a big amount, whether it is going to be Rs. ½ a crore, or Rs. 20 lakhs or Rs. 5 lakhs or Re. 1 lakh, what is the total amount they are going to realise. If the Hon. Minister will give that information to the House we will be in a better position to judge the proper nature of this taxation and also the necessity for this taxation ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இது ஏதோ புதிய வரி என்று கருதிக் கொண்டு பேசுகிறார்கள். இது புதிய வரி அல்ல. ஏற்கெனவே இருக்கிற வரிக்கு அரசாங்கத்தின் புதிய விளக்கத்துடன் தந்து இருக்கிறோம். உயர்நீதி மன்றத்தை அவமதிக்கிற முறையில் இப்படிச் சட்டத்தை திருத்திக் கொண்டே போகிறீர்கள் என்று அங்கத்தினர் சொல்கிறார்கள். அரசாங்கத்தின் கொள்கையை விளக்கும்போது அதிலே உயர் நீதிமன்றம் குறை சொல்லலாம். அப்படிச் சொல்லும்போது அரசாங்கத்தின் கொள்கையை வலியுறுத்தி அதற்கு புதிய விளக்கத்துடன் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது அரசாங்கத்தின் சாதாரண நிகழ்ச்சிகளில் ஒன்று.

புதிய வருமானம் எவ்வளவு என்று கேட்டார்கள். ஏற்கெனவே வந்து கொண்டு இருக்கும் வருமானம் தான். புதிய வருமானம் ஒன்றும் இல்லை. வனஸ்பதியை கடலை எண்ணெயை வைத்துக் கொண்டு தயார் செய்கிறார்கள். கடலை எண்ணெய்க்குப் பல முறை வரி உண்டு. வனஸ்பதியிலிருந்து கடலை எண்ணெய்யை கெமிகல் பிராஸஸ்ஸால் தான் பிரிக்க முடியும். மெகானிகல் பிராஸஸ்ஸால் பிரிக்க முடியாது. அதற்கு வரிச் சலுகை 2 பைசா வீதம் வேண்டுமென்று கோர்ட்டுக்குப் போனார்கள். கெமிகல் பிராஸஸ்ஸால் பிரித்தாலும் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

அரசாங்கத்தின் நோக்கம் மெகானிகல் பிராஸசில் பிரித்தால் தான் சலுகை. கெமிகல் பிராஸசில் பிரித்தால் சலுகை கொடுப்பது இல்லை. இதுதான் விளக்கப்பட்டு இருக்கிறது. புதிய வரி இல்லை. புதிய வருமானம் அரசாங்கத்திற்கு வரப்போவது இல்லை. ஏற்கெனவே வந்து கொண்டிருந்த வருமானம் இடையில் ஏற்பட்ட தீர்ப்பின் காரணமாக நின்று இருக்கிறது. மீண்டும் வசூலிப்பதற்குத் தான் இந்தத் திருத்தச்சட்டம் கொண்டு வந்து இருக்கிறோம். ஆகவே இந்தத் திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டு, அங்கத்தினர் அவர்களுடைய தீர்மானத்தை வற்புறுத்தக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. விநாயகம்: அமைச்சர் கூறிய விளக்கம் புரிகிறது. ஏன் அரசாங்கம் கெமிகல் பிராசஸிற்குச் சலுகை தரமாட்டோம் என்று சொல்கிறது. அதற்குக் காரணம் என்ன? மெகானிகல் பிராசஸிற்கு மட்டும் சலுகை தரக் காரணம் என்ன? To justify this taxation இதை விளக்க வேண்டும். இரண்டும்

ஒன்றுதானே? மெகானிகல் பிராசஸ் மூலமாகச் செய்தால் செலவு குறைவாக இருக்கிறது. கெமிகல் பிராசஸ் மூலமாக பிரித்தால் செலவு அதிகமாகிறது.

What is the object of the Government in discriminating between these two ? Of course they went to the court but they did not meet with success. What is your object in insisting on it ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மெகானிகல் பிராஸஸில் பிரிப்பது என்பது, உதாரணமாக, ரேடியோ இயந்திர சாதனத்தின் மூலமாகப் பிரிக்கலாம். பிரித்த ரேடியோவை திரும்பவும் ஒன்று சேர்த்து ரேடியோவாக மாற்றலாம். அதே போல் சைக்கிள். இதையும் ஒவ்வொரு பார்ட்டாகப் பிரித்து திரும்பவும் சேர்க்கலாம். இப்படித் தனித்தனியாக வரும்போது சலுகை அளிக்கலாம். கடலை எண்ணெய்க்குப் பலமுனை வரி உண்டு. அதிலிருந்து வனஸ்பதி தயார் செய்யப்படுகிறது. வனஸ்பதியை கெமிகல் பிராசஸ் மூலமாகத்தான் பிரிக்கலாம். அதற்கு வரிச் சலுகைத் தர வேண்டுமானால், கடலை எண்ணெய்க்கும் 2 பைசா வரிச் சலுகை அளித்தாக வேண்டும். ஏற்கனவே இருக்கும் வரிக்கு விளக்கம் செய்து, தெளிவுபடுத்தி இந்தச் சட்டம் கொண்டுவரப் பட்டிருக்கிறது. புதிய வரி இல்லை. ஆகவே இந்த மசோதாவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொதுவிற்பனை வரி நான்காம் திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 22/70) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவு—2

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :—

"பிரிவு 2 சோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே,

I move the following amendments :—

"In the proposed new Explanation, for the words 'or by a mechanical process, and not by a chemical process', *substitute* the words 'or by a mechanical or chemical process'".

தலைவரவர்களே, இந்தத் திருத்தத்தின் மீதான முழுமையான விவாதம் நடைபெற்றுவிட்டது. ஆனாலும் இந்தத் திருத்தத்தை முன் மொழிகிற சந்தர்ப்பம் இப்போது தான் ஏற்பட்டு இருக்கிறது. இந்தத் திருத்தத்தை முன்மொழிந்து இருக்கிறேன். அமைச்சரவர்கள் பதில் அளித்தார்கள், என்றாலும் கூட நான் என் கருத்தைச் சொல்ல

1970 செப்டம்பர் 5] [திரு. க. இராமமூர்த்தி]

ஆசைப்படுகிறேன். இந்த மெகானிகல் பிராசஸ் மூலமாக ஒன்று சேர்ப்பவர்களுக்கும், கெமிகல் பிராசஸ் மூலமாக அடையாளம் கண்டுகொள்ள முடியும் என்ற நிலையில் இருப்பவர்களுக்கும் ஒரு வேறுபாடு காட்டி இருக்கிறது என்ற நிலையை நம்மால் மறுக்க முடியவில்லை. தலைமை நீதி மன்றம் இந்த வாதத்தை ஒப்புக் கொள்ளவில்லை. இதை நாம் மீண்டும் வலியுறுத்தி இருக்கிறோம். இது நல்லதல்ல. உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையிலே இந்த மசோதாவைக் கொண்டுவரத் தேவையில்லை என்று சொல்லி இந்த மசோதாவை கை விடுமாறு அமைச்சரவர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மீண்டும் நான் வலியுறுத்துகிறேன். உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பை அவமதிக்கும் வகையில் இந்த மசோதா கொண்டு வரப்படவில்லை. அரசாங்கத்தின் சட்டத்தின் மீதுதான் உயர் நீதி மன்றம் தீர்ப்பு வழங்கி இருக்கிறது. அரசாங்கத்தின் நோக்கத்தைப் பற்றித்தான் ஒரு திருத்தம் கொடுக்கப்பட்டு விளக்கம் சொல்லி இருக்கிறோம். ஆகவே திருத்தத்தை வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டு, மசோதாவை நிறைவேற்றவேண்டும், என கூறிக்கொள்கிறேன்.

திரு. இராமமூர்த்தி அவர்களின் திருத்தத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு எண் 2, பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு எண் 3, குறுந்தலைப்பு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: "இம்மசோதா நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## 4. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### அவை அலுவல் வரிசையில் மாற்றம்—தொடர்ச்சி

THE HON. THIRU M. KARUNANIDHI : Sir, under rule 21(3) Sir, I move that item (10) be taken up after item (5) under Government Bills.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

6. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(ஏ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 28/70)

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு தலைவரவர்களே, "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) மசோதா உ மசோதாவை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

இந்திய நாட்டில் ஜனநாயகம் சிறந்த முறையில் நடைபெற்று வருகிறது. எல்லா மாநிலங்களில் நடைபெறுவதைவிட நம்முடைய சட்டமன்றம் சீரும் சிறப்புமாகத் தமிழ்நாட்டு மக்களுக்குப் பணி யாற்றி வருகிறது. ஒரு அரசு சிறப்பான முறையில் ஜனநாயகத்தை நிறைவேற்ற வேண்டுமானல் எதிர்க்கட்சி சிறந்த முறையில் செயல் பட வேண்டும் என்ற கருத்தையும் நாம் அனைவரும் ஒப்புக்கொண்டு இருக்கிறோம். அந்த ஜனநாயகத்தைப் பின்பற்றும் வண்ணம் இந்த மசோதாவைக் கொண்டு வருகிறோம்.

இந்த மசோதாவில் எதிர்க்கட்சித் தலைவருக்குத் தனி அந்தஸ்து ஏற்பட வேண்டும், சில வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரவேண்டும், அவர்களுடைய பணி நாட்டு மக்களுக்குச் சிறந்த முறையில் கிடைக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்திலே இந்த மசோதா கொண்டு வரப்பட்டு இருக்கிறது. அதோடு கூட, நம்முடைய துணைத் தலைவர் அவர்களுக்கும், அரசாங்கக் கொறடா அவர்களுக்கும், சில சலுகைகள் இந்த மசோதாவில் உருவாக்கப்பட்டு இருக்கிறது. அதோடு நம்முடைய மன்றத்திலே தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்ற உறுப்பினர்கள் இந்த 5 ஆண்டுகளுக்கு இடையிலே எதிர்பாராத வகையிலே காலமாவார்களானல் மீதி இருக்கும் காலத்திற்கு அவர்களுடைய குடும்பம் அல்லல் படாமல் இருப்பதற்கு வழி செய்ய வேண்டுமென்ற நல்ல கருத்தையும் இந்த மசோதாவிலே நாம் கொண்டு வந்து இருக்கிறோம். நம்முடைய துர்ப்பாக்கியம், இந்த 67 தேர்தலுக்குப் பின்னலே தான் ஏராளமான மரணங்கள் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலே ஏற்பட்டு இருக்கின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலை எதிர் காலத்தில் ஏற்படக் கூடாது என்று நாம் விரும்பினலும், அப்படி ஏற்படுகிற நேரத்திலே சாதாரண குடும்பத்திலிருந்து வருகிற சட்டமன்ற உறுப்பினர்கள் நல்ல வாய்ப்பு வசதிகளைப் பெற வேண்டும். அவர்களுடைய குடும்பம் பரிதாபகரமான நிலையில் விடப்படக்கூடாது என்ற நல்ல எண்ணத் திலே இந்த மசோதா கொண்டு வரப்பட்டு இருக்கிறது.

இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிற மசோதாவிலே ஒரு திருத்தம் கொண்டுவருகிறேன். "இறந்து போன உறுப்பினர் களுக்கு வேறு வருமானம் இருக்கக்கூடாது என்று குறிப்பிட்டு இருக்கிறது. அதிலே உறவினர்களையும் சேர்த்துக் குறிப்பிட்டு இருக்கிறது. இதிலே திருத்தம் செய்ய வேண்டும். உறவினர்கள்

---

உ 2—9—1970-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

1970 செப்டம்பர் 5] [திரு. செ. மாதவன்]

வருமானம் என்பதை எடுத்துவிட வேண்டும். அவருடைய குடும்பத்திற்கு வேறு வருமானம் இல்லாவிட்டால் என்பதையே ஒரு காரணமாக வைத்து உதவி செய்யலாம் என்று முடிவு எடுத்து அதற்கான மசோதாவைக் கொண்டு வருகிறோம்.

"குடும்பம்" என்று குறிப்பிட்டு, அவர்கள் குடும்பத்திலே மைனர் சன்ஸ், அன்மாரிடு டாடர்ஸ், என்பவர்களோடு பெற்றோர்களையும் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்ற ஒரு திருத்தத்தையும் நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். பெற்றோர்களையும் இணைத்து இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டும் என்று அரசாங்கம் விரும்புகிறது.

துணைத் தலைவர் அவர்களுக்கு சம்பளம் என்ற முறையில் ரூ. 500, வீட்டுப்படி ரூ. 100, போக்குவரத்துப்படி ரூ. 100, கார் ஒன்று, அந்தக் காரைப் பொறுத்த அளவுக்கு அதற்கு பழுது பார்க்கக்கூடிய செலவையெல்லாம் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும், ஒரு கார் ஓட்டி, டிரைவர் கொடுக்கிறோம். ஒரு ஸ்டெனோகிராபர் கொடுக்கிறோம், ஒரு கடைநிலை ஊழியர் என்ற முறையில் பியூன் ஒருவர் அவர்களுக்குத் துணையாக இருப்பதற்கு ஒரு வாய்ப்பாக கொடுக்கிறோம்.

அதைப் போலவே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குச் சம்பளம் ரூ. 500, வீட்டுப்படி ரூ. 100, போக்குவரத்துப்படி ரூ. 100, கார் ஒன்று, கார் டிரைவர் ஒன்று, ஸ்டெனோகிராபர் ஒன்று, லாஸ்டு கிரேடு சர்வெண்டு ஒன்று கொடுக்கிறோம்.

அதைப் போலவே அரசாங்கக் கொறடாவுக்கு வீட்டுப்படி ரூ. 100, போக்குவரத்துப்படி ரூ. 100, கார் ஒன்று, டிரைவர் ஒன்று. லாஸ்டு கிரேடு சர்வண்டு ஒன்று கொடுக்கிறோம்.

இவைகளையெல்லாம் எக்சிக்யூடிவ் ஆர்டர் மூலம் போடலாம் என்று அதிகாரம் எடுத்திருக்கிறோம். இப்படிப்பட்ட நல்ல வசதிகளையெல்லாம் எதிர்க்கட்சித் தலைவருக்குச் செய்து கொடுக்கவேண்டும் என்ற மரபோடு இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம். பிற நாடுகளில் இதைவிட அதிகமாகக் கொடுக்கிறார்களா, அல்லது குறைவாகக் கொடுக்கிறார்களா என்ற பிரச்னை அல்லாமல், நமது மாநிலத்தில் முதல் கட்டமாக இதைக் கொண்டு வருவோமேயானால், ஜனநாயகம் நல்ல முறையில் நடப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கும் என்று நம்புகிறோம்.

நாங்களெல்லாம் எதிர்க்கட்சியில் இருந்தபொழுது இதைக் கூடக் கேட்கவில்லை. அதற்கு மாறாக, எதிர்க்கட்சியிலிருப்பவர்களுக்கு விஷயங்களைப் பெறுவதற்கு வாய்ப்புகளைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டோம். அன்றைக்குக் கிடைக்கவில்லை என்பதைக் குற்றச்சாட்டாகச் சொல்ல வரவில்லை. எதிர்க்கட்சிக்குத் தேவை இருக்கிறது என்பதை நாங்கள் உணர்ந்திருக்கிற காரணத்தினால், மக்கள் எங்களை இந்தப் பக்கத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். சொன்னதைச் செய்வதற்கு எங்களுக்கு ஒரு வாய்ப்பு இப்பொழுது கிடைத்திருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதைக் கேட்டார்கள். இது போன்ற வசதிகளையெல்லாம் தேவை என்று கேட்டார்கள். நாங்கள் அதை முழு மனதோடு பாராட்டுகிறோம். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தைரியத்தோடு "சுயநலத்திற்காகக் கேட்கிறேன் என்று நினைக்காதீர்கள், இந்த நாட்டிற்குத் தேவை என்ற நல்லெண்ணத்தோடு, உண்மையான கருத்தோடு கேட்கிறேன்" என்று எடுத்துச் சொன்னார்கள். அதை நாமெல்லோரும் பாராட்ட வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த காலத்தில் எடுத்துச் சொன்னார்கள். பின்னாலே வந்திருக்கக்கூடிய கலைஞர் அவர்கள் அதை நிறைவேற்றித் தரவேண்டும் என்ற ஆர்வத்தோடு சொன்னார்கள். நாமெல்லாம் பாராட்டவேண்டும், வரவேற்க வேண்டும். நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஜனநாயகம் நல்ல முறையில் நடக்கவேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு கேட்டிருக்கிறார்கள். தனக்கு வசதிகள் வேண்டும் என்று சுய நலத்தோடு கேட்கவில்லை. அவர்களுக்கு ஏராளமாக வசதிகள் இருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். அவர்கள் நல்ல வசதி படைத்தவர்கள். சொந்தத்திற்காக, சுயநலத்திற்காகக் கேட்டிருக்க மாட்டார்கள் என்பதில் பூரண நம்பிக்கை உண்டு. பொது நன்மையைக் கருதி அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நல்லெண்ணத்தோடு அவர்கள் கேட்டிருக்கிறார்கள் என்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. அப்பொழுதே நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் பூரணமாக அந்தக் கொள்கையை நம்புகிறோம். இது போன்ற வசதிகளை ஜனநாயகத்தில் எதிர்க்கட்சித் தலைவருக்குக் கொடுக்கவேண்டும் என்பதை வலியுறுத்தினார்கள். வேறு சில எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் நியாயமான கோரிக்கை தான், இது தேவை தான், இதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் வற்புறுத்தினார்கள். அதைத் தான் இன்றைக்கு மசோதா வாகக் கொண்டுவந்திருக்கிறோம்.

வெளியிலே மக்களிடையே ஜனநாயகம் நடைபெறுகின்ற முறையைப்பற்றி எல்லாக் கட்சியினரும் சேர்ந்து விளக்கம் சொல்ல வேண்டும். நம்முடைய நாட்டில் துர்ப்பாக்கியமாக எப்பொழுதுமே ஆளும் கட்சியை எப்படியாவது திட்டுவதற்கு ஏதாவது சில காரணங்கள் கிடைக்காதா என்று எதிர்க்கட்சிகள் ஆராய்வது ஒரு வாடிக்கை. அது போலவே ஆளும் கட்சி எதிர்க்கட்சிகளைக் குறை சொல்வதற்குக் காரணம் தேடுவது என்பது ஒரு வாடிக்கையாக அமைந்திருக்கிறது. ஆகவே, அதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்து விடக்கூடாது என்பதை மட்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எங்கள் கட்சியைப் பொறுத்த மட்டில் நாங்கள் பெற்றுவந்த பாரம்பரியம் பெருந்தன்மை வாய்ந்த பாரம்பரியம். அரசியல் நாகரிகம் நிறைந்த, பண்பட்ட அரசாங்கத்தை நாட்டுக்குத் தர வேண்டும் என்ற கருத்தை எங்களுடைய தலைவர் அண்ணா அவர்கள் தந்திருக்கிறார்கள். ஆகவே, அதை நாங்கள் ஒரு கட்சிப் பிரசாரத் திற்காக, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள், ஆகவே கொடுத்தோம் என்று கட்சிப் பிரசாரத்திற்காக எங்களுடைய

1970 செப்டம்பர் 5] [திரு. செ. மாதவன்]

இயக்கம் ஒருகாலும் பயன்படுத்திக் கொள்ளாது. ஜனநாயக பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கு இதைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை நாம் எடுத்துக்கொள்ளவேண்டும்.

மக்களிடையே சட்டமன்றத்திற்கு இப்பொழுது எவ்வளவு செலவாகிறது, 10 ஆண்டுகளுக்கு முன்னால் எவ்வளவு செலவாயிற்று, ஆகவே அமைச்சர்களும், சட்ட மன்ற உறுப்பினர்களும் மக்கள் பணத்தை விரயமாக்குகிறார்கள் என்று சில இடங்களிலே பேசப்படுகிறது. வெளியிலே இது பத்திரிகைக்காரர்களுக்குச் சுவை மிகுந்த செய்தியாகும். அவர்கள் இந்தச் செய்தியை சுவையோடு கட்டம் கட்டிப் போடுகிறார்கள். 10 ஆண்டுகளுக்கு முன்பு எவ்வளவு செலவாயிற்று, 10 ஆண்டுகளுக்கு பின்னாலே செலவு எவ்வளவு அதிகமாகிவிட்டது என்று கேட்கிறார்கள். சில சமயங்களில் நம்முடைய அங்கத்தினர்கள் கூட சிலர் கேள்வியைக் கேட்கிறார்கள். அமைச்சர்களுக்குப் படி எத்தனை உயர்ந்துவிட்டது என்று கேட்கிறார்கள். அமைச்சர்கள் தங்கள் வீட்டிற்காக பணம் வாங்கவில்லை. அமைச்சர்கள் வெளியே செல்கிறார்கள். அமைச்சர்களுக்காக இவ்வளவு அதிகமாகச் செலவாகிறதே. தி.மு.க. ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலே என்று. இதைப் பிரசாரத்திற்காகப் பயன்படுத்துகிறார்கள். உண்மை என்னவென்றால், அமைச்சர்கள் வரும்பொழுது அவர்களோடு இருக்கக்கூடிய பி.ஏ.-க்கள், மற்ற அரசு ஊழியர்கள் வருகிறார்கள். அவர்களுக்கான படிகள் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்தச் செலவும் இதில் சேருகிறது. அதைப்போல அமைச்சர்கள் இருக்கிற செகரடேரியட்டில் வசதிகள் அதிகப்படுத்தப்படும்பொழுது, அதற்குரிய செலவுகளெல்லாமும் இதில் இணைக்கப்படுகின்றன. அமைச்சர்கள் சுயநலத்திற்காக, சட்டமன்ற உறுப்பினர்கள் சுயநலத்திற்காகப் பணத்தை அதிகமாகச் செலவழித்துவிட்டார்கள். சட்டமன்றத்திற்காக நாளுக்கு நாள் செலவு அதிகமாக உயர்கிறது என்ற ஒரு கருத்து வெளியே பரப்பப்படுவது ஜனநாயகத்திற்குக் குந்தகம் விளைவிக்கும் என்று நான் கருதுகிறேன். எங்களுடைய கருத்து என்னவென்றால், இந்த அரசைப் பொறுத்தவரைக்கும், சட்டமன்றத்திற்காக இன்னும் கொஞ்சம் அதிகமாகச் செலவானாலும் சரி, சிறந்த முறையில் ஜனநாயகம் நடைபெற வேண்டும், சட்ட மன்றத்திற்காக இதெல்லாம் செலவழிக்கப்பட வேண்டும் என்பது தான். ஆளும் கட்சியினராக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியினராக இருந்தாலும் சரி, இந்தச் செலவு கூடுதலாக ஆகின்ற ஒரே காரணத்திற்காக இது ஒரு பெரிய தவிர்க்கப்பட வேண்டிய, ஆட்சேபிக்கப்பட வேண்டிய ஒரு கொள்கை என்று நாம் வெளியே சொல்வது உள்ளே வாதாடுவது நல்லதல்ல என்று நான் கருதுகிறேன். உள்ளே அப்படி வாதாடமாட்டார்கள் என்று நன்றாகத் தெரியும். வெளியேயும் கூட இம்மாதிரி சொல்லக் கூடாது. ஆளும் கட்சியினராக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியினராக இருந்தாலும் சரி, ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காக இதெல்லாம் தேவை என்ற அடிப்படையான கருத்தை வெளியேயும் வலியுறுத்தவேண்டும் என்று நான் மாண்புமிகு அங்கத்தினர்களைக் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இது ஒரு கட்டம், ஜனநாயகம் நல்ல முறையில் நடைபெறுவதற்கு ஒரு கட்டத்திற்கு வந்திருக்கிறோம். இன்னும் கொஞ்சம் வளர்ந்தவுடன் நம்முடைய நாட்டில் ஜனநாயகம் இன்னும் சிறந்த முறையில் நடக்கிறது என்று சொல்லும்படியான நிலை வரவேண்டும். யார் எந்தக்கட்சியில் இருந்தாலும் சரி, யார் ஆளும் கட்சியில் இருந்தாலும் சரி, ஜனநாயகம் நல்ல முறையில் நடைபெறுவதற்கு வாய்ப்பு வசதிகள் ஏற்படுத்தித் தரவேண்டும். இந்த எண்ணத்தின் அடிப்படையில்தான், மிகுந்த பெருந்தன்மையோடு இந்த மசோதாவை தி.மு.க. அரசு இந்த மன்றத்தில் கொண்டுவருகிறது. இந்த மசோதாவை எல்லாக் கட்சியினரும் சேர்ந்து ஆதரித்து, எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு இந்தச் சலுகைகளைக் கொடுப்பதற்கு எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. வாதாடுவார்களோ, இல்லையோ, வாதாடுவார்கள் என்று நம்புகிறேன். நல்ல நோக்கத்தோடு எதிர்க்கட்சித் தலைவருக்கு வாய்ப்பு வசதிகளைத் தருகின்ற இந்த மசோதாவை எல்லோரும் சேர்ந்து முழுமனதாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அமர்கின்றேன்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கிற மசோதா ஒரு நல்ல மசோதா. ஜனநாயகம் சிறந்த ஜனநாயகமாக ஆகவேண்டும். ஜனநாயகத்திற்கு அடிக்கோலாக இருக்கக்கூடிய அத்தனை தலைவர்களும் பணியாற்றக் கூடிய சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், கொறடா அவர்களுக்கும் ஒரு நல்ல மதிப்பைத் தந்து, அவர்கள் ரொம்ப உற்சாகத்தோடு செயல்படுவதற்காக இந்த வசதிகளையெல்லாம் செய்து கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இருப்பினும் கூட, இன்னும் பரவலாக ஜனநாயகம் ஆக்கப்பட வேண்டும்.

நான் கூட ஒரு அமெண்டுமெண்டு கொடுத்திருந்தேன், அதை 'வேக்' என்று தள்ளிவிட்டார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரே கட்சியைச் சார்ந்தவர்கள் அல்ல, பலதரப்பட்ட கட்சியைச் சார்ந்தவர்கள். ஒவ்வொரு சட்டமன்றக் கட்சிக்கும் தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தனிப்பட்ட கொள்கை உடையவர்கள். இப்பொழுது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை மட்டும் எடுத்துக்கொண்டால், அவர் ஒருவரே எல்லா இடங்களுக்கும் சென்று, அபிப்பிராயத்தைக் கூற முடியாது, எல்லா சூழ்நிலையிலும் கூற முடியாது. அதே நேரத்தில் சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் அத்தனை பேர்களும் ஆங்காங்கே சென்று அங்கு இருக்கக்கூடிய காரியங்களைச் செய்வதற்கு, அவர்களுடைய சேவையை ஆதரிக்கவேண்டிய சூழ்நிலையில், ஜனநாயகத்தைப் பரவலாக்கி, எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் இம்மாதிரி வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டிய அளவுக்கு, இவ்வளவு வசதிகள் இல்லாவிட்டாலும், ஓரளவுக்கேனும் செய்துகொடுக்க வேண்டிய அளவுக்கு செய்து கொடுத்தால் நன்றாக இருக்கும். ஆகவே, அதையும் பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

1970 செப்டம்பர் 5]

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த நல்ல மசோதாவைக் கொண்டு வந்ததற்காக இந்த அமைச்சருக்கும், அரசுக்கும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவிக்கிறேன்.

இந்த மசோதா வரவேற்கத்தக்க ஒன்று என்று சொல்லிக் கொள்வதோடு, இந்த மசோதாவை அறிமுகப்படுத்திய வகையில், ஜனநாயகத்தோடு ஒத்து இப்படி செலவிட வேண்டிய அவசியம் பற்றியும் இந்தச் செலவு இன்றியமையாதது என்பதையும் அமைச்சர் அவர்கள் விளக்கிச் சொன்னார்கள். அந்த அளவில் இந்த மசோதா வகைப்படுத்தியிருக்கும் விதம் சிறப்பானதாக இருக்கிறது. ஆனால், இந்த மசோதாவில் என்னுடைய இரண்டொரு அச்சத்தையும் தெரிவிக்கிறேன்.

பொதுவாக, இந்த மசோதா வரவேற்கத்தக்க ஒன்று என்றாலும், இன்றைய தினம் இந்த மன்றத்திலே இல்லாவிட்டாலும், வெளியிலே சொல்லப்படுவது, அமைச்சர்களுக்கு ஆகும் செலவுகள் இவ்வளவு அதிகமாகிப் போய்க்கொண்டிருக்கிறது என்பதுதான். ஜனநாயகம் வளர, சட்டமன்றம் நல்ல முறையில் இயங்க, உறுப்பினர்கள் ஜனநாயகத்தைக் காப்பாற்ற, இவ்வளவு அதிகமான செலவு ஆகிறதே என்று பொது மேடையில் பேசப்பட்டது என்பதை இந்த மன்றமும், நாடும் அறியும். ஒவ்வொருவரும் நாம் செய்தால் நல்லது. சிறந்தது, மற்றவர் செய்தால் அப்படியில்லை என்று எண்ணப்பட்டது. நாங்கள் ஆளும் பொறுப்பில் இருந்த காலத்தில், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு விடுதிகள், செலவுகள் பற்றி அவர்களும் குறை சொன்னார்கள். எதிர்க்கட்சியிலே இருந்த காலத்தில் தேவையான வசதிகள், அடிப்படை உரிமைகள் தரப்படவில்லை என்றார்கள். ஒரு வேளை அதற்காகவேதான் இப்படி இடம் மாறவேண்டிய நிலை வந்ததோ என்று அவர்களுக்கே உரிய முறையில் நகைச் சுவையோடு சொன்னார்கள்.

அதே நேரத்தில், இந்த மசோதாவின் மூலம் எதிர்க்கட்சித் தலைவருடைய அந்தஸ்து குறைக்கப்படுகிறதோ என்று அஞ்சுகிறேன். அதை அரசு உணரவேண்டும். எதிர்க்கட்சித் தலைவரைப் பொறுத்த வரையில், இந்த மன்றமும் அரசும் ஏற்றுக்கொண்ட நிலை. ஒரு "ஷேடோ காபிநெட்" என்று சொல்லும் அளவில் பிரதானமான ஒரு அங்கம் வகிக்கிறார், அமைச்சருடைய அளவில் தகுதி பெற்றவர். இன்றையதினம் எதிர்க்கட்சித் தலைவருடைய அந்தஸ்தை உயர்த்துவதில் நாம் மட்டும் அக்கறை கொண்டிருக்கவில்லை. இந்திய பாராளுமன்றத்திலும் வழிவகைகள் செய்ய வேண்டும் என்று முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அமைச்சருக்குச் சரியான அந்தஸ்து உள்ளவர் எதிர்க்கட்சித் தலைவர் என்கிற கோரிக்கை பாராளுமன்றத்திலும் எழுப்பப்பட்டிருக்கிறது, ஒப்புக் கொள்ளப் படுகின்ற நிலைகளைக் காண்கிறோம். நம்முடைய மாண்புமிகு துணைத் தலைவர் கோபித்துக் கொள்ளக் கூடாது, துணைத் தலைவருடைய அந்தஸ்துக்கு ஒட்டி எதிர்க் கட்சித் தலைவருடைய அந்தஸ்து வைக்கப் படும் நிலைதான் இருக்கிறது, அமைச்சருடைய அந்தஸ்துக்கு உயர்த் தப்படும் நிலை இல்லை. எதிர்க் கட்சித் தலைவர் இன்றைக்கு எங்கள் கட்சியைச் சேர்ந்தவர் இருப்பதால், அது திரு. கருத்திருமன் அவர்

களுக்குச் செய்யப்படும் சலுகைகள் அல்ல, அந்தப் பதவிக்கு அளிக்கப் படும் அந்தஸ்து என்பதை அரசு பரிபூரணமாக உணருவதால், அவருடைய அந்தஸ்தை உயர்த்துவதில் எந்தவிதமான தயக்கமும் இருக்காது என்று நினைக்கிறேன். ஆகவே, அந்த முறையில் அவருக்கு உரிய அந்தஸ்தைக் கொடுப்பதில் சங்கடம் இருக்காது என்று கருதுகிறேன்.

இங்கே எதிர்க்கட்சித் தலைவருக்கு அப்படிப்பட்ட அந்தஸ்தைத் தருவது அவசியம் என்று இந்த நேரத்தில் சொல்லுகிறதோடு, அவர்கள் இன்றைய தினம் எந்தவிதமான சலுகைகளும் இல்லாம லேயே அந்த அந்தஸ்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ப தையும் குறிப்பிட வேண்டும். அவர்கள் நிலை குறைத்து ஒப்பிடும் நிலை உண்டாகுமானால், இருக்கும் நிலையே இருந்தாலே போதும் என்ற நிலைகூட வரலாம். ஆகவே, வெளியிலே இருக்கும் நிலைக்கும் இங்கே இருக்கும் நிலைக்கும் நடுவிலே ஒரு அந்தஸ்து ஜனநாயக நாட்டின் நன்மைக்காக இருக்காது. இந்த எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவி எல்லோருக்கும் வரலாம். ஆகவே, அந்த பதவிக்கு உண்டான அந்தஸ்து காப்பாற்றப்படவேண்டும். அவருடைய அந்தஸ்து அமைச்சருடைய அந்தஸ்துக்கு ஒப்பானதாக இருக்க வேண்டும் என்பதை எங்கள் கட்சியின் சார்பில் வலியுறுத்திச் சொல்லி முடிக்கிறேன்.

DR. H. V. HANDE: Hon. Deputy Speaker, Sir, on behalf of the Swatantra Party we whole-heartedly welcome this Bill. It is high time that many of us and especially the public realise the great difficulty which the Members of the Legislature and the Parliament face in attending to their routine work. If an ordinary Member of the Assembly has to function effectively, he must have a number of facilities.

For instance, he has to collect a lot of data from the various departments to give notice of questions. He has to satisfy himself whether a particular item of information that has been given to him is genuine or not. He has to write to the various departments and get information from them. But unfortunately I am sorry to say that none of the departments co-operates with us. Every department wants to keep information as a State secret. Since I was an Opposition Member in the Legislative Council and now in this Assembly I know the difficulty faced by Members belonging to the Opposition, I know how difficult it is to get information and there is no change in that respect now.

Sir, we have to nurse our constituency. Every day 30 to 40 persons come to us and represent their grievances. We have to examine them and try to redress them by sending letters to the concerned authorities. It takes 20 minutes or half-an-hour to draft and send a letter. With our limited earnings, we have to keep a Personal Assistant or a Stenographer to attend to this work. For instance, I have to pay Rs. 300 for him, out of the earnings in the dispensary. If a person has to discharge his function properly, it is a very expensive affair. If he is not

able to discharge his duty to the public, he may be accused by the people that he is not discharging his function properly. These are the difficulties faced by us.

Of course, our Party has passed a resolution that we should not ask for increased emoluments. Also, there is always a controversy when one party asks for more remuneration as the other party will accuse it by saying that when there are hungry people and people who do not have an income of Rs. 100, why should M.L.As. ask for more emoluments? They want to make political capital out of it. So, we have to grapple with this problem if we have to function properly.

Now, again with regard to the functioning of M.L.As., the departmental persons do not help us with vital information and we have to rush to libraries to gather information. I am not saying that they are not very courteous. The set-up is such that we cannot get the information we require. So, I suggest that we should have more staff to draft Call Attention Notices, Questions, etc.

If an idea is given to us, it will be possible for Members to put the question in the proper form. We can draft it in the proper form. We need not waste the valuable time of the Assembly. Assembly time is precious. I am mentioning the practical difficulty of Members. I feel the Hon. Minister also should know our problem.

What I would request of the Hon. Minister is let us have two wings, one for the ruling party and the other for Opposition. Let us employ half a dozen employees to assist us in drafting call-attention notices and putting questions in proper form. These are small matters but I am putting this before the House, so that our practical difficulties may be made known to Hon. Minister. Suddenly we come and we want a book. That may not be immediately available in the library. We may require information. If we had half a dozen employees to help us, it would be better. It will also indirectly help the department to function more promptly. That is one aspect.

With regard to Hon. Leader of the Opposition, I am very glad he has been given pay to look after himself. I would request the Hon. Minister to give careful consideration to another matter, with regard to Ministers' pay. They had reduced their pay to Rs. 500 per month. Practically speaking is it possible to live with that meagre sum ? It is true during Rajaji's first Ministry, the pay of Minister was only Rs. 500. But the cost of living index at that time was low. If we take 1936 living index as 100, today it is 8 to 10 times more. Rs. 500 in 1936 will now be equal to Rs. 4,500 in 1970. For an ordinary family of husband and wife and two children to keep the metabolic life going at least a minimum of Rs. 350 is required. That is the rock bottom minimum.

Then what about the laundry bill ? Every Member has to come to the House with a clean dhoti and jibba. Terrylene is cheaper but khadar and handloom goods are costlier. I have made calculation and the laundry bill alone comes to Rs. 100 per mensem Replenishment of cloth comes to Rs. 50 per mensem. Then there is education of children. That would come to Rs. 50 at least for a family of two children. Then there are the sundry expenses. So, for a family with a husband and wife and two children, Rs. 650 is the basic requirement for a decent standard of living. The question may come as to whether everyone in this country is getting Rs. 650 per mensem. But they need not maintain the standard of living which a Minister is expected to maintain.

Our Ministers have not grumbled about the present. They had to indent on private resources : Many of them had been previously good lawyers earning sufficiently high. But once they had become Ministers, they cannot practice and go to courts and earn high salaries. So, they will have to fall back on loans. These are the difficulties. So we have got to make them lead a decent standard of life. For that Rs. 650 is the basic minimum that should be provided for. As against this, what is it they are getting ? A meagre sum of Rs. 500. Rs. 50 will go for tax. Net result is they get only Rs. 450 per month. I have made all these calculations, working here in the Chamber, just now. Let us be practical and give them the basic requirement. Whatever income they get should be sufficient for them to look after their needs. Let us provide them with that. With these remarks and also under the hope that the Hon. Chief Minister will also give proper weightage to the request I have made with regard to assistance to be given to Members for proper functioning in the Legislature, I whole-heartedly support this Bill.

திரு. என். வரதராஜன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் சம்பளங்கள் உயர்த்துவது குறித்த மசோதாவின்மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நமது சட்ட அமைச்சர் அவர்கள் இதை அறிமுகப்படுத்துகிற போது, இந்தப் பேரவைக்கு அப்பால் வெளியே சிலவிதமான பிரசாரங்கள் ஏற்படுவதைச் சுட்டிக்காட்டினார்கள். அந்தப் பிரசாரத்தைப்பற்றியும் நம்முடைய அமைச்சர் அவர்கள் சொன்னது சபையின் கவனத்திற்கு உரியது என்று கருதுகிறேன். நம்முடைய அமைச்சர்கள் சம்பளத்தைக் குறைத்துக்கொள்வது என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். எந்த அடிப்படையில் வந்தார்கள் என்பதை அவர்கள் ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டும். கடந்த இருபதாண்டுக் காலமாக நம்முடைய நாட்டில் கசப்பு நிறைந்த அனுபவம் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. அரசாட்சிக்குச் செல்கிறவர்கள், அமைச்சர்களாக இருப்பவர்கள் அமோகமான வசதிகளைப் பெற்றுக் கொள்கிறார்கள் என்ற மனப்பான்மை பொதுமக்களிடம் நிலைத்து விட்டது. அமைச்சர்கள் சம்பளத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று வந்திருக்கிறோம். நான் அதை வரவேற்கிறேன்.

1970 செப்டம்பர் 5] [திரு. என். வரதராஜன்]

காந்திஜிகூட ஒரு காலத்தில் சொன்னார்கள், "பசித்தவனுக்கு முன்னால் கடவுள்கூட ரொட்டி ரூபத்தில் வந்தால்தான் அவன் அதை ஏற்றுக்கொள்வான்" என்று சொன்னார்கள். பெரியார் அவர்கள்கூட ரஷ்ய நாட்டிற்குப் போய்விட்டுவந்து சில கட்டுரைகளை எழுதியிருக்கிறார்கள். ஒரு கொத்தனார் கடுமையாக உழைத்துக்கொண்டிருந்தான். அவனைப் பார்த்து பெரியார், "நீ என்றென்றைக்கும் போல் நீ ஏழையாக இருக்கிறாய்" புதிய சமுதாயத்தை, புரட்சியை ஏற்படுத்திவிட்டோம் என்று சொல்வதெல்லாம் என்ன? என்று கேட்டாராம். "நான் உழைப்பதன் மூலம் சிறுகச் சிறுக முன்னேறுவேன், அதற்கு எனது அரசு உதவி செய்கிறது" என்று நம்பிக்கையாகச் சொன்னானாம். இதை பெரியார் அவர்கள் தம் கைப்பட எழுதி வைத்திருக்கிறார்கள். நம்முடைய மக்கள் நம்மை ஆதரிக்கவும் நேசிக்கவும் தயாராக இருக்கிறார்கள். நம்முடைய நாட்டில் இருக்கக்கூடிய சாதாரண பொதுமக்கள் எந்த நிலையில் தங்களுடைய வாழ்க்கையை நடத்துகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். அவர்கள் ஏழ்மை நிலையைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நம்முடைய சம்பளங்களை அதிகப்படுத்த வேண்டுமென்று கோருகிறோம். இன்றைக்கு ஆண்டிற்கு நாற்பத்தைந்து நாட்களுக்கு சட்டமன்றம் கூடுவதைப் பற்றியோ, அல்லது நாற்பத்தைந்து நாட்களுக்குப் பதிலாக அறுபது நாட்கள் கூடுவதைப்பற்றியோ, அமைச்சர்களுக்கு சம்பளத்தை உயர்த்தித் தருவதைப்பற்றியோ, பொதுமக்களுக்குக் கவலையில்லை. செலவுகள் சீராகச் செய்யப்படுகின்றனவா என்பதைக் குறித்து பொதுமக்கள் சந்தேகப்படுகிறார்கள்.

உதாரணமாக, ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு லாட்ஜை அல்லது ஓட்டலை ஓர் அமைச்சர் திறந்து வைக்கிறார் என்றால் அதற்கு ஏற்படுகின்ற செலவு நியாயமானதல்ல. அமைச்சர்கள் தங்கள் பரிவாரங்களுடன் இப்படிப்பட்ட தேவையற்ற விழாக்களுக்குப் போவது பொது மக்களின் வரிப்பணம் பாழ்ப்படுத்தப்படுவதாகும். அப்படிப்பட்ட விழாக்களுக்குப் போவதை தவிர்க்க வேண்டும். இவ்வளவு சிறிய காரியத்திற்கு அமைச்சர்கள் பெரிய பரிவாரத்துடன் வரவேண்டுமா என்றுதான் மக்கள் கேட்பார்கள். இனி வருங்காலத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைவர்கள், அமைச்சர்கள் சம்பள உயர்வுக்கு சட்ட திருத்த மசோதா கொண்டுவரும்போது நமது மக்களின்—சாதாரண மக்களின்—வாழ்க்கை நிலையை மனதில் கொண்டு, கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்று கொண்டு வந்திருக்கிற இந்த மசோதாவை நான் எதிர்க்கவில்லை. நான் சொன்ன கருத்தை நினைவில் கொண்டு இதைச் செயலாற்ற வேண்டுமென்று வற்புறுத்தி முடித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. பூவராகன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவைக் கொண்டுவந்து அமைச்சர் அவர்கள் சொல்லிய கருத்துக்களை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதோடு இந்தச் சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, பதவிக்காலம் முடிவதற்குள்ளாக இறந்துவிடுகிறவர்களின் குடும்பத்திற்கு அவருடைய பதவிக்

[திரு. கோ. பூவராகன்] [1970 செப்டம்பர் 5

காலம் முடிய உதவித்தொகை அளிப்பது என்பது வரவேற்கக் கூடிய ஒன்ருகும். இந்த உதவித்தொகை அளிப்பதற்கு அவரது குடும்பத்திற்கு வருமான வரம்பு கட்டுவது சரியல்ல. எந்தவிதமான வருமான வரம்பும் இல்லாமல் அந்தச் சலுகையை இந்த அரசு அளிக்க அரசாங்கமே அந்த விதித் திருத்தத்தைக் கொண்டுவர முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, இந்த மசோதாவை எந்த நல்ல நோக்கத்தோடு திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டுவந்திருக்கிறது என்பது சட்டமன்ற உறுப்பினர் களாகிய நாம் அத்தனை பேரும் அறிவோம். திராவிட முன்னேற்றக் கழகம் ஜனநாயகத்தின் மீது எவ்வளவு அக்கறை காட்டுகிறது என்பதை உணர்த்துவதோடு பொதுவாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிற அரசியல் கட்சிகள் எவ்வளவு ஒன்றெடொன்று கொள்கை வித்தியாசம் கொண்டிருப்பினும் அந்த அந்த கட்சிக்குரிய மரியாதையையும் அந்தஸ்தையும் அளித்தால்தான் ஜனநாயக வண்டி சரியாக உருளும் என்கிற கொள்கையை ஒப்புக்கொள்கிற வகையில் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது.

நண்பர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசுகின்ற நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவருக்கு அந்தஸ்தை உயர்த்துகின்ற வகையில் அமைச்சர் அவர்களுடைய நிலைக்கு உயர்த்த ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொன்னர்கள். அடுத்த வரியில் அந்தஸ்து அங்கங்கு எப்படி எப்படி யார் யாரால் உணர்த்திக்கொள்ளப்படுகிறது என்பதையும் சுட்டிக்காட்டினர்கள். இந்த மசோதாவின் நோக்கம் இதுவரையிலும் இல்லாத அந்தஸ்தை இப்போது தேடித் தருகிறது என்பதை நிச்சயமாக யாரும் மறுக்கமாட்டார்கள். எதிர்தரப்பு வரிசையில் நாங்கள் அமர்ந்திருந்த நேரத்தில் இதைப் பலமுறை எடுத்துச் சொன்னேம்.

சபாநாயகர் அவர்களைப் பொறுத்தவரையிலும் எடுத்துச் சொன்னேம். சபாநாயகராக இருக்கக்கூடியவர்கள் கட்சிச் சார் பற்று தேர்தலில் நிற்பார்களேயாளுல் அவர்களுக்கு எதிராக எந்தக் கட்சியும் வேட்பாளரை நிறுத்தக் கூடாது என்ற கொள்கையை ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறேம் என்று சொன்னேம். அந்த ஐந்தாண்டுகளில் பலதடவை எடுத்துச் சொல்லியும் அப்போது இருந்த அரசு அவற்றை ஏற்றுக்கொள்ளவில்லை. ஜனநாயகத்திற்கு மதிப்பு அளிக்கவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிற்பாடுதான் அந்த ஜனநாயக கோட்பாடுகளை மதித்து இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. எதிர்க் கட்சித் தலைவர் இந்தச் சபையில் மட்டும் அல்ல, மேல்சபையில் உள்ளவருக்கும் இந்த அந்தஸ்து தரப்படுகிறது.

அதோடு இந்த அவைக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிற உறுப்பினர் தம் பதவிக்காலம் முடிவதற்குள் இறந்துவிட்டால் அவரது பதவிக் காலம் முழுவதற்கும் அவருடைய குடும்பத்திற்கு உதவி அளிப்பது

1970 செப்டம்பர் 5] [திரு. இராம. அரங்கண்ணல்]

என்பதும் இந்த மசோதாவின் முக்கியமான நோக்கமாகும். அவைக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிற அத்தனை உறுப்பினர்களும் நல்ல வசதியுடனே கூடியவர்களாகத்தான் இருப்பார்கள் என்பது இல்லை.

ஒரு காலத்தில் பெரியார் சொன்னார்கள். "ஜஸ்டிஸ் கட்சி ஆண்டுகொண்டிருந்தது. பின்னர் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தது. ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் மிகவும் வசதி படைத்தவர்களாக இருந்த காரணத்தினால் தங்கள் சொந்த செல்வத்தைக் கொண்டு நல்லமுறையில் வாழ்க்கையை நடத்தி, அரசு நிர்வாகத்தைச் செம்மை யாக நடத்தினார்கள். அவர்கள் பணக்காரர்களாகவே இருந்த காரணத்தினால் தவறான வழிகளில் போகாதிருந்தார்கள். ஆனால் காங்கிரஸ்காரர்களில் பெரும்பாலானவர்கள் ஏழைகளாக இருப் பதால் பதவிக்கு வந்தவுடனேயே சொந்த லாபத்தை பெருக்கிக் கொள்ள முயல்கிறார்கள். இந்த காங்கிரஸ் மந்திரிகளுக்குப் பதிலாக ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகளே இருக்கலாம்." என்று சொன்னார். அது எங்களுக்கு ஏற்ற கருத்து அல்ல. நாங்கள் அதை ஒத்துக்கொள்ள வில்லை. ஜமீன்தார்களும், சீமான்களும்தான் ஆட்சிக்கு வர வேண்டும். ஏழைகள் வந்தால் லஞ்சம் வாங்கும் நிலை ஏற்படும் என்கிற கருத்து தவறானதாகும். ஏழைகளே பெரும்பாலுமாக இருக்கிற நம்நாட்டில் ஏழைகள் ஆட்சிப்பொறுப்பை ஏற்கிறபோது தான் ஏழைகளின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முடியும். இவர்கள் தவறாக நடந்துகொள்வார்கள் என்பது சரியல்ல என்பதாக பழைய கருத்து தூக்கி எரியப்பட்டு ஜனநாயகத்திற்கு உயிர் ஊட்டப் பட்டது.

இந்தச் சூழ்நிலையில் ஏழைக் குடும்பத்தில் இருந்து சட்டமன்றத் திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் பதவிக்காலம் முடிவதற்குள் இறந்துவிட்டார் என்றால் அவருடைய குடும்பத்திற்கு அந்தப் பதவிக் காலம் முடிய உதவி அளிப்பது மிக உயர்ந்த நோக்கமுடையதாகும். அவருக்குப் பிறகு அந்தக் குடும்பம் கண்கலங்கக்கூடாது—சமுதா யத்தில் வாழ்வு இழந்தவர்களுக்கு வாழ்வு அளிக்கவேண்டும் என்கிற மனிதாபிமான உணர்ச்சியோடு இந்தக் காரியம் செய்யப்பட்டதாகும்.

காங்கிரஸ் அரசு முதியோர் பென்ஷன் கொண்டுவந்தது. நாங் கள் ஆதரித்தோம். விதவைகளுக்கு வசதி செய்யப்படவேண்டும், குழந்தைகளுக்கு வசதி செய்யப்படவேண்டும் என்பன போன்ற மனிதாபிமான உணர்ச்சியின் அடிப்படையில் தான் இன்றைக்கு பதவிக்காலத்தில் இறந்துபோகிற சட்டமன்ற உறுப்பினரின் குடும்பத்திற்கு 100 ரூபாய் அவரது பதவிக்காலம் முடிய உதவி அளிப்பது என்கிற கொள்கையாகும்.

கனம் உறுப்பினர் வரதராசன் அவர்கள் பேசிய நேரத்தில் சூசகமாக ஒன்றை எடுத்துச் சொன்னார்கள். ஏழைகளாக இருக்கக் கூடியவர்கள் மந்திரிகளாக இருக்கும்போது, சட்டமன்ற உறுப்பினர் களாக இருக்கும்போது பெறுகிற வசதிகளை வைத்து அவர்களுடைய சொந்த வாழ்க்கையை மதிப்பிடக் கூடாது என்றார். அது முற்றிலும் உண்மையாகும். மந்திரிகள் காரில் வருகிறார்கள். அவர்களுக்கு என்று பல பணியாளர்கள் இருக்கிறார்கள். இதுபோன்ற வசதிகளைப்

[திரு. இராம. அரங்கண்ணல்] [1970 செப்டம்பர் 5

பார்த்து அந்த மந்திரிகளினுடைய சொந்த நிலைமையைக் காண முடியாது. அவர்களுடைய வாழ்வு உயர்ந்துவிட்டது என்றும் சொல்ல முடியாது. புரட்சிக்கு வித்திட்ட ருஷ்யாவில் ரொட்டிக்குப் பஞ்சம் ஏற்பட்டபோது—புரட்சிக்குத் தலைமை வகித்த மாவீரன் லெனின் மற்ற மக்களுக்கு எந்த அளவு ரொட்டி ரேஷன் கொடுக்கப் படுகிறதோ அதே அளவு எனக்குக் கொடுத்தால் போதும் என்றான். அதற்காக எனக்கு பாதுகாப்பு வேண்டாம் என்கவில்லை. மூடியிட்ட கார் வேண்டாம் என்று சொல்லவில்லை.

அமைச்சர் பதவிக்கு வந்தாலும் ஆடம்பர உணர்ச்சியின்றி சிக்கன உணர்வை கடைப்பிடிப்பதற்கு உதாரணமாக இருப்பவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் தாம் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். மக்கள் அறிவார்கள். பதவிக்கு வந்தவுடன் அதன் அடையாளமாகத்தான் தங்கள் சம்பளத்தை 500 ஆகக் குறைத்துக் கொண்டார்கள். வேறு இடங்களில் மற்ற மற்ற கட்சிகள் ஆட்சி புரிகிற மாநிலங்களில்—பெயர் சொல்லக் கூடாது—அமைச்சரவைக்கு ஆகிற செலவுப் பட்டியலை எடுத்து வைத்துக்கொண்டு நம் மாநில அமைச்சரவைச் செலவுப்பட்டியலை எடுத்துப்பார்த்தால் நம்முடையது தான் மிக மிகக் குறைவாக இருக்கும். அந்த அளவுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் அடக்க உணர்ச்சியை, சிக்கன உணர்ச்சியைக் கையாண்டு வருகிறது. இப்படி ஆடம்பரமின்றி பணியாற்றவேண்டுமென்ற கருத்தை திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை வலியுறுத்துகிறது.

இந்த மசோதா சிறந்த மசோதா. எல்லோரும் பாராட்ட வேண்டிய மசோதா. என்னுடைய கட்சி அரசு இதைக் கொண்டு வந்ததற்காக நான் மிகமிகப் பெருமைப்படுகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் இந்த இந்த வசதிகள் எல்லாம் வேண்டுமென்று எங்களைக் கேட்டு, நாங்கள் கொடுத்ததாக எந்தச் சூழ்நிலையிலும் வெளியில் பேசுகின்ற நிலை வராது. நிச்சயமாகச் சொல்லமாட்டோம். சர்க்கார் என்பது என்றைக்கும் உருண்டுகொண்டே இருக்கிற சக்கரம். ஆண்டு மாற மாற ஆட்சி மாறக் கூடும். ஆயினும் ஆண்டாண்டு காலத்திற்கு இருக்கப்போகின்ற ஒரு உன்னதமான திருத்தமாகும் இது. நேருக்கு நேர் நண்பர்களாகப் பேசுகிறோம். மேடையிலே ஏறிப் பேசுகின்றபொழுது தமிழே நீ வாழவேண்டும் என்ற அளவுக்கு பேசுகிறோம். ஜனநாயக உணர்வு வெளியிலே பட்டுப்பட்டுப் போய்க்கொண்டிருக்கிற நேரத்திலே எங்களுடைய அரசு, என்னுடைய கட்சி அரசு, இந்த அருமையான மசோதாவைக் கொண்டுவருவதற்காக மகிழ்ச்சியடைந்து நான் பூரணமாக இதை வரவேற்கிறேன்.

THIRU K. VINAYAKAM: Mr. Deputy Speaker, Sir, while commenting upon this Bill now before this House, my impressions of the British Constitution come to my aid. In the case of both the Legislatures and the Parliament we follow rules, precedents and usages followed by the British Mother of Paliaments. The British Cabinet Minister and the Leader of the Opposition are considered to be on a par and that is all we are interested and not in the monetary value which accrues to him out of this Bill.

